REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/ Thinakaran.lk / ThinakaranLK

2024 மார்ச் 27 புதன்கிழமை

# தினகரன்

THINAKARAN 92 1932–2024 ANNIVERSARY

வரு. 92 இல. 75 | Wednesday 27, March, 2024 | 44 பக்கங்கள் | 50/-

## வடக்கு விவசாயிகளின் மின்கட்டணம் குறைப்பு

**விரைவில் அமைச்சரவை பத்திரம்**



வடபகுதி விவசாயிகளின் மின்கட்டணத்தை குறைப்பதற்கான அமைச்சரவை பத்திரமொன்றை சமர்ப்பிக்கவுள்ளதாக விவசாய அமைச்சர்

06

## சட்டம் ஒழுங்கை நிலைநாட்டுவது மனித உரிமை மீறல் அல்ல

**பல்கலைக்கழக விரிவுரையாளர்களுடனான சந்திப்பில் ஜனாதிபதி வலியுறுத்து**



**வன்முறைக்கு அன்று வித்திட்டவர்களிடமிருந்து பாராளுமன்றம் உள்ளிட்ட அரச சொத்துக்களை பாதுகாப்பது மனித உரிமை மீறல் எனச் சிலர் சுட்டிக்காட்ட முயன்றனர்**

போராட்டம் என்ற போர்வையில் வன்முறையை விதைத்தவர்களிடம் இருந்து பாராளுமன்றம், பிரதமர் அலுவலகம், ஜனாதிபதி அலுவலகம் உள்ளிட்ட அரச சொத்துக்களை காப்பாற்றி நாட்டில் சட்டம் ஒழுங்கை நிலைநாட்ட தான் மேற்கொண்ட நடவடிக்கைகளை மனித உரிமை மீறல் என சிலர் சுட்டிக்காட்ட முயன்றனர்.இருந்தபோதும், அந்த நடவடிக்கையை அன்று எடுக்காமல் இருந்திருந்தால் இன்று நாட்டில் பொருளாதார ஸ்திரத்தன்மையை கட்டியெழுப்பியிருக்க முடியாது என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

கடினமான மற்றும் விரும்பத்தகாத யுகத்தின் பின்னர் ஒரு நாடாக முன்னோக்கி செல்லும் பயணத்தில் சட்டம் ஒழுங்கை

06

## 'சரசவிய' திரைப்பட விருது விழா நாளை BMICH இல் கோலாகலம்



தேசிய சினிமாவின் மாபெரும் விழாவான சரசவிய சினிமா விருதுகள் வழங்கும் விழா நாளை (28) மாலை 6.00 மணி முதல் கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

அறுபதாவது ஆண்டை பூர்த்தி செய்துள்ள சரசவிய திரைப்பட சஞ்சிகை 35ஆவது முறையாக இவ்விழாவை நடத்துகிறது. 'லக்ஸ்' அனுசரணை வழங்கும் இந்த விருது வழங்கும் விழாவுக்கு பிரதம அதிதியாக கலாநிதி மாலினி பொன்சேக்கா கலந்து கொள்ளவுள்ளார்.

கொமர்ஷல் வங்கி உத்தியோகபூர்வ வங்கி பங்களிப்பையும், சுயாதீன தொலைக்காட்சி அலைவரிசை உத்தியோகபூர்வ இலத்திரனியல் ஊடக பங்களிப்பையும் இதற்கு வழங்கவுள்ளன.

இந்த ஆண்டு 2019 மற்றும் 2020இல் வெளியான திரைப்படங்களுக்கு விருதுகள் வழங்கப்படும். இதில் இரண்டு ஆண்டுகளில் வெளிவந்த 40

06

# தொழிலாளர்களது குறைந்தபட்ச சம்பளம் 5,000 ரூபாவால் அதிகரிப்பு

**குறைந்தபட்ச நாளாந்த சம்பளத்தை 200 ரூபாவால் அதிகரிக்கவும் திட்டம்**



**தேசிய தொழில் ஆலோசனை சபையின் பரிந்துரைக்கமைய நியமிக்கப்பட்ட குழுவின் பரிந்துரையையடுத்து சட்டத்தில் திருத்தம் செய்ய அமைச்சரவை அனுமதி**

லோரன்ஸ் செல்வநாயகம்

தொழிலாளர்களுக்கான தேசிய குறைந்தபட்ச சம்பளத்தை ஐயாயிரம் ரூபாவால் அதிகரிக்க தேசிய சம்பள சட்டத்தை திருத்துவதற்கு தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்கார முன்வைத்த யோசனைக்கு, அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

தற்போதுள்ள ஆகக் குறைந்தபட்ச சம்பளமான பன்னிரண்டாயிரத்து ஐநூறு ரூபாவை 17,500 ரூபாவாக அதிகரிப்பதற்கு அமைச்சரவையில் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. தேசிய தொழில் ஆலோசனை சபையின் பரிந்துரைக்கு அமைய நியமிக்கப்பட்டுள்ள குழு, இதற்கான பரிந்துரையை முன் வைத்துள்ளது.

சிறு மற்றும் நடுத்தர தொழில் முயற்சியளர்களை பிரதிநிதித்துவப்படுத்தும் தொழிற்சங்கங்கள் மற்றும் தொழில் வழங்குநர் உள்ளிட்ட இரு தரப்பினரும் இந்த குழுவில் இடம் பெறுகின்றனர். இக்குழுவே இச்சம்பள அதிகரிப்புக்கான பரிந்துரையை முன்வைத்துள்ளது.

இதன்படி குறைந்தபட்ச நாளாந்த சம்பளத்தை 500

06

## நாட்டின் பொருளாதார அபிவிருத்திக்கு புலம்பெயர்ந்தோரின் பங்களிப்பு அவசியம்

**சீனாவின் அனுபவங்களை பகிரவும் வேண்டுகோள்**



தொழில்சார் அனுபவத்தைப் பகிர்ந்து, பங்கிட்டு தாய்நாட்டின் தற்போதைய பொருளாதாரப் பயணத்தில் இணைந்து கொள்ளுமாறு புலம்பெயர் சமூகத்திடம் பிரதமர் தினேஷ் குணவர்தன வேண்டுகோள் விடுத்துள்ளார்.

சீனாவில் உள்ள இலங்கை தொழில் வல்லுநர்களுடனான சந்திப்பிலே பிரதமர் இதனைத் தெரிவித்தார். பீஜிங்கில் உள்ள இலங்கைத்

06

## சுற்றுலா பயணிகளை கவரும் விசேட நவீன ரயில் சேவைகள்

**ஏப்ரல் 05 முதல் கொழும்பிலிருந்து பதுளைக்கு**

லோரன்ஸ் செல்வநாயகம்



சுற்றுலா பயணிகளை கவரும் வகையில் கொழும்பு கோட்டையிலிருந்து பதுளை வரைக்கும் விசேட நவீன ரயில் சேவையொன்றை முன்னெடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக போக்குவரத்து மற்றும் ஊடகத்துறை அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார்.

இந்த ரயில் சேவை ஏப்ரல் 05 முதல் நடத்தப்படவுள்ளது. மேலும், நானு ஓயாவிலிருந்து பதுளை வரை சுற்றுலா பயணிகளுக்கான விசேட காட்சி காண்

06

## IMF உடன்படிக்கையை மாற்ற முயன்றால் 02 வாரங்களேனும் அரசை நடத்த முடியாது

**அமைச்சர் பந்துல தெரிவிப்பு**

லோரன்ஸ் செல்வநாயகம்



சர்வதேச நாணய நிதியத்துடன் மேற்கொள்ளப்பட்டுள்ள உடன்படிக்கையை எவராவது மாற்றுவார்களானால், அவர்களால் இரண்டு வாரங்களுக்குக் கூட அரசாங்கத்தை முன்னெடுத்து செல்ல முடியாது என அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்தார்.

தகவல் திணைக்களத்தில் நேற்று இடம்பெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் செய்தியாளர் சந்திப்பிலேயே, அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார். சர்வதேச நாணய நிதியத்துடனான கடன் ஒத்துழைப்பு உடன்படிக்கையை அரசாங்கமே மேற்கொண்டதே தவிர, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அதனை மேற்கொள்ளவில்லை என்றும்

06

## நிலையான வைப்பு, நிலையான கடனுக்கான வட்டிகள் குறைப்பு



மத்திய வங்கி அதன் கொள்கை ரீதியான வட்டி வீதத்தை மேலும் குறைப்பதற்கு தீர்மானித்துள்ளது. மத்திய வங்கியின் நாணய கொள்கை சபை கூடி மேற்படி தீர்மானத்தை மேற்கொண்டுள்ளதாக, மத்திய வங்கியின் உயரதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.


அதற்கிணங்க மத்திய வங்கியின் கொள்கை ரீதியான வட்டி வீதமான நிரந்தர வைப்புக்கான சலுகை வீதம் (SLFR) மற்றும் நிரந்தர கடன் சலுகைக்கான வட்டி வீதம் (SLFR) ஆகியவற்றில் முறையே

06

## கெஹெலிய உட்பட பிரதிவாதிகளின் ஆட்சேபனை மனு நிராகரிப்பு

**ஜூலை 22 இல் வழக்கு விசாரணை**

லோரன்ஸ் செல்வநாயகம்



தரமற்ற மருந்து கொள்வனவு தொடர்பில் தற்போது விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள முன்னாள் அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல்ல உள்ளிட்ட பிரதிவாதிகளுக்கு எதிராக, இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவினால் தொடரப்பட்டுள்ள வழக்கை தொடர்ந்தும் முன்னெடுக்க முடியாதென பிரதிவாதிகளால் முன்வைக்கப்பட்ட ஆட்சேபனையை கொழும்பு மேல்

06

## ரமழான் தொழுகை நேரம்

| திகதி | 25-27 |
| --- | --- |
| ஸஹர் முடிவு | 04.42 |
| ஸுபஹ் | 04.57 |
| சூரிய உதயம் | 06.13 |
| ழுஹர் | 12.18 |
| அஸர் | 03.28 |
| மஹ்ரிப் | 06.21 |
| இஷா | 07.31 |



**03** வெற்றிகரமான கல்வி முறை இல்லாது அபிவிருத்தியை எதிர்பார்க்க முடியாது

கட்டட திறப்பு விழாவில் சாகல

## பெரிய வெள்ளி, ஈஸ்டர் தினங்களில் தேவாலயங்களில் பலத்த பாதுகாப்பு

**பொலிஸ் மாஅதிபர் உரிய நடவடிக்கை**

லோரன்ஸ் செல்வநாயகம்




கிறிஸ்தவ மக்களின் விசேட தினங்களான பெரிய வெள்ளி மற்றும் ஈஸ்டர் ஞாயிறு ஆகிய தினங்களில் நாட்டிலுள்ள அனைத்து கத்தோலிக்க ஆலயங்களிலும் பாதுகாப்பை பலப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளதாக பொலிஸ் மாஅதிபர் தேசபந்து தென்னக்கோன் தெரிவித்துள்ளார்.அதேவேளை அன்றைய தினம்

06

## சொந்த ஊரில் கடமை புரியும் பொலிஸாருக்கு இடமாற்றம்

**ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்க பொலிஸ் மாஅதிபர் பணிப்பு**

லோரன்ஸ் செல்வநாயகம்



பொலிஸார் மற்றும் பொலிஸ் துறை சார்ந்த அதிகாரிகள் தமது சொந்த ஊரில் கடமையில் ஈடுபடுவதை தவிர்க்கும் வகையில், இடமாற்றம் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிகள் முதல் சாதாரண பொலிஸ் உத்தியோகத்தர்கள் வரையிலான பதவி வகிப்போர், அவர்களது சொந்த ஊர் அல்லது

06

## IMF உடனான கடன் மறுசீரமைப்பு

**தேசிய மக்கள் சக்தி அரசின் கீழ் மீளாய்வு செய்யப்படும்**



லோரன்ஸ் செல்வநாயகம்

சர்வதேச நாணய நிதியத்தினுடனான கடன் மறுசீரமைப்பு நடவடிக்கைகள் தமது அரசாங்கத்தின் கீழ் மீளாய்வுக்கு

06

## 88 வகையான பிராணிகளுடன் தாய்லாந்திலிருந்து வந்தவர் கைது

கட்டுநாயக்க நிருபர்



தாய்லாந்திலிருந்து நாட்டுக்குள் கொண்டு வரப்பட்ட 88 வகையான பிராணிகளுடன் பெண் வர்த்தகர் ஒருவர் கட்டுநாயக்க விமான நிலையத்தில்

06

## எழுத்து மூலம் அறிவித்து ஐவரே இதுவரை பதவி விலகியுள்ளனர்

**கோப் குழு பேச்சாளர் அறிவிப்பு**

கோப்(COPE) குழுவிலிருந்து இதுவரை ஐந்து பேர் மாத்திரமே உத்தியோகபூர்வமாக பதவி விலகியுள்ளதாக பாராளுமன்றம் தெரிவித்துள்ளது.

பதவி விலகியுள்ளதாக ஐந்து பேர் மாத்திரமே எழுத்துமூலம்

06

COPE

## புத்தாண்டுக்கு முன்னர் மதுபான விலைகள் குறையும்

லோரன்ஸ் செல்வநாயகம்

தமிழ், சிங்கள புத்தாண்டுக்கு முன்பதாக மதுபானங்களின் விலைகளை குறைப்பதற்கான முயற்சிகளை மேற்கொண்டுள்ளதாக இராஜாங்க அமைச்சர் சாமர சம்பத் தசநாயக்க தெரிவித்துள்ளார். இது தொடர்பில் மேலும் தெரிவித்துள்ள அவர்,

06

தினகரன் விளம்பரம்
0112429367
விற்பனை பிரிவு
0112429444,
0112429378
ஆசிரியபீடம்
editor.tkn@lakehouse.lk

2024 மார்ச் 27 புதன்கிழமை

# தினகரன்
THINAKARAN
තිනකරන්

**தொழுகை நேரம்**

சுபஹ் - 04.57
லுஹர் - 12.18
அஸர் - 03.28
மஃரிப் - 06.21
இஷா - 07.31

**இன்றைய சுபதினம்**

சோபகிருது வருடம் பங்குனி 14

ராகுகாலம் : பகல் : 12.14 - 1.44வரை
சுபநேரம் : மாலை : 4.44 - 6.14வரை

யோகம்: சித்தயோகம்

திதி: சஷ்டி

## உத்தேச தேசிய உயர்கல்வி அபிவிருத்தி ஆணைக்குழு அமைக்கும் பணி துரிதம்

### கே. ஸ்ரீபவன் குழுவின் அவதானிப்புகள் அடங்கிய அறிக்கை அமைச்சுக்கு



பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவுக்குப் பதிலாக தேசிய உயர்கல்வி அபிவிருத்தி ஆணைக்குழுவை அமைப்பதற்கான, முன்னாள் பிரதம நீதியரசர் கே.ஸ்ரீபவன் தலைமையிலான குழுவின் அவதானிப்புகள் அடங்கிய அறிக்கை அமைச்சிடம் நேற்று (26) கையளிக்கப்பட்டதாக உயர்கல்வி இராஜாங்க அமைச்சர் கலாநிதி சுரேன் ராகவன் தெரிவித்தார்.

அது தொடர்பான அறிக்கையை ஆராய்ந்த பின்னர் தேசிய உயர்கல்வி அபிவிருத்தி ஆணைக்குழுவை இவ்வருடத்தில் நிறுவ முடியும் எனவும் இராஜாங்க அமைச்சர் மேலும் குறிப்பிட்டார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று (26) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே உயர்கல்வி இராஜாங்க அமைச்சர் சுரேன் ராகவன் இதனைத் தெரிவித்தார்.

இங்கு மேலும் கருத்துத் தெரிவித்த இராஜாங்க அமைச்சர் சுரேன் ராகவன்,

2021, 2022 ஆம் ஆண்டைப் பொறுத்தவரை, உயர்தரத்தில் சித்தி பெற்ற மாணவர்கள் 17 பல்கலைக்கழகங்களில் பதிவு செய்யப்பட்டுள்ளனர். ஆனால் அந்த வருடங்களில் திட்டமிட்டபடி மாணவரை இணைக்கும் பணி நடக்கவில்லை என தகவல்கள் வெளியாகி வருகின்றன. ஆனால் அந்த தகவல்கள் அனைத்தும் பொய்யானவை என்பதை உறுதிப்படுத்த உரிய ஆவணங்கள் என்னிடம் உள்ளன.

கடந்த காலத்தில் ஏற்பட்ட சில சிக்கல்களினால் சில பல்கலைகழகங்களின் இறுதியாண்டு மாணவர்கள் சரியான நேரத்தில் படிப்பை முடிக்க முடியாமல் இன்னும் பல்கலைகழகங்களில் தங்கி உள்ளனர். விரிவுரைகள் மற்றும் நடைமுறைக் கற்கைகளை நடத்துவதற்குத் தேவையான வகுப்பறை வசதிகள் இல்லாமல் இருக்கின்றன.

ஆனால் இந்த சிக்கல்களை தீர்க்க சில மாற்று வழிகளை நாம் தேர்ந்தெடுத்துள்ளோம். இரத்மலானை பிரதேசத்தில் இருந்து மகாவலிக்கு சொந்தமான கட்டிடமும், களனி பிரதேசத்தில் இருந்து அரசாங்கத்துக்குச் சொந்தமான

06

## தவக்கால சிந்தனை



### நித்திய அன்பிற்கு சான்றுபகர்வோம்

'வெளிப்படையான அன்பின் பரிமாற்றமே' மூவொரு இறைவனின் அதி உன்னதமான விபரிப்பாகும். இதற்கு முன்போ அல்லது என்றுமே மூவொரு இறைவனின் அன்பில் என்றுமே பிரிவினை கிடையாது. அவ்வாறே கடவுளின் நம் மீதான அன்பில் மட்டிலும் கிடையாது.

புனித வாரமானது இயேசுகிறிஸ்துவில் மனிதர் மட்டிலான கடவுளின் நிபந்தனையற்ற அன்பின் வெளிப்பாடானது நாடக வடிவில் வெளிப்படுத்தப்படுகின்றது. இயேசு தமது வாழ்வின் மிகவும் சவால்மிக்க, துன்பம் நிறைந்த சூழ்நிலையில் தமது அன்பினை நம்மோடு பகிர்ந்து கொள்கிறார். தாம் இகழப்பட்டு, துன்புறுத்தப்பட்டு, மரணத்திற்கு உட்படுத்தப் பட்டபோதும் அவர் தமது அன்பு கூர்தலை நிறுத்தவில்லை. காரணம் அந்த அன்பு நித்திய பரிமாற்றமாகும்.

கடவுளின் சாயலிலும் பாவனையிலும் உருவாக்கப்பட்ட மனிதர்களாகிய நாம், அவரது நித்திய பரிமாற்ற அன்பினை வாழவும், பகிரவும் அழைக்கப்பட்டுள்ளோம். இன்றைய நற்செய்தியில் நமக்கு நன்கு பரிச்சயமான அன்பின் வீழ்ச்சியினை இயேசு மட்டிலான யூதாசின் காட்டிக்கொடுப்பினூடாக வாசிக்கின்றோம்.

ஒவ்வொரு காட்டிக்கொடுப்பும் அன்புப் பரிமாற்றத்தின் மீறலாகும். இச்செயலானது இறையன்பு, பிறரன்பினை விடுத்து தன்னலத்திற்கு வளைந்து கொடுப்பதாகும். இது யூதாஸ் காட்டிக் கொடுப்பிற்கு மிகச்சிறந்த உதாரணமாகும். ஆயினும் நாமும் அத்தகைய அன்பினை மீறும் சக்தி வாய்ந்தவர்கள். கடவுளின் ஆவியானவர் தாமே நாம் இன்றும் வாழ்வின் ஒவ்வொரு தருணத்திலும் கடவுளின் நித்திய அன்பிற்கு சான்றுபகர நம்மை உறுதிப்படுத்துவாராக.

அருட்தந்தை நவாஜி...
(திருகோணமலை மறைமாவட்டம்)




### அல்லாஹ்வின் அருள்மிகுந்த மாதம்

'ஓர் இறை நம்பிக்கையாளன் அல்லாஹ்வின் ஏவல்களை ஏற்று நடப்பதற்கும், விலக்கல்களை தவிர்ந்து கொள்வதற்கும், பாவங்கள் மன்னிக்கப்படுவதற்கும், சுவனத்தில் நுழைவதற்கும், அல்லாஹ்வின் அருள் மிகவும் இன்றியமையாததாகும்.

ஒரு தடவை நபி (ஸல்) அவர்கள், 'அல்லாஹ்வின் அருளின்றி யாரும் சுவர்க்கம் நுழைய முடியாது' என்றார்கள். அதற்கு ஸஹாபாக்கள் நீங்களுமா? என்று கேட்க, நபியவர்கள் என்னையும் அல்லாஹ்வின் அருள் சூழ்ந்து கொள்ளவில்லையென்றால் சுவர்க்கம் நுழைய முடியாது' என்று பதிலளித்தார்கள் (ஆதாரம் ஸஹீஹுல் புஹாரி)

அதனால் அல்லாஹ்வின் அருள் எல்லோருக்கும் எல்லா நேரத்திலும் மிக மிக அத்தியவசியமானதாகும்.

'உங்கள் மீது அல்லாஹ்வின் அருளும், கருணையும் இல்லாமல் போயிருந்தால், உங்களில் சிலரைத் தவிர அனைவரும் ஷைத்தானையே பின்பற்றியிருப்பீர்கள்.' என்றும் 'உங்களின் மீது அல்லாஹ்வின் அருளும், கருணையும் இல்லாமல் போயிருந்தால், நீங்கள் நிச்சயம் எப்பொழுதோ பேரிழப்பிற்கு ஆளாகியிருப்பீர்கள்.' என்றும் அல் குர்ஆன் குறிப்பிட்டிருக்கிறது.

ரஹ்மத் என்ற வார்த்தை ரிக்கத் மென்மை, ஷஃபகத்இரக்கம், தஅத்துஃப் கிருபை என்ற பொருள்களைத் தரக்கூடிய சொற்களையும் கொண்டுள்ளன. இவ்வாறான ரஹ்மத்தை ரமழானில் கேட்போருக்கு தருவதாக அல்லாஹ் கூறியுள்ளான். அதனால் அவனது ரஹ்மத்தை பெற்றுக்கொள்வதற்காக, சொந்த பந்தங்களோடு சேர்ந்து வாழ்வதிலும் நற்காரியங்களில் அதிகதிகம் ஈடுபடுவதிலும் அதிகம் கவனம் செலுத்த வேண்டும். அவற்றின் ஊடாக அல்லாஹ்வின் ரஹ்மத்தையும் கருணையையும் பெற்றுக்கொள்ளலாம். இதற்காக இந்த ரமழான் காலப்பகுதியை உச்சளவில் பயன்படுத்திக் கொள்வோம்.

முப்தி எ.எச்.எம் மின்ஹாஜ்
(காஷிபி, மழாஹிரி) நிந்தவூர்

## வெற்றிகரமான கல்வி முறை இல்லாது அபிவிருத்தியை எதிர்பார்க்க முடியாது



வெற்றிகரமான கல்வி முறை இல்லாத நாட்டில் அபிவிருத்தியை எதிர்பார்க்க முடியாதென, ஜனாதிபதியின் தேசிய பாதுகாப்பு தொடர்பான சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதியின் பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க தெரிவித்தார்.

கல்விச் சீர்திருத்தங்களை முன்னெடுத்தாலும், அதற்கேற்ப மனித வளங்களை முகாமைத்துவம் செய்யாவிட்டால், கல்விச் சீர்திருத்தங்கள் பலனளிக்காதெனவும் சாகல ரத்நாயக்க சுட்டிக்காட்டினார்.

மாத்தறை, கொடபொல, இலுக்பிடிய கனிஷ்ட பாடசாலை மாணவர்களுக்காக புதிதாக நிர்மாணிக்கப்பட்ட இரண்டு மாடிக் கட்டடத்தை மாணவர்களிடம் கையளிக்கும் நிகழ்வில் (25) கலந்துகொண்டு உரையாற்றிய போதே இவ்வாறு அவர் குறிப்பிட்டார்.

கொழும்பு றோயல் கல்லூரி பழைய மாணவர் சங்கத்தின் 1981 குழுவின் முழுமையான நிதி உதவியுடனும் 12ஆவது இராணுவப் பொறியியலாளர் சேவைப் படைப்பிரிவின் பங்களிப்புடனும் இப்புதிய கட்டடம் நிர்மாணிக்கப்பட்டுள்ளது.

பாடசாலைக்குச் சென்ற சாகல ரத்நாயக்கவுக்கு மாணவர்களால் அமோக வரவேற்பளிக்கப்பட்டது. மாணவர்களின் கலைத்திறன்களை வெளிப்படுத்தும் பல கலைநிகழ்ச்சிகளும் மேடையேற்றப்பட்டன.

வைபவத்தில் மேலும் உரையாற்றிய சாகல ரத்நாயக்க;

வெற்றிகரமான கல்வி முறை இல்லாத நாடு வெற்றி பெறாது. கல்வித் திட்டங்களை யார் வேண்டுமானாலும் உருவாக்கலாம். ஆனால், அத்திட்டங்களை செயற்படுத்துவதற்கு மனித வளத்தை நிர்வகிக்க வேண்டும். கடந்த காலங்களில், நாட்டின் பொருளாதாரம் வீழ்ச்சியடைந்து, எண்ணெய் மற்றும் எரிவாயுவுக்கு வரிசைகள் ஏற்பட்டன. அந்த நிலையில் நாட்டின் தலைமைப் பொறுப்பை ஏற்ற ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, பொருளாதார நெருக்கடியிலிருந்து நாட்டை மீட்கும் வேலைத் திட்டத்தை நடைமுறைப்படுத்தினார். சர்வதேச நாணய நிதியத்துடன் கலந்துரையாடி பொருளாதார நிலைமையை குறிப்பிடத்தக்க நிலைக்குக் கொண்டு வரப்பாடுபட்டார்.

இதற்கு அப்பாலும் பொருளாதாரத்தில் மாற்றத்தை ஏற்படுத்துவதற்கு புதிய வேலைத் திட்டம் அவசியம். இதற்காக ஜனாதிபதி தற்போது பல சீர்திருத்தங்களை மேற்கொண்டு வருகின்றார். இலங்கை மத்திய வங்கி சுயாதீனமான நிறுவனமாக மாற்றப்பட்டுள்ளது. மத்திய வங்கி நாட்டுக்கும் மக்களுக்கும் பொறுப்புக் கூற வேண்டும். மேலும், ஒவ்வொரு நிறுவனமும் நாட்டுக்கும் மக்களுக்கும் பொறுப்புக் கூற வேண்டும். அதற்குத் தேவையான சட்டங்கள் தற்போது தயாரிக்கப்பட்டுள்ளன. அவ்வாறு செயற்படாத நிறுவனங்களின் தலைவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை மேற்கொள்ள முடியும் என்றார்.

## விமானப்படை, ஆர்தர் சி கிளார்க் நிறுவனத்துக்கிடையில் ஒப்பந்தம்



இலங்கை விமானப்படை மற்றும் ஆர்தர் சி கிளார்க் நிறுவனம் ஆகியன நவீன, விண்வெளி தொழினுட்பம் மற்றும் ட்ரோன் திறன்களில் முன்னேற்றத்திற்கான உத்தி சார் கூட்டுறவை உருவாக்குகிறது.

தொலைநோக்கு நடவடிக்கையாக, தொழில்நுட்ப ஆலோசனை, ஒத்துழைப்பு, பயிற்சிகள் , தரவுப் பகிர்வு, கூட்டு ஆராய்ச்சி மற்றும் மேம்பாடு (R&D) ஒத்துழைப்பு, வளப் பகிர்வு ஆகியவற்றைப் பெறும் நோக்கில் இந்த கூட்டுறவு உருவாக்கப்பட்டுள்ளது.

இதற்கான ஒப்பந்தம் (25) விமானப்படை தலைமையகத்தில் விமானப்படை தளபதி எயார் மார்ஷல் உதேனி ராஜபக்ஷ மற்றும் பொறியாளர்.(டாக்டர்.) சனத் பனவென்னகே, ஆர்தர் சி கிளார்க் நிறுவனத்தின் பணிப்பாளர் நாயகம் மற்றும் பிரதம நிறைவேற்று அதிகாரி ஆகியோருக்கு இடையில் இடம்பெற்றது.

## மத்திய வங்கி சம்பள அதிகரிப்பு; பதவி விலகப் போவதில்லை

### ஆளுநர் நந்தலால் திட்டவட்டம்



**(லோரன்ஸ் செல்வநாயகம்)**

மத்திய வங்கி பணியாளர்களின் சம்பள அதிகரிப்பால் எழுந்துள்ள நெருக்கடிக்கு தாம், ஒரு போதும் பதவி விலகப்போவதில்லை என, ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்க தெரிவித்துள்ளார்.

நேற்றைய தினம் மத்திய வங்கியின் தலைமை அலுவலகத்தில் இடம்பெற்ற செய்தியாளர் மாநாட்டில், ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் மேலும் தெரிவித்த அவர்: எனது நிர்வாகத்தின் கீழ் பணிபுரியும் ஊழியர்களின் சம்பளத்தை அதிகரித்தமை மற்றும் மீள் பரிசீலனை செய்துள்ளமை காரணமாக நான் பதவி விலகப் போவதில்லை.

06

## குடும்ப வன்முறைசெயல் தடுப்பு சட்ட மீளாய்வுக்கு அங்கீகாரம்

சமகாலத் தேவைகளுக்குப் பொருத்தமான வகையில் குடும்ப வன்முறை தடுப்புச் சட்டத்தை மீளாய்வு செய்வதற்கு அமச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

இதுதொடர்பாக நேற்று முன்தினம் (25) நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட தீர்மானம் பின்வருமாறு:

சமகாலத் தேவைகளுக்குப் பொருத்தமான வகையில் 2005 ஆம் ஆண்டின் 34 ஆம் இலக்க குடும்ப வன்முறைச்செயல் தடுப்புச் சட்டத்தைத் திருத்தம் செய்வதற்காக சட்டவரைஞரால் தயாரிக்கப்பட்டுள்ள சட்ட மூலம் அரச வர்த்தமானியில் வெளியிடப்பட்டு பாராளுமன்ற அங்கீகாரத்துக்கு சமர்ப்பிப்பதற்காக 2023.06.12 அன்று இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. ஆனாலும், குறித்த திருத்தங்கள் மூலம் சட்டத்தின் பிரிவுகள் அதிகளவில் திருத்தப்படவுள்ளமையால், பொது மக்களுக்கு இலகுவாகப் புரிந்து கொள்வதற்காக தற்போது வலுவாக்கத்திலுள்ள சட்டத்தை இரத்துச் செய்து, ஏற்புடைய அனைத்துத் திருத்தங்களையும் உட்சேர்த்து இச்சட்டத்தின் தற்போதைய பெயரின் கீழ் புதிய சட்டமொன்றை உருவாக்குவது பொருத்தமானதெனக் கண்டறியப்பட்டுள்ளது.

அதற்கமைய, நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு இயலுமாகும் வகையில் புதிய சட்ட மூலத்தைத் தயாரிக்குமாறு சட்டவரைஞருக்கு ஆலோசனை வழங்குவதற்காக மகளிர், சிறுவர் விவகாரங்கள் மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சராக ஜனாதிபதி சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

## பாவனைக்கு பொருத்தமற்ற 1,210 யோகட் பொதிகள் பறிமுதல்

### ஹொரண PHI அதிகாரிகள் அதிரடி

xமனித பாவனைக்கு பொருத்தமற்ற ஒரு தொகை யோகட்டுகளை பண்டாரகம, ஹெனேகம பகுதியில் சுகாதார பரிசோதகர்கள் கைதுப்பற்றியுள்ளனர். லொறியொன்றில் எடுத்துச் செல்லப்பட்ட போதே இவை கைப்பற்றப்பட்டுள்ளன.

நேற்று (26) மேற்கொள்ளப்பட்ட விசேட நடவடிக்கையின் போது உரிய வெப்பநிலைக்கு கீழ் கொண்டு செல்லப்படாததால் 1,210 யோகட் பொதிகள் கைப்பற்றப்பட்டதாக சுகாதார அதிகாரிகள் தெரிவித்தனர்.

லொறியிலிலிருந்து காலாவதியான 10 யோகட் பொதிகளும் கைப்பற்றப்பட்டுள்ளன.

## தேசிய இளைஞர் சேவை மன்ற பணிப்பாளர் கலந்துரையாடல்



**(ஒலுவில் கிழக்கு தினகரன் நிருபர்)**

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் பணிப்பாளர் நாயகம் பசுந்து குணரட்ன தலைமையிலான குழுவினர், அண்மையில் அட்டாளைச்சேனைக்கு விஜயம் செய்து இளைஞர்களை வலுவூட்டுவது தொடர்பில் கலந்துரையாடினர்.

அட்டாளைச்சேனையில் அமைந்துள்ள ஐக்கிய தேசியக் கட்சியின் பொத்துவில் தொகுதி காரியாலயத்தில் இக்கலந்துரையாடல் இடம்பெற்றது.

இதன் போது,தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் பணிப்பாளர் நாயகம் பசுந்து குணரட்னவின் சேவையைப் பாராட்டி பொன்னாடை போர்த்தி நினைவுச் சின்னமும் வழங்கப்பட்டது.

## வழக்கு கோவையை அழித்த பெண் சட்டத்தரணிக்கு தற்காலிக தடை

### வழக்கு நிறைடையும் வரை அதிரடித் தீர்ப்பு

**(லோரன்ஸ் செல்வநாயகம்)**

நீதிமன்ற அலுவலகத்திலுள்ள வழக்கு கோவையின் பிரதியை பலாத்காரமாக பறித்து அதனை அழித்த பெண் சட்டத்தரணியின் பதவி, தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டு ள்ளது.

இது குறித்த வழக்கின் தீர்ப்பு வரும் வரைக்கும் உச்ச நீதிமன்றம் இத்தடையை விதித்துள்ளது.

சம்பவம் தொடர்பில் சட்டத்தரணிக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டிருந்த குற்றப் பத்திரத்தை பரிசீலனை செய்த உயர் நீதிமன்றம் இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளது.

06

## இணையதளம் ஊடாக அச்சுறுத்தலா? dir.ccid@police.gov.lk ஊடாக அறிவிக்கவும்



இணையத்தளம் மூலம் தனிநபர்களால் மேற்கொளப்படும் பல்வேறு துன்புறுத்தல்கள் மற்றும் அச்சுறுத்தல்களை எதிர்கொள்வோர் பொலிஸ் கணினி குற்றப் புலனாய்வுப் பிரிவின் உதவியை பெற்றுக்கொள்ள முடியுமென பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதி பொலிஸ் மா அதிபர் நிஹால் தல்துவ தெரிவித்துள்ளார்.

dir.ccid@police.gov.lk என்ற மின்னஞ்சல் ஊடாக முறைப்பாடு செய்வதன் மூலம் பொலிஸாரின் உதவியை பெற்றுக்கொள்ள முடியும்.

இவ்வாறான முறைப்பாடுகளை 24 மணி நேரமும் செயல்படும் 109 என்ற சிறுவர் மற்றும் பெண்கள் பணியகத்தின் அவசர அழைப்பு மூலமாகவும் மேற்கொள்ள முடியும்.

முறைப்பாடுகள் தொடர்பில் பொலிஸ் கணினி குற்றப் புலனாய்வுப் பிரிவு விசாரணைகளை மேற்கொள்ளும்.

## மோட்டார் சைக்கிள்கள் மோதி இரு இளைஞர் பலி




பாணந்துறை, பின்வத்த பகுதியில் நேற்று செவ்வாய்க்கிழமை (26) காலை இடம்பெற்ற விபத்தில் இருவர் பலியானதுடன் ஒருவர் படுகாயமடைந்துள்ளதாக பின்வத்த பொலிஸார் தெரிவித்தனர்.

விபத்தில் உயிரிழந்தவர்கள் பாணந்துறை மற்றும் பின்வத்த பிரதேசத்தை சேர்ந்தவர்களென பொலிஸார் தெரிவித்தனர்.

இரு மோட்டார் சைக்கிள்கள் நேருக்கு நேர் மோதியதால், இந்த விபத்து இடம்பெற்றுள்ளது. பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

வெற்றிகரமாக 6ஆவது முறையாகவும் "2024 ஆண்டின் மக்கள் அபிமானம் வென்ற ஃபேஷன் வர்த்தகநாமம்".

SLIM Sri Lanka Institute of Marketing KANTAR

விருது வழங்கும் விழாவில்

Thilakawardhana Textiles

வெற்றிகொண்டது

எங்கள் வெற்றிக்கு உறுதுணையாய் இருந்த வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகள்



SLIM KANTAR PEOPLES AWARDS 2024




Thilakawardhana Textiles

கிரிபத்கொட, நிட்டம்புவ, ஜாஎல, கண்டி

தினகரன்
THINAKARAN
35, டி.ஆர்.விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10
தபால் பெட்டி இலக்கம் : 834
தொலைபேசி இலக்கம் : 2429429, 2429272, 2429279
பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321

சோபகிருது வருடம் பங்குனி மாதம் 14ஆம் நாள் புதன்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1445 ரமழான் பிறை 16

### குறள் தரும் சிந்தனை



பழியஞ்சிப் பாத்தூண் உடைத்தாயின் வாழ்க்கை
வழியெஞ்சல் எஞ்ஞான்றும் இல்

பழிக்கு அஞ்சாமல் சேர்த்த பொருள் கணக்கின்றி இருப்பினும் அதைவிட, பழிக்கு அஞ்சிச் சேர்த்த பொருளைப் பகுத்து உண்ணும் பண்பிலேதான் வாழ்க்கையின் ஒழுக்கமே இருக்கிறது.

# தனியார் துறை ஊழியர்களின் சம்பள அதிகரிப்புக்கு நடவடிக்கை

இலங்கை ஒரு திறந்த பொருளாதாரக் கொள்கையைப் பின்பற்றும் நாடாகும். அதன் பயனாக இந்நாட்டில் அரச துறையைப் போன்று தனியார் துறையும் பலமானதும் விசாலமானதுமான கட்டமைப்பைக் கொண்டிருக்கிறது. இந்நாட்டின் பொருளாதாரத் துறைக்கு பாரிய பங்களிப்பை நல்கும் துறையாகவும் அது விளங்குகிறது. நாட்டின் பொருளாதார மேம்பாட்டுக்கு இத்துறையினர் அளிக்கும் பங்களிப்பு எவ்விதத்திலும் குறைத்து மதிப்பிட முடியாதவையாகும்.

அந்த வகையில் இலங்கை தொழில் படை புள்ளி விபரங்களின் படி, 2022 ஆம் ஆண்டில் 87 இலட்சத்து 61 ஆயிரத்து 803 பேர் பொருளாதார ரீதியில் உழைப்பாளர் படையினராக இருந்தனர். அவர்களில் 42.7 சதவீதமானோர் தனியார் துறையில் பணியாற்றுபவர்களாக உள்ளனர். இது பாரியதொரு தொழிலாளர் படை என்பதில் மாற்றுக்கருத்துக்கு இடமில்லை.

இருந்த போதிலும் அரச துறையில் பணியாற்றும் ஊழியர்களின் நலன்கள் குறித்து அரசாங்கம் விஷேட கவனம் எடுத்துக் கொள்வது போன்று தனியார் துறையினர், தங்களது நலன்களில் கவனம் செலுத்துவதில்லை என்ற குறைபாடு தனியார் துறை ஊழியர்கள் மத்தியில் காணப்படுகிறது. அதாவது அரச ஊழியர்களுக்கு வரவு செலவுத் திட்டங்களின் ஊடாக சம்பள உயர்வு உள்ளிட்ட பல்வேறு சலுகைகளும் நிவாரணங்களும் பெற்றுக் கொடுக்கப்படுவது இதற்கு உதாரணங்களாகத் தெரிவிக்கப்படுகின்றன.

எனினும் கடந்த காலங்களில் தனியார் துறை ஊழியர்களின் சம்பளத்தை அதிகரிக்குமாறு அரசினால் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. அதன்படி சம்பளமும் அதிகரிக்கப்பட்ட சந்தர்ப்பங்களும் உள்ளன.

என்றாலும் தனியார் துறை ஊழியர்களின் சம்பளத்தை அதிகரிப்பது குறித்து இம்முறை விஷேட கவனம் செலுத்தப்பட்டிருக்கின்றது.

இதன் நிமித்தம் தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்கார, சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சியாளர்களையும் தொழிற்சங்கங்களின் பிரதிநிதிகள் உள்ளிட்ட சம்பந்தப்பட்ட பிரதிநிதிகளையும் உள்ளடக்கி தேசிய தொழில் ஆலோசனை சபையொன்றை அமைந்துள்ளார். அந்த ஆலோசனை சபை, தனியார் துறை ஊழியர்களின் சம்பளத்தை அதிகரிப்பது தொடர்பில் விரிவாக ஆராய்ந்து அது தொடர்பிலான சிபாரிசுகளை முன்வைத்துள்ளது.

அந்த சிபாரிசுகளின் அடிப்படையில் ஆகக் குறைந்த நாளாந்த சம்பளத்தை ரூ. 500.00 இலிருந்து ரூ.700.00 ஆக அதிகரிப்பதற்கு ஏற்ப சட்டத்தில் திருத்தம் செய்யும் வகையில் அமைச்சர் மனுஷ நாணயக்கார அமைச்சரவைக்கு சமர்ப்பித்திருந்த யோசனைக்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

அதேநேரம், தனியார் துறை ஊழியர்களின் தற்போதைய ஆகக் குறைந்த மாத சம்பளம் ரூ. 12,500.00 ஆகும். அதனை ரூ. 17,500.00 வாக அதிகரிப்பதற்கு ஏற்ற வகையில் அமைச்சர் மனுஷ நாணயக்கார சமர்ப்பித்திருந்த யோசனைக்கும் அமைச்சரவை அங்கீகாரம் அளித்துள்ளது. அதாவது தனியார் துறை ஊழியர்களின் சம்பளத்தை ரூ 5000.00 வால் அதிகரிப்பதற்கு ஏற்ற வகையில் தேசிய சம்பள சட்டத்தில் திருத்தம் செய்ய அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

அமைச்சரது இந்நடவடிக்கையையும் அமைச்சரவையின் அங்கீகாரத்தையும் தனியார் துறை ஊழியர்கள் பெரிதும் வரவேற்றுப் பாராட்டியுள்ளனர்.

இது காலத்திற்கு அவசியமான நடவடிக்கையாகும். தற்போது நடைமுறையில் இருக்கும் தனியார் துறையினரின் குறைந்த பட்ச சம்பளமானது இற்றைக்கு பல வருடங்களுக்கு முன்னர் அங்கீகரிக்கப்பட்டதாகும். ஆனால் அதன் பின்னர் பொருளாதார ரீதியில் பல மாற்றங்கள் இடம்பெற்றுள்ளன. அவற்றில் 2022 ஆம் ஆண்டின் முற்பகுதியில் நாடு முகம் கொடுத்த பொருளாதார நெருக்கடி குறிப்பிடத்தக்க ஒன்றாகும். அந்நெருக்கடியினால் அரச, தனியார் துறையினர் உள்ளிட்ட அனைத்து தரப்பினரும் பாதிப்புகளுக்கும் தாக்கங்களுக்கும் உள்ளாகினர்.

என்றாலும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நாட்டின் தலைமையை ஏற்றது முதல் பொருளாதாரத்தில் ஏற்பட்டுவரும் முன்னேற்றங்களுக்கு அமைய நிவாரணங்களும் சலுகைகளும் மக்களுக்கு பெற்றுக்கொடுக்கப்படுகின்றன. வறிய மற்றும் குறைந்த வருமானம் பெறுபவர்களுக்கு அசுவெஸ்ம நிவாரணம், அரச ஊழியர்களுக்கு பத்தாயிரம் ரூபா சம்பள உயர்வு என்றபடி பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளன. அத்தோடு நாட்டின் எல்லா மட்ட மக்களும் பயனடையும் வகையில் மின் கட்டணக் குறைப்பு, அத்தியாவசியப் பொருட்கள் மற்றும் பால்மாவின் விலை குறைப்பு, கடந்த மாதம் எரிபொருள் மற்றும் எரிவாயு விலைத்திருத்தம் செய்யப்படாமை அவற்றில் குறிப்பிடத்தக்கவையாகும்.

நாட்டு மக்களின் நலன்களை முன்னிலைப்படுத்தியே இவ்வாறு பல்வேறு நிவாரணத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

அந்தடிப்படையில் தனியார் துறை ஊழியர்களுக்கான ஆகக் குறைந்த சம்பளத்தை ஐயாயிரம் ரூபாவாக அதிகரிப்பதற்கு ஏற்ப சட்டத்தில் திருத்தம் செய்யப்பட உள்ளது. இதன் ஊடாக இந்நாட்டிலுள்ள தனியார் துறை ஊழியர்கள் பெரிதும் நன்மை அடைவர். இதனை உறுதிபடக்கூறலாம்.

editor.tkn@lakehouse.lk

# பிறக்கப் போகின்ற குரோதி புதுவருடம் மக்களுக்கு தரப்போகின்ற பலன்கள்




***'கோரக் குரோதிதனிற் கொள்ளைமிகுங் கள்ளரினாற்***
***பாரிற் சனங்கள் பயனடைவார் கார்மிக்க***
***அற்ப மழைபெய்யு மஃகங் குறையுமே***
***சொற்பவிளை வுண்டெனவே சொல்'***

குரோதி வருடத்தில் எல்லா உலகிலும் மக்கள் எப்பொழுதும் கோபம் போலி எண்ணத்தில் சிந்திப்பவர்களாகவும் அற்ப குணமுடையவர்களாகவும் விளங்குவர். நெல்விளைச்சல் மத்திமமாகவும் வருட மழை வீழ்ச்சி அரைவாசியே மழை பொழியுமாம். மேலும் குரோதி வருஷ ஜாதகத்தின்படி முன்மழை மிகுதி பின்மழை சமம், உணவுப்பொருள் விருத்தி, கமத்தொழில் விருத்தி, கைத்தொழில் விருத்தி, அரச சேவை நிறைவு, கல்வி விருத்தி, சமய முன்னேற்றம், பொருட்கள் விலையேற்றம் உண்டாகலாம்.

**வாக்கிய பஞ்சாங்கத்தின்படி புது வருடம் பிறக்கும் நேரம்:**

மங்களகரமாக குரோதி வருஷம் வாக்கிய பஞ்சாங்கப்படி பங்குனி 31ம் நாள் (13.04.2024) சனிக்கிழமை இரவு 8.15 மணியளவில் குரோதி வருஷம் பிறக்கின்றது. அன்றைய தினம் மாலை 4 மணி15 நிமிடம் முதல் நள்ளிரவு 12.15 வரையிலான காலம் விஷு புண்ணிய காலமாகும் .

**திருக்கணித பஞ்சாங்கத்தின்படி புது வருடம் பிறக்கும் நேரம்:**

குரோதி தமிழ் வருஷ பிறப்பு திருக்கணித பஞ்சாங்கத்தின்படி பங்குனி 31ம் நாள் (13/04/2024) சனிக்கிழமை இரவு 9.04 மணியளவில் குரோதி வருடம் ஆரம்பமாகின்றது. மேலும் அன்றைய தினம் திருக்கணிதத்தின்படி விஷு புண்ணிய காலமாக பங்குனி 31ம் நாள் (13.04.2024) மாலை 5.04 மணி முதல் நள்ளிரவு 1.04 வரை விஷு புண்ணிய காலமாக திருக்கணிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

வாக்கிய, திருக்கணித பஞ்சாங்கத்தின் படி குரோதி வருஷத்தில் தோஷ நட்சத்திரங்களாக மிருகசீரிடம், திருவாதிரை புனர்பூசம் 1ம் 2ம் 3ம் பாதம் சித்திரை, விசாகம் 4ம் பாதம், அனுஷம், கேட்டை, அவிட்டம் இவற்றில் பிறந்தோர் தவறாது மருத்துநீர் தேய்த்து ஸ்நானம் செய்து நல்ல கருமங்களை செய்து சங்கிரம தோஷத்தை நிவர்த்தி செய்து கொள்ளலாம்.

வாக்கிய பஞ்சாங்கத்தின்படி மருத்துநீர் விஷுபுண்ணிய காலத்தில் அதாவது பங்குனி 31ஆம் நாள் (13.04.2024) மாலை 4.15 இல் இருந்து நள்ளிரவு 12.15 வரையான காலத்தில் விஷு புண்ணிய காலமான இந்நேரத்தில் மருத்துநீர் தேய்த்து சிரசில் புன்கிலையும் காலில் ஆலிலையும் வைத்து ஸ்நானம் செய்து தோஷ நிவர்த்தி பெறுவது நன்மையானதாகும்.

திருக்கணித பஞ்சாங்கத்தின்படி விஷு புண்ணிய காலமாக பங்குனி 31ம் நாள் (13.04.2024) மாலை 5.04 முதல் பின் இரவு 1.04 வரையிலான காலம் விஷு புண்ணிய காலமாகும். இப்புண்ணிய காலத்தில் மருத்துநீர் வைத்து தலையில் ஆலிலையும் காலில் இலவம் இலையும் வைத்து ஸ்நானம் செய்வது மிகவும் சிறப்பானதாகும்.

குரோதி வருஷ பிறப்பு ஞாயிற்றுக்கிழமை அதிகாலை துயில் எழுந்து ஸ்நானம் செய்து நித்திய கருமங்களை முடித்து கண்ணாடி தீபம் பூரண கும்பம் முதலான மங்கல பொருட்களை தரிசித்து சூரியனுக்கு பொங்கல் பூஜை வழிபாடுகள் மேற்கொண்டு விருந்தினர்களை உபசரித்து சிரார்த்தம், தர்ப்பணம் செய்ய இருப்போர் அதனையும் நிறைவேற்றி, உறவினர் நண்பர்களுடன் முன்போல் போஜனம் மேற்கொண்டு சுகந்த சந்தன புஷ்பாதிகளை அணிந்து புது வருடத்தில் செயற்படுத்தக்கூடிய நற்கருமங்களை சிந்தித்து மங்களகரமாக வாழ்வோமாக.

அத்துடன் ஸ்நானம் செய்ததன் பின்னர் இஷ்ட தெய்வங்களை வழிபட்டு முதியோர் பெரியோர்களிடம் ஆசி பெற்று எள்ளு அன்னம், நெல்லிக்காய் துவயல் முதலியவற்றுடன் அறுசுவை பதார்த்தங்களையும் போஜனம் செய்வது சிறப்பானதாகும்.

வாக்கிய பஞ்சாங்கத்தின்படி குரோதி வருடப்பிறப்பு புத்தாடை நிறமாக கபிலம், பட்டு போன்ற வெண்மையான பட்டாடை அல்லது வெள்ளை கரை கொண்ட புதிய பட்டாடை அணிவது சிறப்பானதாகும்.

திருக்கணித பஞ்சாங்கத்தின்படி குரோதி வருஷ பிறப்பு புத்தாடையாக கருநீல நிற பட்டு அல்லது நீல கரை வைத்த புது வஸ்திரம் அணிவது சிறப்பானதாகும்.

வாக்கிய பஞ்சாங்கத்தின்படி புத்தாடை ஆபரணமாக நீலக்கல் அல்லது வைரம் போன்ற ஆபரணம் அணிந்து கொள்வது சிறப்பானதாகும். அதேவேளையில் திருக்கணித பஞ்சாங்கத்தின்படி புதிய ஆபரணமாக இந்திர நீலம் பதிக்கப்பட்ட ஆபரணங்களை அணிவது சிறப்பானதாகும்.

**புதுவருஷ கைவிஷேட புது நேரங்கள்**

குரோதி வருஷ கைவிஷேட நேரங்களாக வாக்கிய பஞ்சாங்கத்தின் படி சித்திரை முதல் நாள் (14/04/2024) ஞாயிற்றுக்கிழமை பகல் 7.57 ல் இருந்து 9.56 வரையிலும் அதே நாள் 9.59 ல் இருந்து 12.01 வரையிலான நேரமும் அதே நாள் ஞாயிற்றுக்கிழமை பகல் மாலை 6.17 ல் இருந்து 8.17 வரையிலான காலமும் மறுநாள் சித்திரை இரண்டாம் நாள் திங்கட்கிழமை பகல் 9.08 ல் இருந்து 9.51 வரையிலான நேரமும் அதே நாள் திங்கட்கிழமை பகல் 9.55ல் இருந்து 10.30 வரையிலான காலமும் கை விஷேடத்திற்குரிய சுப நேரமாக குறிப்பிடப்பட்டுள்ளது.

குரோதி வருஷம் திருக்கணித பஞ்சாங்கத்தின்படி கைவிஷேட நேரங்களாக சித்திரை 1ம் நாள் ஞாயிற்றுக்கிழமை பகல் 10.00 மணியில் இருந்து 11.15 வரையிலான நேரமும் அதேநாள் மாலை 6.30 இல் இருந்து 7.45 வரையிலான நேரமும் சித்திரை 2ம் நாள் திங்கட்கிழமை அதாவது (15.04.2024 )காலை 6.00 ல் இருந்து 7.25 வரையிலான நேரமும் அதே நாள் திங்கட்கிழமை பகல் 9.35 இல் இருந்து 10.35 வரையிலான நேரம் கைவிஷேட நேரமாக குறிப்பிடப்பட்டுள்ளது.

குரோதி வருஷம் வியாபாரம் செய்தல் புதுக்கணக்கு பதிதல் வாக்கிய பஞ்சாங்கத்தின் படி சித்திரை 2ம் நாள் (15.04.2024) திங்கட்கிழமை பகல் 9.08 ல் இருந்து 9.51 வரையிலான நேரமும் அதே நாள் திங்கட்கிழமை பகல் 9.55 இல் இருந்து 10.30 வரையிலான நேரமும் சித்திரை 05 அதாவது (18.04.2024 )வியாழக்கிழமை பகல் 10.49 இல் இருந்து 11.50 வரையிலான நேரம் வியாபாரம் செய்வதற்கும் புதுக்கணக்கு பதிவதற்கும் சிறப்பானதாகும்.

திருக்கணித பஞ்சாங்கத்தின் படி குரோதி வருஷப்பிறப்பின் வியாபாரம் புது கணக்குப்பதிதல் சித்திரை 2ம் நாள் (15.04.2024) திங்கட்கிழமை பகல் 10.00 ல் இருந்து 11.30 வரையிலான காலமும் சித்திரை 20ம் நாள் (03.05.2024) வெள்ளிக்கிழமை காலை 9.00 இல் இருந்து 10.15 வரையிலான காலமும் சித்திரை 23 (05.05.2024) திங்கட்கிழமை காலை 9.30 இல் இருந்து 10. 40 வரையிலான காலமும் திருக்கணித பஞ்சாங்கத்தின்படி வியாபாரம் புதுக்கணக்கு பதிவதற்கான சுப நேரங்களாக குறிப்பிடப்பட்டுள்ளது.

**வாக்கிய பஞ்சாங்கத்தின் படி கிரக சஞ்சாரம்:**

குருசார பலன் குரு வருஷதியாக சித்திரை மாதம் 17ம் திகதி (30.04.2024) வரை மேஷ ராசியில் சஞ்சாரம் செய்யும் மழையும் விளையும் அகமலிவும் ஜனங்களுக்கு சுகமும் பயிர்கள் சிரமப்பட்டு விருத்தி ஆதலும் ஏற்படும். சித்திரை 18 (01.05.2024)முதல் வருடாந்தம் வரை அதாவது வருடம் முழுவதும் ரிஷப ராசியில் குரு பகவான் சஞ்சாரம் செய்வதால் நன்மழை, அகவிலை சமம், பசுக்கள், சிசுக்கள், கர்பஸ்தரிகளுக்கு பாதிப்பும் ஏற்படலாம். சனிசார பலன் சனி வருடம் முழுவதும் கும்பராசியில் சஞ்சரிப்பதால் அல்ப மழை, பயிர்க்கேடு, அகவிலை ஏற்றம், அரசர் புலவர்களுக்கு கஷ்டங்கள் ஏற்படலாம். ராகு கேது சார பலன் வருடம் முழுவதும் மீனராசியில் வருடம் முழுவதும் ராகுவும் கன்னி ராசியில் கேதுவும் நிற்பதால் நன்மழையும் பயிர் செழிப்பும் ஏற்படும்.

வாக்கிய பஞ்சாங்கத்தின்படி முகூர்த்த விஞ்ஞாபனம் சித்திரை 23ம் நாள் (06.05.2024)முதல் ஆனி 22ம் நாள் (06.07.2024) வரையும் பங்குனி 08ம் நாள் முதல் பங்குனி 19 வரையிலான காலத்தில் சுக்கிரன் அஸ்தமனமாக இருப்பதால் அக்காலத்தில் குறித்த சுப முகூர்த்தங்களுக்கு பிரிதி செய்வது நல்லதாகும்.



டொக்டர் ஜோதிட கலாமணி
சிவஸ்ரீ ராமசந்திர குருக்கள் பாபு சர்மா
ஸ்ரீவித்யா ஜோதிடம் கொழும்பு

# இலங்கையில் அவதரித்து மக்களுக்கு அருளாசி வழங்கிய சிவஞானச் சித்தர் யோகர் சுவாமிகள்

**சோமசுந்தரப் புலவரின் பேரன் சிவஞானச்சுடர் கலாநிதி பாரதி இளமுருகனார் எழுதிய நூல்**


சாதாரண மனிதர்களின் இறை வழிபாட்டை விட சித்தர் வழிபாடு தனித்துவமானது; ஆழமானது. அதனை 'சித்தன் போக்கு சிவன் போக்கு' என்று சொல்வதின் பொருள் விளங்கினால் புரியும். சிவனே முதன்மைச் சித்தர் என்று கருதப்படுகின்றான். அவனுக்கு அடுத்த நிலை அகத்தியர். அதன் பின்னர் திருமூலர். அகத்தியர் தொடங்கி பதினெட்டுச் சித்தர்கள் தமிழில் இருந்தார்கள். அவர்களைத் தொடர்ந்து இன்று வரை கண்ணுக்குத் தெரிந்து, தெரியாமல் நூற்றுக்கணக்கான சித்தர்கள் பூமியிலே பிறந்திருக்கிறார்கள்.

இந்த சித்தர்கள் யார்? வாழுங் காலத்தில் தன்னலமற்று வாழ்ந்தவர்கள். இனம், சாதி பேதங்கள் கடந்து உலகில் உள்ள மக்கள் பசிப்பிணி அற்று நல்வாழ்வு வாழ வேண்டும் என்று விரும்புகிறவர்கள். அவர்கள் இறைவழிபாட்டை எளிமையாக்கிக் காட்டியவர்கள்; ஆடம்பரம், அலங்காரம் தேவையற்றது என்றவர்கள். எளிய வழியே ஏகனை காணும் வழி என்பதே அவர்களின் தத்துவம். இதனை திருமூலர்

'யாவர்க்குமாம் இறைவற்கு ஒரு பச்சிலை
யாவர்க்குமாம் பசுவுக்கு ஒரு வாயுறை
யாவர்க்குமாம் உண்ணும்போது ஒரு கைப்பிடி
யாவர்க்குமாம், பிறர்க்கு இன்னுரை தானே'

என்று திருமந்திரத்தில் (252) கூறியுள்ளார்.

'இறைவனை ஒரு பச்சிலை கொண்டு வழிபடுங்கள். பசுவுக்கு ஒரு வாயளவு புல்லை உணவாகக் கொடுங்கள், சாப்பிடும்போது ஒரே ஒரு கைப்பிடி எடுத்து வறியவர்க்கு சாப்பிடக் கொடுங்கள். பிறரிடம் இனிமையான சொற்களைப் பேசுங்கள்' என்கிறார் அவர். இது எல்லோரும் செய்யக் கூடிய எளிய வழிபாடு. இதுதான் சித்தர்களின் வழிபாடும் கூட.




தமிழகத்தில் வாழையடி வாழையாய் சித்தர்கள் மரபு தொடர்ந்து வந்ததைப் போல் ஈழத்திலும் சித்தர் மரபு இருந்தது. அந்த மரபை தொடங்கி வைத்தவர் கடையிற் சுவாமிகள். ஆனால் அவர் இலங்கையைச் சேர்ந்தவரில்லை. பெங்களூரிலே நீதித்துறையில் பணியாற்றி குருவிடம் தீட்சை பெற்று, அவர் ஆணைப்படி யாழ்.நகர் வந்து, யாழ்ப்பாணக் கடைவீதிகளில் கையில் குடையுடன் நடமாடி 'கடையிற் சுவாமிகள்' என போற்றப் பெற்றவர். இவரிடம் தீட்சை பெற்ற செல்லப்பச் சுவாமிகளே யோகர் சாமிகள் என அழைக்கப்படும் சிவயோகர் சுவாமிக்குத் தீட்சை கொடுத்தார்.

அந்த யோகர் சாமியின் வரலாற்றை, அவர் செய்த அற்புதங்களை, அவரின் ஆன்மீகச் சிந்தனைகளை விளக்குவதே, தங்கத்தாத்தா எனப் புகழ்பெற்ற சோமசுந்தரப் புலவரின் பேரன் சிவஞானச்சுடர், பல்வைத்திய கலாநிதி பாரதி இளமுருகனார் எழுதிய 'சிவஞானச்சித்தர்' என்ற நூலாகும்.

பெரிய அளவு புத்தகமாய், அருமையான தாளில் இதுவரைக் காணக்கிடைக்காத புகைப்படங்களுடன் 314 பக்கங்களில் வெளிவந்திருக்கிறது. சித்தர்களின் ஞான பரம்பரை ஒரு அறிமுகம், சித்தர்கள் இயற்றியருளும் அற்புதங்கள், சைவ சித்தாந்தம் ஒரு கண்ணோட்டம், ஈழத்தை அலங்கரித்த சித்தர்கள், கடையிற் சுவாமிகள், யோகர் சுவாமியின் குருவான செல்லப்பா சுவாமிகள், என்று பல தலைப்புகளில் தொடங்கும் நூல் யோகர் சுவாமிகளின் வாழ்க்கை வரலாற்றையும், அவரின் அருளாசியையும், தீர்க்க தரிசனத்தையும் ஆவணமாய், அற்புதமாய் விளக்குகின்றது.

யோகர் சுவாமிகள் வாழ்ந்த காலத்தில் அவரைப் புரிந்து கொண்டவர்கள் சிலரே. அவர் தட்டேந்தி, உண்டியல் ஏந்தி பொருள் நாடி வாழ்ந்தவரல்ல, சிவ சிந்தனையோடு வாழ்ந்தவர். பார்வைக்கு எளியனாய் ஆன்மீக வலிமையோடு சுயநலமற்று பொதுநலம் ஏந்தியவர். அவர் எண்ணத்திலே கருத்திலே பொதிந்தவை, தொலைநோக்கு பார்வையில் எழுந்தவை. இருந்த இடத்தில் இருந்து உணர்ந்து, வரும் மனிதர்களின் தற்காலிக துயரத்தை நீக்கினார். நடத்தப் போவதைச் சொன்னார்.

யோகர் சுவாமியின் அருளாசி பெற்றவர்களின் துயரம் தீர்த்த கதைகள் பல எழுதப்பட்டுள்ளன.

தமிழ்நாட்டின் தமிழ் அறிஞர் அ.ச.ஞானசம்பந்தன், பன்மொழிப் புலவர் தெ.பொ. மீனாட்சி சுந்தரம், சோல்பரி பிரபுவின் புதல்வன் இராம்ஸ்போத்தம், கனடிய தூதுவர் டொக்டர் ஜேம்ஸ் ஜோர்ஜ், அவுஸ்திரேலியாவைச் சேர்ந்த வரி ஓவன் வின்சர் (நரிக்குட்டி சுவாமிகள்), அமெரிக்காவைச் சேர்ந்த றொபேட் ஹான்சன் (இவர் ஹவாய் தீவில் சைவ ஆதினம் நிறுவியவர்) ஆகியோர் சுவாமிகளைச் சந்தித்து ஆசி பெற்றுஅவரின் மகிமை உணர்ந்தவர்களில் சிலர்.

மனிதனை ஆற்றுப்படுத்துவது ஆன்மீகம் மட்டுமல்ல அவனின் எண்ணங்கள் என்பதை, உரத்துச் சொன்னவர் ஈழத்துச் சித்தர் யோகர் சுவாமிகள். மனித பிறப்பிலே சாதியில்லை, யாவரும் சமம் என்ற கருத்தை வலியுறுத்திச் சொன்ன ஒரு சம்பவத்தையும் நூலில் காணலாம்.

யோகர் சுவாமிகள் ஈழத்தில் பிறந்த சித்தர். அவர் சிவத்தை உணர்ந்த ஞானி. அவருக்குச் சிவஞானச் சித்தர் என்ற திருப்பெயர் பொருத்தமானது. நூலின் பெயரும் சிவஞானச் சித்தர். நூலை எழுதியவரின் தாத்தா சோமசுந்தரப் புலவர் எழுதிய 'சிவயோகர் தோத்திரப் பாமாலை' என்ற பெயரில் பாடிய பாடல்களில் அவரின் பெருமை, அற்புதம், அருளாசி ஆகியவற்றை சிறப்பாக வடித்துள்ளார். நேற்றைய தலைமுறை யோகர் சுவாமிகளின் ஆசி, அருள், கருணை மழையில் நனைந்த வரலாற்றைச் சொல்லும் இந்நூல், இன்றைய தலைமுறை கற்க வேண்டிய நூல் மட்டுமல்ல; இது யோகர் சுவாமி பற்றி எழுதப்பட்ட ஆவணம்.

மாத்தளை சோமு

# UNRWA நிதியத்தின் செயற்பாடுகளுக்கு சவூதி வழங்கிய 40 மில்லியன் டொலர்

இரண்டாம் உலக யுத்தம் தொடக்கம் அல்லல்படும் பாலஸ்தீன அகதிகளுக்காக சர்வதேச ரீதியாக நிவாரணங்களை வழங்கும் ஐ. நாவின் நிதியமே *(United Nations Relief and Works Agency for Palestine Refugees)* UNRWA என்றழைக்கப்படும்.




1949 தொடக்கம் செயற்படும் ஐ. நாவின் இவ்வமைப்புக்கான மேற்கத்திய உதவிகள் திட்டமிட்ட அடிப்படையில் சென்ற மாதங்களில் குறைக்கப்பட்டதும், அதனை நிவர்த்தி செய்வதற்காக 40 மில்லியன் அமெரிக்க டொலர்களை அந்நிவாரண நிதியத்திற்காக வழங்குவதாக சவூதி அரேபியா கடந்த புதன் கிழமையன்று அறிவித்துள்ளது.

UNRWA இற்கான உதவிகளை அமெரிக்கா தற்காலிகமாக நிறுத்திக் கொள்வதாக அறிவித்துள்ள நிலையில், அமெரிக்க வெளியுறவுச் செயலரின் மேற்கத்திய நாடுகளுக்கான வருகையுடன் சேர்த்து சவூதி இவ்வறிவிப்பினை விடுத்துள்ளமை குறிப்பிடத்தக்க விடயமாகும்.

மேற்படி 40 மில்லியன் அமெரிக்க டொலர்கள் மூலம், நிர்க்கதிக்குள்ளான பாலஸ்தீன மக்களில் மிகவும் தேவையுடைய சுமார் 450,000 பயனாளிகள் நிவாரணத்தினை பரிபூரணமாகப் பெற வேண்டும் என்ற உறுதிமொழி உடன்படிக்கையொன்றாகக் கைச்சாத்திடப்பட்டுள்ளதும் குறிப்பிடத்தக்கது.



அதேவேளை சர்வதேச அங்கீகாரம் பெற்ற இந்நிதியத்தின் செயற்பாடுகளை சுதந்திரமாக மேற்கொள்ள விடாது சில தீய சக்திகள் முட்டுக்கட்டையாக நிற்பது சர்வதேசத்திற்கே ஒரு இழுக்காகும் எனவும் ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர்.

காஸாவில் பதற்றநிலை ஆரம்பமான நாள் தொடக்கம் இன்றுவரை காஸாவுக்கான நிவாரணங்களாக இருந்தாலும்சரி, இராஜதந்திர நகர்வுகளாக இருந்தாலும் சரி அவற்றை தொய்வின்றி தொடர்ந்தும் சவூதி அரேபியா மேற்கொண்டு வருகின்றது. நேற்றுமுன்தினம் நிவாரணங்கள் சுமந்த 42 ஆவது விமானம் அரீஷ் விமான நிலையத்தினை சென்றடைந்மையும். இதற்குமேலாக பல நிவாரணம் தாங்கிக் கப்பல்கள், பலநூறு கனரக கொள்கலன்கள் என நிவாரண விநியோகங்கள் தொடர்ந்து கொண்டிருப்பதும் பாலஸ்தீனர்களுக்கான சவூதி அரேபியாவின் உதவிகளை எடுத்துக்காட்டுகின்றன.

கலாநிதி அம்ஜத் ராசிக்



# முத்தமிழ் வித்தகர் விபுலாநந்த அடிகளாரின் 132 ஆவது ஜனனதினம் இன்று அனுஷ்டிப்பு

உலகின் முதல் தமிழ்ப் பேராசிரியர் முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலானந்த அடிகளாரின் 132 ஆவது ஜனனதினம் இன்று ஆகும்.

சுவாமி விபுலானந்தர் கிழக்கில் உள்ள காரைதீவில் மார்ச் 27, 1892 இல் அவதரித்தார். அவர் உலகில் 55 ஆண்டுகள் வாழ்ந்து ஜுலை 19, 1947இல் மறைந்தார்.

அவர் இசைத்தமிழறிஞர், பேராசிரியர், துறவி ஆவார். இலக்கியம், சமயம், தத்துவஞானம், அறிவியல், இசை என பல துறைகளில் இயங்கியவர்.

இசைத்தமிழ் ஆய்வு, இலக்கிய ஆய்வு, நாடகத்தமிழ் ஆய்வு, மொழியியல் என ஆய்வுப்பணிகளை விரித்துக் கொண்டவர். யாழ்நூல் என்ற இசைவரலாற்று நூலும், மதங்க சூளாமணி என்ற நாடக ஆய்வு நூலும் இவருடைய முக்கியமான படைப்புகள்.

முதன்மையாக தமிழிசை வரலாற்றில் மூலநூல்களில் ஒன்று என கருதப்படும் யாழ்நூல் இயற்றியவர் அடிகளார் ஆவார்.

ஈசன் உவக்கும் இன்மலர் மூன்று எது? இதோ கவிதையும் அதற்கான விளக்கமும்.

'வெள்ளை நிற மல்லிகையோ,
வேறெந்த மாமலரோ,
வள்ளல் அடியிணைக்கு வாய்த்த மலரெதுவோ?
வெள்ளை நிறப் பூவுமல்ல,
வேறெந்த மலருமல்ல,
உள்ளக் கமலமடி உத்தமனார் வேண்டுவது.

**விளக்கம்:**

வள்ளலாம் இறைவன் திருவடிக்கு ஏற்ற மலரெது? வெள்ளை நிற மல்லிகையா? வேறெந்த பெரிய மலரா? உத்தமனாம் இறைவன் திருவடிக்கு வேண்டிய மலர் வெள்ளை நிறப் பூவுமில்லை வேறெந்த மலருமில்லை. உள்ளமாம் தாமரையே அவன் வேண்டுவது.

காப்பவிழ்ந்த தாமரையோ, கழுநீர் மலர்த்தொடையோ,
மாப்பிள்ளையாய் வந்தவர்க்கு வாய்த்த மலரெதுவோ?
காப்பவிழ்ந்த மலருமல்ல, கழுநீர்த் தொடையுமல்ல,
கூப்பியகைக் காந்தளடி கோமகனார் வேண்டுவது.

**விளக்கம்:**

மலர்ந்த தாமரையா? கழுநீர்ப்பூ மாலையா? பெரியவனாம் இறைவனுக்கு ஏற்ற மலரெது? மலர்ந்த மலருமில்லை. கழுநீர்ப்பூ மாலையும் இல்லை. அன்பினால் வணங்கும் கூப்பிய கைகளாம் காந்தள் மலரே அரசனாம் இறைவன் வேண்டுவது.

பாட்டளிசேர் பொற்கொன்றையோ, பாரிலில்லாக் கற்பகமோ,
வாட்ட முறாதவற்கு வாய்த்த மலரெதுவோ?
பாட்டளிசேர் கொன்றையல்ல, பாரிலில்லாப் பூவுமல்ல,
நாட்டவிழி நெய்தலடி நாயகனார் வேண்டுவது.

**விளக்கம்:**

பாடிக் கொண்டு வரும் வண்டுகள் விரும்பும் பொன்னிறக் கொன்றை மலரா? உலகத்தில் இல்லாமல் தேவர் உலகில் இருக்கும் கற்பக மலரா? வேண்டுதல் வேண்டாமை இல்லாததால் எந்த வித வருத்தமும் இல்லாத இறைவனுக்கு ஏற்ற மலரெது?

பாடும் வண்டுகள் விரும்பும் கொன்றையில்லை. பாரில் இல்லாத பூவுமில்லை. அவன் அருளை எண்ணிக் கண்ணீர் விடும் விழியெனும் நெய்தல் பூ தான் தலைவனாம் இறைவன் வேண்டுவது.

சிந்தித்து இம்மகான்கள் ஆற்றிய மனிதநேயத்துடன்கூடிய சமய சமூக பணிகளுக்கு ஒரு யுகம் போதாது.அத்தகைய புகழுக்குரிய விபுலாநந்த அடிகளாரின் ஜனன தினம் இன்றாகும்.



**விபுலமாமணி**
**வி.ரி. சகாதேவராஜா,**
ஆலோசகர், முன்னாள் தலைவர் - சுவாமி விபுலானந்த பணி ஞாபகார்த்த மன்றம், காரைதீவு

# உத்வேகத்துடன் செயற்படும் அட்டாளைச்சேனை ஜும்ஆ பெரிய பள்ளிவாசல் நம்பிக்கையாளர் சபை

அட்டாளைச்சேனை ஜும்ஆ பெரிய பள்ளிவாசல் நம்பிக்கையாளர் சபைத் தெரிவு அண்மையில் இடம்பெற்றது. இந்நம்பிக்கையாளர் சபையில் பல துறைசார்ந்த முக்கியஸ்தர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளதாக பிரதேச மக்கள் தெரிவிக்கின்றனர்.

புதிய நம்பிக்கையாளர் சபை தென்கிழக்கு பல்கலைக்கழகத்தின் சிரேஷ்ட விரிவுரையாளர் ஏ.எல்.ஹனீஸை தலைவராகக் கொண்டு இயங்கி வருகின்றது. இப்புதிய நிருவாக சபையினர் பல்வேறு வேலைத் திட்டங்களை மக்கள் நலனை மையப்படுத்தி செயற்படுத்தும் பொருட்டு, அட்டாளைச்சேனை பிரதேச செயலகப் பிரிவின் கீழுள்ள பாலமுனை, அட்டாளைச்சேனை, ஒலுவில், ஆலம்குளம், சம்புநகர் உள்ளிட்ட பிரதேசங்களில் உள்ள பள்ளிவாசல்கள் நம்பிக்கையாளர் சபையினரை உள்ளடக்கி அவர்களது கருத்துக்களை கேட்டறிந்து வருகின்றனர்.

இந்நிருவாக சபையில் அங்கம் வகிக்கும் பிரதிநிதிகள் பல்வேறு துறைகளில் இருந்தும் தெரிவு செய்யப்பட்டுள்ளமையினால் சிறந்த சேவையினை இவர்களால் வழங்க முடிகிறது. ஆளுமையும் செயற்றிறன் மிக்கவர்களும் இந்நம்பிக்கையாளர் சபையில் உள்ளமையினால் மக்களுக்கு சிறந்த சேவைகளையும் பொது நலன் சார் செயற்பாடுகளையும் முன்கொண்டு செல்ல முடிகின்றது.





இதற்கமைவாக, அட்டாளைச்சேனை அனைத்துப் பள்ளிவாசல்கள் சம்மேளத்தின் பிரதிநிதிகளுடனான விஷேட கலந்துரையாடலொன்று அட்டாளைச்சேனை கலாசார மண்டபத்தில் இடம்பெற்றது. இதில் தென்கிழக்கு பல்கலைக்கழகத்தின் சிரேஷ்ட கணனி விஞ்ஞான விரிவுரையாளரும், அட்டாளைச்சேனை அனைத்து பள்ளிவாசல்கள் சம்மேளனத்தின் தலைவருமான ஏ.எல்.ஹனீஸ் உரையாற்றும்போது, "தற்போதுள்ளசூழ்நிலையில்நம்நாட்டில்சிறந்த வக்பு சபை உருவாக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் விரைவானதும் நீதியானதுமான தீர்வுகள் வழங்கப்பட்டு வருகின்றன. இந் நடைமுறையினை உருவாக்கிய கலாசார அலுவல்கள் அமைச்சர் விதுர விக்ரமநாயக்கவுக்கு நன்றியினைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

தற்போதுள்ள வக்பு சபையில் சிறந்த சட்ட வல்லுநர்கள், கல்வியியலாளர்கள், உலமாக்கள், புத்திஜீவிகள், நிருவாகத் திறன் மிக்கோர் இச்சபையில் அங்கம் வகிக்கின்றனர். நேரடியாக இச்சபையினை அணுகி எந்த மொழியிலும் தமது கோரிக்கையினை முன்வைக்கின்றபோது உடனடித் தீர்வு பெற்றுக் கொடுக்கப்பட்டு வருகின்றது. இச்சந்தர்ப்பத்தினைப் பயன்படுத்தி பள்ளிவாசல்கள் மத்ரஷாக்கள் போன்றவற்றில் காணப்படும் பிரச்சினைகளை தீர்த்துக் கொள்ள அனைவரும் முயற்சிக்க வேண்டும்" என்றார்.

**எம்.ஏ.றமீஸ்...**
அட்டாளைச்சேனை தினகரன் நிருபர்

# தமிழ் - சிங்கள இலக்கியப் பரிவர்த்தனை ஊடாகவும் இன ஐக்கியம் பேண முடியும்

படைப்பிலக்கியவாதிகளினதும் ஊடகவியலாளர்களினதும் கலைஞர்களினதும் பிரதான கடமை குறித்து தீவிரமாக சிந்தித்து செயலாற்றவேண்டிய காலகட்டத்தில் நாம் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம்.

இலங்கையில் சில அரசியல்வாதிகளும், பேரினவாத சிந்தனை கொண்டோரும் எவ்விதம் செயற்பட்டபோதிலும், மேலே குறிப்பிட்ட மூன்றுபிரிவினரும் இனநல்லுறவு, மதநல்லிணக்கம், இனமதமொழி வேறுபாடற்ற சமத்துவம், மனிதநேயம் என்பன பற்றி அக்கறையுடன் கலந்துரையாட வேண்டியது அவசியம்.



ஞானம் ஆசிரியர்
தி. ஞானசேகரன்



கலாமணி
பரணீதரன்



மகுடம் ஆசிரியர்
மைக்கல் கொலின்

தேசிய இனப்பிரச்சினைக்கு மூலகாரணமாக இருப்பது மொழி மற்றும் இனம்சார்ந்த விவகாரங்கள்தான். ஆனால், மனிதநேயம் அனைவருக்கும் பொதுவானது.

அந்த வகையில் படைப்பாளிகளும் (Writers) ஊடகவியலாளர்களும் (Journalists) கலைஞர்களும் (Artists) மக்களிடம் உருவாகும் இனமுறுகல் உபாதைகளுக்கு சிகிச்சை அளிக்கும் தொண்டர்களாக வேண்டும். அவர்கள தமது படைப்புகளின் ஊடாக நஞ்சை விதைத்தால் அந்த நஞ்சு இறுதியில் அவர்களையே அழித்துவிடும்.

ஒரு இனத்தின் தனித்துவம், அடையாளம், மொழி, மற்றும் கலாசாரம் என்பன பிற இனத்திற்கு கலை, இலக்கியம் ஊடாகவே தெரியவரும். உதாரணமாக ஐரோப்பிய மொழி இலக்கியங்கள், அமெரிக்கா, இங்கிலாந்து, அவுஸ்திரேலியா ஆங்கில மொழி இலக்கியங்கள் மற்றும் ஆபிரிக்க இலக்கியங்கள் ஊடாக அந்தந்த நாட்டின் இனங்களின் அடையாளம், பண்பாடு, சிந்தனை என்பவற்றை எமது தாய்மொழியில் தெரிந்து கொள்வதற்கு மொழிபெயர்ப்புகள் பெரிதும் உதவியிருக்கின்றன.

தமிழர்கள் ஷேக்ஸ்பியரையும், லியோ டோல்ஸ்ரோயையும், தாஸ்தாவெஸ்கியையும், மக்சிம் கோர்க்கியையும், டி.எச். லோரன்ஸையும், மாப்பசானையும், கலீல் ஜிப்ரானையும், நஸ்ருல் இஸ்லாமையும், ஹெமிங்வேயையும், சினுவா ஆச்சுபேயையும் ஆங்கிலமொழி ஊடாகவே தெரிந்துகொண்டமைக்கு முக்கிய காரணம் அவர்களின் படைப்புகளின் மொழிபெயர்ப்புகள்தான்.

தமிழ், சிங்கள வாசகர்கள் ஆங்கிலத்திலிருந்து அவர்களின் எழுத்துக்களை தத்தம் தாய்மொழிகளுக்கு மொழிபெயர்த்து தெரிந்து கொண்டோம். அதுபோன்று இலங்கையரான சிங்கள, தமிழ், முஸ்லிம் மக்களும் பரஸ்பரம் மொழிபெயர்ப்புகளின் ஊடாக சகோதர இனங்களின் அடையாளத்தையும் கலாசாரத்தையும் உணர்வுகளையும் தெரிந்துகொள்ளமுடியும்.

இலங்கையில் சிங்கள – தமிழ் – முஸ்லிம் நல்லுறவுக்காகவும் இனநல்லிணக்கத்திற்காகவும் பல இலக்கியவாதிகள் அயராமல் தொண்டாற்றியிருக்கிறார்கள்.

இலங்கையில் முன்னர் சுமார் 30 வருடகாலமாக தமிழ்மக்கள் செறிந்து வாழ்ந்த யாழ்ப்பாணத்திலிருந்தும் பின்னர் சுமார் 17 வருடகாலமாக மூவின மக்களும் செறிந்து வாழும் கொழும்பிலிருந்தும் வெளியான மல்லிகை கலை, இலக்கிய மாத இதழ், இனஒற்றுமைக்காக தொடர்ந்தும் குரல் எழுப்பி வந்தது.

அதன் ஆசிரியர் டொமினிக்ஜீவா ஒரு முற்போக்கு இலக்கியவாதி. இலங்கையில் முதல் முதல் தமிழ் சிறுகதை இலக்கியத்திற்காக (தண்ணீரும் கண்ணீரும்) தேசிய சாகித்திய விருது பெற்றவர். அவரது மல்லிகை இதழ்களில் சிங்கள இலக்கியவாதிகள் மார்டின் விக்கிரமசிங்கா, எதிரிவீர சரச்சந்திரா, குணசேனவிதான, கே. ஜயதிலக்க, ஜி.பி. சேனாநாயக்கா, ஆரியரத்ன விதான, கருணாசேன ஜயலத், குணதாஸ அமரசேகர, மககமசேகர உட்பட பலரதும் படைப்புகள் தமிழுக்கு மொழிபெயர்க்கப்பட்டு வெளியாகியுள்ளன.

அத்துடன் இவர்களில் சிலரதும் தமிழ் அபிமானியான வண.ரத்னவன்ஸதேரோ, சிங்கள திரைப்பட இயக்குநர் லெஸ்டர் ஜேம்ஸ் பீரிஸ், நாடகக்கலைஞரும் இயக்குநருமான ஹென்றி ஜயசேன, நூல் பதிப்புத்துறையைச்சேர்ந்த சுமணசிறிகொடகே ஆகியோரதும் படங்களை மல்லிகையின் முகப்பில் பதிவுசெய்து அவர்தம் நேர்காணல்களையும் அவர்களைப்பற்றிய அறிமுகக்கட்டுரைகளையும் மல்லிகை இதழ் வெளியிட்டிருக்கிறது.

கொழும்பிலிருந்து வெளியாகும் ஞானம் இதழில் தெனகமசிறிவர்தன, குசும்அறம்பத், பிலேமினா தில்றுக்ஷி, அரவிந்த சந்திரபத்ம, அமரபால கறசிங்ஹ ஆரச்சி, அஜித் பெரகும் ஜயசிங்க, முதலானோரின் பல சிங்களச் சிறுகதைகள் தமிழில் வெளியாகியுள்ளன.

பெரும்பாலான கதைகளை ஆறுமுகம் தங்கவேலாயுதம் தமிழுக்குத் தந்துள்ளார். திக்குவல்லை கமாலும் சில கதைகளை ஞானம் இதழில் தமிழுக்கு வரவாக்கியுள்ளார். இதுவரையில் 250 இற்கும் மேற்பட்ட இதழ்களை வெளியிட்டு தொடர்ந்தும் வெளியாகும் ஞானம் இதழின் ஆசிரியர் டொக்டர் தி.ஞானசேகரன்.

யாழ்ப்பாணத்திலிருந்து வெளியாகும் ஜீவநதி இதழில் ஜயந்த தர்மசிறீ விதான என்பவரின் சிறுகதையை திக்குவல்லை கமால் தமிழில் தந்துள்ளார். ஜீவநதி ஆசிரியர் கலாமணி பரணீதரன்.

மட்டக்களப்பிலிருந்து வி. மைக்கல் கொலின் வெளியிட்டுவரும் மகுடம் என்னும் காலாண்டிதழ் மஞ்சுளவெடிவர்தனவின் கவிதைகளை தமிழுக்குத்தந்துள்ளன. அவற்றை மொழிபெயர்த்தவர் ஃபஹீமா ஜகான் ஆனால், இந்தத்தகவல்கள் எத்தனை சிங்கள வாசகர்களுக்குத்தெரியும் என்பதுதான் என் போன்றவர்களின் கவலை.

மல்லிகை ஆசிரியர் டொமினிக்ஜீவா, சிங்களப்படைப்புகளின் தமிழ் மொழிபெயர்ப்புகளை மட்டுமல்ல, பல சிங்கள இலக்கியமேதைகளின் உருவப்படங்களையும் மல்லிகையின் முகப்பில் பதிவுசெய்து, அவர்களுக்கு கௌரவம் வழங்கியிருக்கிறார்.

இந்தப்பணியில் அவர் அயராமல் தொடர்ந்தவர். அதனாலும் அவருக்கு சாகித்தியரத்னா விருதும் கிடைத்தது. அத்துடன் தேசத்தின் கண் என்ற விருதையும் பெற்றவர். இந்த அதியுர் விருதுபெற்ற மற்றவர் விஞ்ஞான எழுத்தாளர் ஆதர் ஸி கிளார்க்.

இலங்கைப்பாரளுமன்றத்தில் டொமினிக் ஜீவாவின் சேவைகுறித்து பாராட்டிப் பேசப்பட்டது. அவரது பல சிறுகதைகளின் தொகுப்பு பத்ரசூத்தய என்ற பெயரில் சிங்களத்தில் வெளியாகியது. மொழிபெயர்த்தவர் இப்னு அசூமத்.

நான் ஏற்கனவே எழுதியிருந்த சிறுகதைகளில் சிலவற்றை தேர்ந்தெடுத்து சிங்களத்தில் மொழிபெயர்த்து வெளியிட எனது இனிய இலக்கிய நண்பர் திக்குவல்லை கமால் முயற்சி செய்தார். அவரது நண்பரும் முன்னாள் பாடசாலை அதிபருமான கராமத் என்பவர் சிங்களத்தில் மொழிபெயர்த்த மதகசெவனலி ( Shadow of Memories ) என்ற நூலை ஆனமடுவ தோதன்ன பதிப்பகம் வெளியிட்டது. இந்தப்பதிப்பகத்தை நடத்தும் சிட்னி மார்க்கஸ் டயஸ் என்ற சிங்கள அன்பரும் ஒரு படைப்பிலக்கியவாதி.

அத்துடன் ஏற்கனவே பல தமிழ் சிறுகதைகள் மற்றும் நாவல்களை சிங்களத்தில் மொழிபெயர்த்து வெளியிட்டுள்ள இன நல்லுறவின் அபிமானியான மடுளுகிரியே விஜேரத்தின அவர்கள் அவுஸ்திரேலியாவில் வதியும் டொக்டர் நொயல் நடேசனின் வண்ணாத்திக்குளம் என்ற நாவலை சமணலவெ என்ற பெயரில் சிங்களத்தில் மொழிபெயர்த்தார்.

இந்நாவல் ஏற்கனவே தமிழில் இரண்டு பதிப்புகளை கண்டுவிட்டன. அத்துடன் வண்ணாத்திக்குளம் நாவலை ஆங்கிலத்தில் (Butterfly Lake) என்ற பெயரில் கொழும்பில் பிரபல நூல் வெளியீட்டு நிறுவனம் விஜித்த யாப்பா வெளியிட்டிருக்கிறது. ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தவர் அவுஸ்திரேலியாவில் வதியும் நல்லைக்குமரன் குமாரசாமி.

மற்றுமொரு நடேசனின் தமிழ் நாவல் உனையே மயல்கொண்டு (Lost in you) என்ற பெயரில் ஆங்கிலத்தில் வெளியானது. அதனை மொழிபெயர்த்தவர் சென்னையைச்சேர்ந்த பார்வதி வாசுதேவ்.

கொழும்பில் இயங்கும் கொடகே பதிப்பகத்தில் முன்னர் பணியாற்றிய சிங்கள இலக்கியவாதி (அமரர்) உபாலி லீலாரத்தின என்பவரின் மொழிபெயர்ப்பில் தமிழக எழுத்தாளர் கு. சின்னப்ப பாரதியின் சக்கரை லண்டனில் வதியும் வவுனியூர் உதயணனின் பனிநிலவு, மன்னார் உதயணின் லோமியா, சடகோபனின் தேயிலை சாயம் என்பன சிங்களத்தில் வெளியிடப்பட்டன.

கொடகே பதிப்பகத்தின் அதிபர் சுமணசிறிகொடகே என்ற அன்பர் மூவின இலக்கியவாதிகளினாலும் பெரிதும் மதிக்கப்படும் ஒரு கனவான். அவர் தமிழ்ப் பதிப்பகங்களை நடத்தும் தமிழர்களுக்கு முன்மாதிரியான பெருமகன் என்று சொன்னாலும் அது மிகையில்லை. தமது கொடகே பதிப்பகத்தின் ஊடாக தமிழ் இலக்கிய நூல்களை வெளியிடுகிறார். அத்துடன் வருடாந்தம் தமிழ்ப்படைப்பாளிகளை தெரிவுசெய்து வாழ்நாள் சாதனையாளர் விருதுகளும் வழங்குகிறார். ஆர்ப்பாட்டம் எதுவுமின்றி அமைதியாக அவர்தொடரும் இந்த ஆக்கபூர்வமான பணி விதந்துபோற்றுதலுக்குரியது.



மல்லிகை ஜீவா

அவுஸ்திரேலியா எழுத்தாளர்கள் சிலரின் தமிழ்க்கதைகளின் ஆங்கில மொழிபெயர்ப்பு நூல் Being Alive . இந்நூல் 2011 ஆம் ஆண்டு கொழும்பில் நடந்த முதலாவது சர்வதேச தமிழ் எழுத்தாளர் மாநாட்டில் வெளியிடப்பட்டது.

இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கம் முடிந்தளவுக்கு இலங்கையில் இனநல்லிணக்கத்தை கலை, இலக்கியவாதிகள் ஊடாக மேற்கொள்வதற்கு அரும்பாடுபட்டது. மகாகவி பாரதியின் சில கவிதைகளை சிங்களத்தில் பாரதி பத்ய என்ற பெயரில் மொழிபெயர்த்து பல ஆண்டுகளுக்கு முன்னர் வெளியிட்டது.

கலாசார திணைக்களத்தில் செயலாளராக பணியாற்றிய கே.ஜி. அமரதாஸ என்பவரும் திரைப்படக்கூட்டுத்தாபனத்தில் பணியாற்றிய ரத்ன நாணயக்காரவும் பாரதி பத்ய நூலில் குறிப்பிட்ட மொழிபெயர்ப்பில் ஈடுபட்டிருந்தனர்.

கே.ஜி. அமரதாஸவும் ஒரு தமிழ் அபிமானி. சரளமாகத்தமிழ் பேசுவார். பேராசிரியர் கைலாசபதி மறைந்தபோது வீரகேசரியில் தமிழில் அஞ்சலிக்கவிதை எழுதியவர்.

ஹனிபா என்ற முஸ்லிம் எழுத்தாளர் மகாகவி பாரதியின் சுருக்கமான வரலாற்றை சிங்களத்தில் வெளியிட்டிருக்கிறார். பாரதி நூற்றாண்டு காலப்பகுதியில் இந்நூல்கள் வெளியாகின.



**லெ. முருகபூபதி**
**அவுஸ்திரேலியா**

## 2024 கிராமிய வீதி புனரமைப்பு திட்டம்

# அமைச்சர் பந்துல தலைமையில் பொலன்னறுவையில் ஆரம்பம்





2024 கிராமிய வீதி புனரமைப்பு வேலைத்திட்டத்தின் கீழ், நெடுஞ்சாலைகள் இராஜாங்க அமைச்சர் சிறிபால கம்லத்தின் அழைப்பின் பேரில், போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் வெகுஜன ஊடகத்துறை அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்த்தன தலைமையில் பொலன்னறுவை மாவட்ட வீதி அபிவிருத்திப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டன. ஜனாதிபதி, நிதி அமைச்சர் என்ற வகையில் 2024ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத்திட்டத்தின் கீழ் கிராமிய வீதிகளை புனரமைப்பதற்காக ஆயிரம் கோடி ரூபாவை ஒதுக்கியுள்ளார். இதன் கீழ் சிறிய அளவிலான வீதிகளை புனரமைப்பதற்கான யோசனைகள் அந்தந்த மாவட்டங்களின் பிரதேச அபிவிருத்திக் குழுத் தலைவர்கள் ஊடாக பெறப்பட்டுள்ளன. இத்திட்டத்தின் கீழ் பொலன்னறுவை திம்புலாகல கெகுலுவெல கொஸ்கஹமுல முதல் மல்தெனிய பிரதான வீதி காபட் இடப்பட்டு அபிவிருத்தி செய்யும் பணி அமைச்சர் உள்ளிட்ட அதிதிகளின் தலைமையில் ஆரம்பித்து வைக்கப்பட்டதுடன் அதற்காக செலவிடப்பட்ட தொகை ரூ. 46.50 மில்லியன் ரூபாவாகும். நெடுஞ்சாலைகள் இராஜாங்க அமைச்சர் சிறிபால கம்லத், கிராமிய வீதி அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தன், பாராளுமன்ற உறுப்பினர் ஜகத் சமரவிக்கிரம, பொலன்னறுவை மாவட்ட செயலாளர் சுஜந்த ஏக்கநாயக்க, கிராமிய வீதிகள் அமைச்சின் மேலதிக செயலாளர் பந்துல ரணவீர, வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் பணிப்பாளர் நாயகம் பிரியந்த சூரியபண்டார, வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் தலைவர் சமிந்த அதாலுகே, நெடுஞ்சாலைகள் அமைச்சு உள்ளிட்ட அரச நிறுவனங்களின் தலைவர்கள், அபிவிருத்தி அதிகார சபை, பிரதேச செயலாளர்கள், அரச அதிகாரிகள், மற்றும் மக்கள் பிரதிநிதிகள் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.

## சட்டம் ஒழுங்கை நிலைநாட்டுவது...

சீர்குலைக்க இடமளிக்கக் கூடாது என வலியுறுத்திய ஜனாதிபதி, ஒவ்வொரு துறையிலும் சட்டம் ஒழுங்கை பாதுகாக்கும் பொறுப்பு சகல தரப்பினருக்கும் இருப்பதாகவும் சுட்டிக்காட்டினார்.

பல்கலைக்கழக விரிவுரையாளர்களுடன் நேற்று (25) பிற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் இடம்பெற்ற சந்திப்பிலேயே ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க இதனைக் குறிப்பிட்டார்.

நாட்டின் தற்போதைய பொருளாதார வேலைத்திட்டம் மற்றும் பல்கலைக்கழக விரிவுரையாளர்களின் கருத்துக்கள் மற்றும் ஆலோசனைகள் குறித்து கலந்துரையாடும் நோக்குடன் முன்னாள் கல்வி அமைச்சர் அகிலவிராஜ் காரியவசம் இந்த சந்திப்பை ஏற்பாடு செய்திருந்தார்.

இந்நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றிய ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, நாட்டுக்கு புதிய கல்வி முறையை அறிமுகப்படுத்த அரசாங்கம் செயற்பட்டு வருவதாகவும், அதற்காக பிரதமரின்

செயலாளர் தலைமையில் குழுவொன்றும் நியமிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

பரீட்சை சுமையை குறைத்து பாடசாலை கல்வியில் மேற்கொள்ளப்படவுள்ள மாற்றங்கள் தொடர்பில் அரசாங்கத்தின் கவனம் செலுத்தப்பட்டுள்ளதாகத் தெரிவித்த ஜனாதிபதி, பல்கலைக்கழக கட்டமைப்பில் பல மாற்றங்கள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும், எதிர்வரும் தேர்தலின் பின்னர் புதிய பாராளுமன்றத்தின் கீழ் அந்த வேலைத்திட்டம் அமுல்படுத்தப்படும் எனவும் தெரிவித்தார்.

இந்த வேலைத்திட்டத்தை வெற்றியடையச் செய்வதற்கு அனைவரினதும் ஆதரவு தேவை எனத் தெரிவித்த ஜனாதிபதி, 2035ஆம் ஆண்டளவில் நாட்டில் உயர் தரத்திலான கல்வி முறையை உருவாக்குவதே தமது நோக்கமாகும் எனவும் தெரிவித்தார்.

இந்த நிகழ்ச்சித்திட்டத்தை வெற்றிகரமாக நடத்துவதற்கு பல்கலைக்கழக கட்டமைப்பில் நல்லதொரு சூழல் இருக்க வேண்டும் என சுட்டிக்காட்டிய ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, பல்கலைக்கழக நிர்வாகத்தை வெளித் தரப்பினருக்கு வழங்குவதா அல்லது மாற்றங்களை மேற்கொண்டு பல்கலைக்கழக கட்டமைப்பில் புதிய சூழலை உருவாக்க வேண்டுமா என்பதை பல்கலைக்கழகங்களே தீர்மானிக்க வேண்டும் என்றும் தெரிவித்தார்.

அண்மையில் களனி பல்கலைக்கழக திறப்பு விழாவில் கலந்து கொண்ட போது சிலர் அதற்கு எதிர்ப்பு தெரிவித்த போதிலும், தனக்கு வழங்கப்பட்ட பொறுப்பையும் கடமையையும் நிறைவேற்ற தான் தவறவில்லை என்பதை ஜனாதிபதி நினைவு கூர்ந்தார்.

கல்வித்துறையில் மேற்கொள்ளப்பட வேண்டிய பல சீர்திருத்தங்கள் குறித்து பல்கலைக்கழக பேராசிரியர்கள் கருத்துரைத்ததோடு, பல்கலைக்கழகப் பேராசிரியர்கள் உள்ளிட்ட ஏனைய புத்திஜீவிகளால் அறிவை உருவாக்குதல், அந்த அறிவைப் பகிர்ந்தளித்தல், நாட்டின் தேசிய தேவைகளை நிறைவேற்றுதல் போன்ற சேவைகள் நிறைவேற்றப்படுவதாக இதன்போது வலியுறுத்தப்பட்டது.

பல்கலைக்கழக கட்டமைப்பை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவில் இருந்து பிரித்து சுயாதீன கல்வி நிறுவனங்களாக மாற்றுதல், உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் உள்ள மாணவர்களுக்கு இன்றைய மாணவர்களின் தேவைக்கேற்ப தனித்துவமான தொழில்நுட்பத்துடன் கூடிய புதிய கற்கைநெறிகளை கற்க வாய்ப்புகளை வழங்குதல் மற்றும் அதற்காக பல்கலைக்கழக கட்டமைப்பில் தேவையான சூழலை ஏற்படுத்துவதன் முக்கியத்துவம் குறித்து இங்கு கவனம் செலுத்தப்பட்டது.

மேலும், பல்கலைக்கழக கட்டமைப்பை முழுமையாக மறுசீரமைத்து பொருளாதார வளர்ச்சிக்கு பெருமளவில் பங்களிக்கும் நிறுவனங்களாக மாற்றுவதன் முக்கியத்துவம் குறித்தும் இங்கு கலந்துரையாடப்பட்டது.

பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் எழுப்பிய சில கேள்விகளும் அதற்கு ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க அளித்த பதில்களும் கீழே தரப்படுகின்றன.

கேள்வி: உலகின் பல நாடுகளில் தொழில் முனைவோர் கல்விக்கு முன்னுரிமை கொடுக்கப்பட்டுள்ளது. எனவே, நமது நாட்டிலும் தொழில் முனைவோர் கல்வியை கட்டாயமாக்க பரிந்துரைக்கிறோம்.

பதில்: பல்கலைக்கழக பாடத்திட்டங்களில் நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய மாற்றங்கள் தொடர்பில் அரசாங்கம் தற்போது கவனம் செலுத்தி வருகின்றது என்பதை தெரிவித்துக் கொள்ள விரும்புகின்றேன். இதற்காக பல குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளன. பல்கலைக்கழக விரிவுரையாளர் களுக்கும் இங்கு பெரும் பொறுப்பு இருக்கிறது.

கேள்வி: பல்கலைக்கழகக் கல்வியை முறைமைப்படுத்துவதற்கு, நாட்டின் சட்டங்கள் பல்கலைக்கழகங்களில் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என்பதை நான் தெரிவிக்க விரும்புகிறேன்.

பதில்: அதை அரசாங்கத்தால் மாத்திரம் தனியாக செய்ய முடியாது. அது அனைவரும் இணைந்து செய்ய வேண்டிய பணி. ஆனால் மற்றவர்கள் அமைதியாக இருப்பது வருத்தம் அளிக்கிறது. 1980 களில் உருவாக்கப்பட்ட முறைமை காரணமாக இந்த நிலை ஏற்பட்டது. அந்த நிலைக்கு நாம் மீண்டும் செல்ல முடியாது. எனவே, புதிய நாட்டிற்கு ஏற்ற புதிய கல்வி முறையை அவசரமாக நாம் உருவாக்க வேண்டும். அதற்கு அனைவரின் ஆதரவும் அவசியம். ஒரு மாணவனை பல்கலைக்கழகத்தில் இணைத்து நான்கு வருடங்களில் பட்டம் பெறுவது மாத்திரமன்றி. பல்கலைக்கழகத்தில் விவாதிக்கவும் வாய்ப்பு வழங்கப்பட வேண்டும். கடந்த காலங்களில் அரசியல்வாதிகள் பல்கலைக்கழகங்களுக்குச் சென்று கலந்துரையாடல்களை நடத்தினர். இன்று அவ்வாறான சூழல் பல்கலைக்கழகங்களில் காணப்படவில்லை. அந்த நிலையை மீண்டும் நாம் உருவாக்க வேண்டும் என்றும் ஜனாதிபதி தெரிவித்தார்.

## 88 வகையான பிராணிகளுடன்...

கைது செய்யப்பட்டுள்ளார். கட்டுநாயக்க விமான நிலையத்தில் வருகை முனையத்தில் வைத்து விவசாயத் திணைக்கள அதிகாரிகளுடன் இணைந்து மேற்கொள்ளப்பட்ட சுற்றி வளைப்பிலே, இப்பெண் கைது செய்யப்பட்டதாக சுங்க அதிகாரியொருவர் தெரிவித்தார். பாங்கொக் நகரிலிருந்து வருகை தந்த பெண், அதற்காக தயாரிக்கப்பட்ட பிளாஸ்டிக் பெட்டியொன்றில் சூசகமாக பிராணிகளை நாட்டுக்கு எடுத்து வந்துள்ளதாக அந்த அதிகாரி தெரிவித்தார்.

## 'சரசவிய' திரைப்பட விருது விழா...

திரைப்படங்களுக்கு நடுவர்கள் தேர்வு செய்த விருதுகளுடன் 64 விருதுகள் வழங்கப்படவுள்ளன. 2019ஆம் ஆண்டு திரையிடப்பட்ட 30 படங்களில் 28 படங்களும், 2020ஆம் திரையிடப்பட்ட 12 படங்களும் போட்டி பிரிவில் அந்தந்த வருடங்களுக்கான 24 விருதுகளுக்கு தனித்தனியாக போட்டியிடும். அனைத்து விருதுகளும் சுயாதீன நடுவர் குழுவால் வழங்கப்படுகின்றன.

## கெஹெலிய உட்பட பிரதிவாதிகளின்...

நீதிமன்றம் நேற்று நிராகரித்துள்ளது. அதற்கிணங்க முன்னாள் அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல்ல, அச்சக கூட்டுத்தாபனத்தின் முன்னாள் தலைவர் ஜயந்த ஜயம்பதி பண்டார ஹீன்கெந்த ஆகியோருக்கு எதிராக லஞ்ச ஊழல் ஆணைக்குழுவினால் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்கை தொடர்ந்தும் முன்னெடுத்துச் செல்வற்கு கொழும்பு மேல் நீதிமன்றம் தீர்மானித்துள்ளது.

கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி தமித் தொட்டவத்த இதற்கான அனுமதியை வழங்கியுள்ளார். இதற்கிணங்க அந்த வழக்கு மீதான விசாரணையை எதிர்வரும் ஜுலை 22 ஆம் திகதி முன்னெடுப்பதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

## எழுத்து மூலம் அறிவித்து ஐவரே...

அறிவித்துள்ளதாக கோப் குழுவின் சிரேஷ்ட பேச்சாளரொருவர் குறிப்பிட்டார். டிலான் பெரேரா, துமிந்த திசாநாயக்க, எரான் விக்கிரமரத்ன, எஸ்.எம். மரிக்கார் மற்றும் சரித ஹேரத் ஆகிய பாராளுமன்ற உறுப்பினர்கள் மாத்திரமே பதவி விலகல் கடிதங்களைக் கையளித்துள்ளதாகவும் அப்பேச்சாளர் கூறினார்.

இவர்கள் தவிர, அனுர குமார திசாநாயக்க, வசந்த யாப்பா பண்டார, இராசமாணிக்கம் சாணக்கியன், தயாசிறி ஜயசேக்கர, காமினி வலேபொட, ஹேஷா விதானகே ஆகிய பாராளுமன்ற உறுப்பினர்கள், கோப் குழுவில் இருந்து பதவி விலகியுள்ளதாக பாராளுமன்றத்தில் அறிவித்துள்ளனர்.

## சுற்றுலா பயணிகளை கவரும்...

கூடத்துடன் இணைந்த ரயில் சேவையை நடத்தவும் தீர்மானித்துள்ளதாக அமைச்சர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் மேலும் தெரிவித்துள்ள அமைச்சர்: எதிர்வரும் ஏப்ரல் 05ஆம் திகதி எல்ல, நைன் ஆச் ஆகிய சுற்றுலா பிரதேசங்கள் ஊடாக மேற்படி இரண்டு ரயில்களும் சேவையில் ஈடுபடுத்தப்படவுள்ளன. ஒரு ரயில் தினமும் காலை 6.30 மணிக்கு ஒரு நாள் விட்டு ஒரு நாள் சேவையில் ஈடுபடுத்தப்படவுள்ளது.

## தொழிலாளர்களது குறைந்தபட்ச...

ரூபாவிலிருந்து 700 ரூபாவாக தேசியளவில் அதிகரிப்பதற்கு முடியுமான வகையில், சட்டத்தில் திருத்தம் செய்வதற்கும் அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

## சொந்த ஊரில் கடமை புரியும்...

அவர்களது மனைவியரின் சொந்த ஊரிலும் கடமையில் ஈடுபடுவதற்கு சந்தர்ப்பம் வழங்கப்பட மாட்டாதென பொலிஸ் மாஅதிபர் தேசபந்து தென்னக்கோன் தெரிவித்துள்ளார்.

தற்போது கடமையிலுள்ள இத்தகைய பொலிஸ்துறை சார்ந்தவர்கள், தமது ஊரில் அல்லது தமது ஊருக்கு அருகாமையில் உள்ள ஊரில் அல்லது அவர்களது மனைவியின் ஊரில் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளார்களா என்பதை ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்குமாறும் பொலிஸ் மா அதிபர் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு உத்தரவிட்டுள்ளார்.

## வடக்கு விவசாயிகளின்...

மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார். விவசாயம் தொடர்பில் வடபகுதி விவசாயிகள் காண்பிக்கும் அர்ப்பணிப்பை கருத்தில்கொண்டே இந்த நடவடிக்கையென அமைச்சர் தெரிவித்துள்ளார்.

விவசாய அமைச்சுக்கு ஒதுக்கப்படும் நிதியில் அதிகளவான நிதியை வடக்குகிழக்கு அபிவிருத்தி திட்டங்களிற்கு ஒதுக்குமாறு ஜனாதிபதி ஆலோசனை வழங்கியுள்ளார் என அமைச்சர் தெரிவித்துள்ளார்.

## IMF உடன்படிக்கையை மாற்ற முயன்றால்...

அவர் தெரிவித்தார். அவ்வாறான கூற்றுக்களை வெளியிடுவோர் தொடர்பில் மக்கள் தெளிவு பெற வேண்டும் என்றும் அமைச்சர் தெரிவித்துள்ளார். இது தொடர்பில் மேலும் தெரிவித்த அமைச்சர்,

சர்வதேச நாணய நிதியத்துடன் மேற்கொள்ளப்பட்டுள்ள கடன் ஒத்துழைப்பு உடன்படிக்கையை யாராவது மாற்றுவது அல்லது திருத்துவது தொடர்பில் தெரிவிப்பார்களானால் அவ்வாறானவர்களுக்கு இரண்டு வாரங்கள் கூட அரசாங்கத்தை முன்னெடுத்துச் செல்ல முடியாது.

நாம் கடனை மீள செலுத்துவதற்காக நடத்திய பேச்சு வார்த்தை மற்றும் கடன் ஒத்துழைப்பு தொடர்பான ஒப்பந்தத்தை அரசாங்கமே மேற்கொண்டதேயன்றி ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இதனை மேற்கொள்ளவில்லை.

## நிலையான வைப்பு, நிலையான...

நூற்றுக்கு 8.5 மற்றும் நூற்றுக்கு 9.5 வரையான அடிப்படையில், வட்டி வீதங்களை குறைப்பதற்கு தீர்மானிக்கப்பட்டது.

## நாட்டின் பொருளாதார அபிவிருத்திக்கு...

தூதரகத்தில் (25) இச்சந்திப்பு இடம்பெற்றது.

செயற்கை நுண்ணறிவு, தகவல் தொழில்நுட்பம் மற்றும் டிஜிட்டல் மயமாக்கல் போன்ற துறைகளில் வெளிநாடுகளில் உள்ள இலங்கையர்கள் அடைந்துள்ள உயர் தொழில்முறைத் தரம் குறித்து தாம் பெருமைப்படுவதாக கூறிய பிரதமர், “இலங்கையின் இலவசக் கல்வி முறை மற்றும் ஏனைய வசதிகள் மூலம் அறிவைப் பெற்றுள்ளவர்கள் தாய்நாட்டுக்குக் கடமைப்பட்டிருப்பதாகவும் கூறினார்.

இங்கு பேசிய பிரதமர்:

நாம் வெவ்வேறு தலைநகரங்கள் மற்றும் நகரங்களுக்குச் செல்லும்போது, பலரையும் சந்திக்கிறோம்.

எனினும் இலங்கையின் எதிர்காலத்திற்கு பங்களிக்கக்கூடிய மக்களை கண்டுகொள்வது சவாலாகவே உள்ளது. நாம் அனைவரும் இலங்கையர்கள். சீனாவில் நான் சந்தித்த சிரேஷ்ட நபர் ஒருவர், அரை நூற்றாண்டுக்கு முன்பு சீனாவுக்கு வந்தது குறித்து இலங்கை சீன சங்கத்தில் விரிவுரை ஆற்றுவதைக் கேட்டேன். அவரது முழு வாழ்க்கையும் சீனாவிற்கு மட்டுமல்ல, இலங்கைக்கும் மனித வரலாற்றிற்கும் பதிவு செய்யப்பட வேண்டிய கதை என்று நான் நினைக்கிறேன்.

சீனா இன்று உலகின் இரண்டாவது பெரிய பொருளாதாரமாக உள்ளது. ஐம்பது ஆண்டுகளுக்கு முன்பு இந்நிலை இல்லை. சீனா இன்று உலகின் பாரிய சக்தியாக மாறி, உலக விவகாரங்களில் செல்வாக்கு செலுத்தும் நிலையில் உள்ளது.


## இன்றைய பலன்கள்

(27.03.2024)

கலாநிதி சிவஸ்ரீ இராமசந்திர குருக்கள் பாபு சர்மா
(ஸ்ரீ வித்யா ஜோதிட நிலையம் கொழும்பு)



**மேஷம் :** தொழிலில் இருந்த குறுக்கீடுகள் அகலும். புதிய பங்குதாரர்களால் பொருளாதாரம் உயரும்.பெரும்பாலும் நற்பலன்கள் உண்டு.



**ரிஷபம் :** மன வருத்தங்கள் ஏற்படுவதற்கான வாய்ப்பு உண்டு. கொடுக்கல் வாங்கல் சில குளறுபடிகளை சந்திக்க நேரிடும்.



**மிதுனம் :** பயணங்களின் போது அவதானம் தேவை. ஆரோக்கியத்தில் அக்கறை வேண்டும். செலவு அதிகரிக்க கூடும்.



**கடகம் :** வெளிநாட்டு முயற்சியில் அனுகூலம் ஏற்படும் .தொழில் முன்னேற்றத்திற்கான வாய்ப்பு உண்டு. வழக்குகள் சாதகமாகும் நேரம் இது.



**சிம்மம் :** குடும்பச் செலவு அதிகரிக்க கூடும். கடன் வாங்கும் சூழ்நிலையும் ஏற்படும். பொருளாதாரத்தில் தட்டுப்பாடுகள் நிலவக்கூடும்.



**கன்னி :** ஆரோக்கியத்தில் அக்கறை தேவை. தேவையற்ற புதிய பிரச்சினைகளை சந்திக்க கூடும். அனுபவஸ்தர்களின் ஆலோசனை அவசியம்.



**துலாம் :** எதுவாக இருந்தாலும் ஒரு முறைக்கு இருமுறை யோசித்து செய்யக்கூடிய சூழ்நிலை அமையும். முடிவில் வெற்றி கிட்டும்.




**விருச்சிகம் :** வரவிற்கு முன் செலவு காத்திருக்கும். வாகனம் வாங்கும் ஆசை அதிகரிக்கும். குடும்பத்தவரின் தேவைகளை பூர்த்தி செய்வதில் ஆர்வம் காட்டுவீர்கள்.



**தனுசு :** வெளிநாட்டு நண்பர்கள் மூலம் நல்ல தகவல் கிடைக்கும். புதிய ஒப்பந்தங்கள் கிடைத்து பொருளாதாரம் உயர வழி பிறக்கும்.



**மகரம் :** பாகப்பிரிவினை முடிவதில் தாமதம் ஏற்படும். தந்தை வழி உறவிலும் விரிசல்கள் உண்டாகும். வாங்கிய கடனை கொடுப்பீர்கள்.



**கும்பம் :** புதிய நண்பர்கள் அறிமுகமாகி சாதித்துக் கொள்வீர்கள். வெளிநாட்டில் பணிபுரிய வாய்ப்புகள் கைகூடிவரும் .



**மீனம் :** வெளிநாட்டு பலன்கள் அனுகூலம் தரும். வீடு மாற்றம் பற்றி சிந்திப்பீர்கள். தாய் வழி ஆதரவு கிடைக்கும்.



## உத்தேச தேசிய... (03 ஆம் பக்க தொடர்ச்சி)

பல கட்டிடங்களும் எமக்கு கிடைத்துள்ளன. கட்டிடங்கள் புனரமைக்கப்பட்டவுடன் இந்தப் பிரச்சினைகள் தீரும் என நம்புகிறோம்.

இங்கு விசேடமாக குறிப்பிட வேண்டிய ஒன்று உள்ளது. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிற்குப் பதிலாக தேசிய உயர்கல்வி அபிவிருத்தி ஆணைக்குழுவும் அமைக்கப்படவுள்ளது.

## வழக்கு கோவையை அழித்த... (03 ஆம் பக்க தொடர்ச்சி)

பிரதம நீதியரசர் ஜயந்த ஜயசூரிய மற்றும் காமினி அமரசேக்கர, ஏ.எச். எச்.டி.நவாஸ் ஆகியோரடங்கிய உயர் நீதிமன்ற நீதிபதிகள் குழாம் இந்த விசாரணையை மேற்கொண்டுள்ளது. கெகிராவை மஜிஸ்திரேட் நீதிமன்றத்தில் தொடரும் வழக்கொன்றின் பிரதியை நீதிமன்ற அலுவலகத்திலிருந்து பலாத்காரமாக பறித்தெடுத்து அழித்ததாக பெண் சட்டத்தரணி மீது வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இதன் மூலம் அவர் சட்டத்தரணிகளுக்கான தர்மத்தை மீறியுள்ளார் என்றும் அந்த குற்றப்பத்திரிகையில் குறிப்பிடப்பட்டுள்ளது. அவர் பாரிய குற்றத்தை இழைத்துள்ளாரென தீர்மானித்துள்ள மூவரடங்கிய உயர் நீதிமன்ற நீதிபதிகள் குழாம், இவ்வாறான செயற்பாட்டை ஒருபோதும் அனுமதிக்க முடியாதென தெரிவித்துள்ளது. அதனையடுத்து வழக்கு நிறைவடையும் வரை சம்பந்தப்பட்ட இந்தப் பெண், சட்டத்தரணியாக செயற்படுவதற்கு தடைவிதித்து உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. இப் பெண் 12 வருட காலம் சட்டத்தரணியாக பணிபுரிந்துள்ளரென்பது குறிப்பிடத்தக்கது.

## மத்திய வங்கி சம்பள... (03 ஆம் பக்க தொடர்ச்சி)

இதை தெளிவாகக் குறிப்பிட விரும்புகின்றேன். எனது பதவி மூலம் நாட்டுக்கு சேவை செய்ய முடியாத நிலை ஏற்பட்டாலே பதவி விலகுவேன்.

எனது நிர்வாகத்தின் கீழ் பணிபுரியும் ஊழியர்களின் சம்பளத்தை அதிகரிப்பதற்கு நிறுவனத்தின் தலைவர் என்ற வகையில் எனக்கு பொறுப்பு உள்ளது. அந்த பொறுப்பையே நான் நிறைவேற்றினேன்.

எமது நிதி சபை மட்டுமன்றி தொழிற்சங்கங்களும் இணைந்தே இந்த சம்பள அதிகரிப்புக்கான தீர்மானம் எடுக்கப்பட்டது. மூன்று வருட ஒப்பந்த கூட்டு இணக்கப்பாட்டுக்கு இணங்கவே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

பொருளாதாரம் தொடர்பாக எமது நிர்வாகம் மற்றும் நிதிச்சபை தீர்மானம் எடுக்கும். அது தொடர்பில் வேறு எவருடனும் பேச்சுவார்த்தை நடத்த தேவையில்லை.

இந்த முடிவு பணியாளர்களின் நலன் கருதி இரு தரப்பும் இணைந்து மேற்கொண்ட கூட்டுத் தீர்மானமாகும். அது தொடர்பில் எந்தவித பிரச்சினையும் கிடையாது என்பதே எனது கருத்து என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## புத்தாண்டுக்கு முன்னர்...

புத்தாண்டைக் கொண்டாடுவோரின் நலனைக் கருதி மதுபான வகைகளின் விலைகளைக் குறைப்பதுடன், ஏனைய அத்தியாவசிய பொருட்களின் விலைகளும் குறைக்கப்பட வேண்டும்.

அந்த வகையில் குறிப்பாக, புத்தாண்டுக்கு முன்பதாக மதுபான விலைகளைக் குறைக்க வேண்டும் என்பதே எமது எதிர்பார்ப்பு. நாம் ஜனரஞ்சக தீர்மானங்களை மேற்கொள்வதில்லை. இனியும் மேற்கொள்ளப் போவதில்லை. அவ்வாறான தீர்மானங்களை மேற்கொள்ள முனைந்தே, கடந்த காலங்களில் பெரும் நெருக்கடிகளை எதிர்கொண்டோம்.

டொலர் 200 ஆக வீழ்ச்சிகண்டு நாடு அதன் பாதிப்பை எதிர்நோக்க நேர்ந்தது. இதனால் இனியும் ஜனரஞ்சக தீர்மானங்களை மேற்கொள்ளப் போவதில்லை என்றும் மேலும் தெரிவித்தார்.

இந்நிலையில், புத்தாண்டு கால விபத்துக்களை குறைப்பது குறித்தும் அரசாங்கம் கவனம் செலுத்தியுள்ளது. மதுபானம் அருந்தியவாறு வாகனங்களை ஓட்டும் சாரதிகளுக்கு எதிராக கடும் நடவடிக் கை எடுக்கப்படவுள்ளதுடன்,அதிக வேகத்தில் செல்வோரை கண்காணிக்கவும் நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

## தேசிய மக்கள் சக்தி அரசின்...

உட்படுத்தப்படுமென்றும் கடனை மீள செலுத்தும் போது அந்த அனைத்து ஒப்பந்தங்களையும் மீண்டும் மீளாய்வுக்கு உட்படுத்தும் உரிமை தமக்கு உள்ளதாகவும் தேசிய மக்கள் சக்தியின் பொருளாதார குழு உறுப்பினர் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சுனில் ஹந்துன்னெத்தி தெரிவித்துள்ளார். சில வேளை,அந்த அனைத்து தரப்பினருடனும் கடன் மறு சீரமைப்பு வேலைத் திட்டத்திற்கு புதிதாக செல்ல வேண்டி ஏற்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

அந்த சந்தர்ப்பத்தில் எவ்வாறு செயற்படுவது என்பது தொடர்பில் தற்போது எதனையும் தெரிவிக்க முடியாது என குறிப்பிட்டுள்ள அவர் அதில் நேர்மையற்ற தன்மை நிலவுவதாகவும் குறிப்பிட்டுள்ளார். அத்துடன் தற்போதைய அரசாங்கம் சாத்தியமாக முன்னெடுத்து வரும் பொருளாதார மறுசீரமைப்பு நடவடிக்கையை தமது அரசாங்கத்தின் கீழ்

மீள திருப்ப முடியும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். கடன் மறு சீரமைப்புக்கு மீண்டும் செல்வதாக என்பது கேள்வி தன்னால் தெரிவிக்க முடியாது என குறிப்பிட்டுள்ளார் . இந்த கடன் மறு சீரமைப்பு நடவடிக்கைகள் நேர்மையான முறையில் இடம்பெறுமானால் அதனை அவர்களுக்கு தொடர்ச்சியாக முன்னெடுத்துச் செல்ல முடியும் என்றும், எனினும் அந்த நடவடிக்கைகளில் தம்மால் சுமக்க முடியாத அளவு நிபந்தனைகள் இல்லாவிட்டால் அது பிரச்சினையாக அமையாது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

# Women Plus Bazaar 2024 கண்காட்சியில் கௌரவ அதிதியாக வட மாகாண ஆளுநர்



இலங்கைக்கான எகிப்து தூதரகத்தால் கொழும்பில் ஏற்பாடு செய்யப்பட்ட Women Plus Bazaar 2024 கண்காட்சியில் கௌரவ அதிதியாக வட மாகாண ஆளுநர் பி.எஸ்.எம். சார்ள்ஸ் கலந்து கொண்டார். இக்கண்காட்சி 23ஆம் திகதி ஆரம்பமாகி 24ஆம் திகதிவரை காலை 10 மணி முதல் இரவு 10 மணிவரை நடைபெற்றது. கொழும்பு காலிமுகத்திடலில் அமைந்துள்ள One Galle Face சிறப்பு அங்காடி தொகுதியில் ஏற்பாடு செய்யப்பட்ட இந்த கண்காட்சிக் கூடத்தை, ஏனைய அதிதிகளுடன் இணைந்து வட மாகாண ஆளுநர் பி.எஸ்.எம். சார்ள்ஸும் ஆரம்பித்து வைத்தார். கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமானும் இந்நிகழ்வில் கலந்துகொண்டார். பின்னர் அவர்கள் கண்காட்சிக் கூடத்தையும் பார்வையிட்டனர்.

நாட்டிலுள்ள ஒன்பது மாகாணங்களில் வசிக்கும் 100க்கும் மேற்பட்ட கைவினைக் கலைஞர்களின் உற்பத்திகளை மேம்படுத்தும் நோக்கில் இந்தக் கண்காட்சி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. பல்வேறு மாவட்டங்களிலும் வசிக்கும் குறைந்த வருமானம் பெறும் பெண் தொழில் முனைவோரை இலக்காகக் கொண்டு இந்த கண்காட்சி ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

# ஏ 35 வீதியின் புளியம்பொக்கனை பகுதியில் உள்ள பாலத்தின் நிர்மாணப் பணிகள் கைவிடப்பட்ட நிலையில்

## மக்கள் பெரும் அசௌகரியம்

**பரந்தன் குறூப் நிருபர்**



கிளிநொச்சி, பரந்தன், முல்லைதீவு ஏ 35 வீதியின் புளியம்பொக்கனை பகுதியில் உள்ள பாலத்தின் நிர்மாணப் பணிகள் கடந்த நான்கு வருடங்களுக்கு மேலாக கைவிடப்பட்டதால் போக்குவரத்து செய்யும் மக்கள் பெரும் அசௌகரியங்களுக்கு உள்ளாவதுடன் விபத்துகளும் ஏற்படும் அபாய நிலை காணப்படுகின்றது.

புளியம்பொக்கனை பத்தாம் கட்டைப் பகுதியில் உள்ள பாலத்தின் புனரமைப்பு பணிகள் கடந்த 2020ஆம் ஆண்டு காலப்பகுதியிலே ஆரம்பிக்கப்பட்டு இடை நடுவில் கைவிடப்பட்டன. இப் பாலத்தின் கட்டுமானப் பணிகளை விரைவாக முன்னெடுக்குமாறு பல்வேறு தரப்பினரும் கோரிக்கை விடுத்து வருகின்ற போதும் அதன் புனரமைப்பு பணிகள் இதுவரை முன்னெடுக்கப்படவில்லை. கிளிநொச்சி மாவட்டத்தின் பிரதான நெடுஞ்சாலைகளில் ஒன்றாக இது காணப்படுவதுடன் இவ்வீதியூடாக நாளாந்தம் பல்லாயிரக்கணக்கான பொதுமக்களும் பயணிக்கின்றனர்.

குறிப்பாக திருகோணமலையிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கிப் பயணிக்கும் வாகனங்களும் யாழ்ப்பாணத்திலிருந்து திருகோணமலை நோக்கி பயணிக்கும் வாகனங்களும் இவ்வவீதியூடாகவே பயணிக்கின்றன.

அத்துடன் இப்பாலத்துக்கு பதிலாக அமைக்கப்பட்டுள்ள மாற்று வழிப் பாலமும் அடிக்கடி சேதமடைந்து வருகின்றது. எனவே குறித்த பாலத்தினை புனரமைப்பதற்கு விரைவாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

## 8 ஆண்டுகளில்

# முல்லைத்தீவு மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களில் இருந்து 39,134 அபாயகரமான வெடிபொருட்கள் அகற்றல்

**பரந்தன் குறூப் நிருபர்**

முல்லைத்தீவு மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களில் கடந்த எட்டு ஆண்டுகளில் 2,812,768 சதுர கிலோ மீற்றர் பரப்பளவு கொண்ட பகுதிகளில் இருந்து 39,134 அபாயகரமான வெடிபொருட்களை அகற்றியுள்ளதாக மனிதாபிமான கண்ணிவெடி அகற்றும் பணியை முன்னெடுத்து வரும் ஷார்ப் நிறுவனம் தெரிவித்துள்ளது.

இலங்கையின் வடபகுதியில் மனிதாபிமான கண்ணிவெடிய கற்றலில் ஜப்பான் மற்றும் அமெரிக்கா ஆகிய நாடுகளின் நிதியுதவியுடன் ஈடுபடும் ஷார்ப் (SHARP) மனிதாபிமான கண்ணிவெடி அகற்றும் அரச சார்பற்ற நிறுவனமானது கடந்த 2016ஆம் ஆண்டு நவம்பர் மாதம் தொடக்கம் 2024 மார்ச் மாதம் 25ஆம் திகதி வரையான காலப்பகுதியில் முல்லைத்தீவு மாவட்டத்தின் ஒட்டுசுட்டான் பிரதேச செயலக பிரிவின் கீழுள்ள தச்சடம்பன், அம்பகாமம், ஒழுமடு மற்றும் மாங்குளம், கொக்காவில் பகுதியிலும், புதுக்குடியிருப்பு பிரதேச செயலக பிரிவின் கீழ் உள்ள சுதந்திரபுரம், மல்லிகைத் தீவு, புதுக்குடியிருப்பு மேற்கு, கிழக்கு, மண்ணாகண்டல் பகுதியிலும் கிளிநொச்சி மாவட்டத்தின் பச்சிலைப்பள்ளி பிரதேச செயலக பிரிவின் கீழ் உள்ள முகமாலை, இயக்கச்சி மற்றும் ஆனையிறவிலும் அபாயகரமான வெடிபொருட்களை அகற்றியுள்ளதாக ஷார்ப் நிறுவனத்தின் நடவடிக்கை முகாமையாளர் ஓய்வுபெற்ற கப்டன் பிரபாத் நாரம்பனாவ தெரிவித்தார்.



புதுக்குடியிருப்பு, ஒழுமடு, மாங்குளம், கொக்காவில் மற்றும் ஆனையிறவிலும் தொடர்ந்தும் இந்நிறுவனம் கண்ணிவெடியகற்றும் பணிகளை துரித கதியில் முன்னெடுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

வடக்கின் உதயம்

# விபத்தினை ஏற்படுத்திய சந்தேகநபர் தலைமறைவு

## பருத்தித்துறையில் சம்பவம்

**யாழ்.விசேட நிருபர்**

யாழ்ப்பாணம் பருத்தித்துறை வீதியில் மோட்டார் சைக்கிளில் பயணித்துக்கொண்டிருந்த பெண்ணொருவரை ஹயஸ் ரக வாகனம் ஒன்று மோதியுள்ளது.

துன்னாலை மேற்கைச் சேர்ந்த குமரேசமூர்த்தி வனிதா (வயது 51) எனும் பெண்ணே காயமடைந்த நிலையில் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

மந்திகை பகுதியில் அமைந்துள்ள இலங்கை வங்கிக் கிளைக்கு அருகில் நேற்று முன் தினம் திங்கட்கிழமை குறித்த விபத்து இடம்பெற்றுள்ளது.

இவ் விபத்து தொடர்பில் பருத்தித்துறை பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

பிரதான வீதிகளில் உள்ள வர்த்தக நிலையங்களில் உள்ள கண்காணிப்பு கமராக்களின் உதவியுடன் விபத்தினை ஏற்படுத்தி விட்டு தப்பிச் சென்ற ஹயஸ்ரக வாகனத்தை அடையாளம் கண்டுள்ளதாகவும், அதன் சாரதியை கைது செய்வதற்கு நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

# யாழில் விபத்து; – ஒருவர் உயிரிழப்பு சந்தேக நபர்கள் பொலிஸில் சரண்

**யாழ். விசேட நிருபர்**



யாழ்ப்பாணம் கொடிகாமம் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் நேற்று முன் தினம் திங்கட்கிழமை இரவு இடம்பெற்ற விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

கிளிநொச்சி விவேகானந்தா நகரைச் சேர்ந்த சின்னராசா சுதன்ராஜா (வயது 41) என்பவரே உயிரிழந்துள்ளார். யாழில் இருந்து கொழும்பு நோக்கிப் பயணித்துக் கொண்டிருந்தசொகுசுபேருந்து,யாழ் கண்டி நெடுஞ்சாலையில், மீசாலை வீரசிங்கம் கல்லூரி முன்பாக பாதசாரிக் கடவையில் பிறிதொரு வாகனத்தை முந்திச் செல்ல முற்பட்ட வேளை எதிரே வந்த மோட்டார் சைக்கிளுடன் மோதியுள்ளது.

விபத்தில் மோட்டார் சைக்கிளை ஓட்டியவர் சம்பவ இடத்திலையே உயிரிழந்தார்.

பேருந்தின் சாரதியும் நடத்துனரும், விபத்து நடைபெற்ற இடத்தில் பேருந்தினை கைவிட்டு, அங்கிருந்து தப்பிச் சென்று, கொடிகாம பொலிஸ் நிலையத்தில் சரணடைந்துள்ளனர்.

அவர்கள் இருவரையும், கைது செய்துள்ள பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

# சர்வதேச நீர் தினத்தை முன்னிட்டு இரத்த தானம்

**ஓமந்தை விஷேட நிருபர்**



சர்வதேச நீர் தினத்தை முன்னிட்டு முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலையில் இரத்த தானம் வழங்கும் நிகழ்வு நேற்று இடம் பெற்றது.

தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபை மற்றும் இலங்கை செஞ்சிலுவை சங்கத்தின் முல்லைத்தீவு மாவட்ட கிளையின் ஏற்பாட்டில் "ஈடு இணையற்றது நம் உடலில் ஓடும் குருதி! அதை பிறருக்கும் சிறிது பகிர்ந்தளிக்க ஏற்போம் இந்தநாளில் உறுதி!" எனும் தொனிப் பொருளில் இரத்த தானம் வழங்கும் நிகழ்வானது முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலையில் நேற்றுக் காலை (26.03.2024) நடைபெற்றது.

இந்நிகழ்வில் இளைஞர்கள், இராணுவத்தினர், தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை மற்றும் இலங்கை செஞ்சிலுவை சங்கத்தின் முல்லைத்தீவு மாவட்ட கிளையின் உறுப்பினர்கள் என நூற்றுக்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டு இரத்த தானம் வழங்கினர்.

# மக்களின் எதிர்ப்பையடுத்து கீரிமலையில் கைவிடப்பட்ட நில அளவைப் பணிகள்

**யாழ்.விசேட நிருபர்**



யாழ்ப்பாணம் கீரிமலை ஜனாதிபதி மாளிகை அமைந்துள்ள காணிகளை நகர அபிவிருத்தி நடவடிக்கைக்காக சுவீகரிப்பதற்கான அளவீட்டுப்பணி நேற்றைய தினம் செவ்வாய்க்கிழமை முன்னெடுக்கப்பட இருந்த நிலையில் மக்களின் எதிர்ப்பால் கைவிடப்பட்டுள்ளது.

குறித்த காணி அளவீட்டுக்கு காணி உரிமையாளர்கள் மற்றும் பொதுமக்கள் எதிர்ப்பை வெளியிட்டதுடன் நில அளவைத் திணைக்களத்தின் வாகனத்தினையும் இடைமறித்து போராட்டத்தில் ஈடுபட்டனர்.

காணி உரிமையாளர்களின் எதிர்ப்பினை அடுத்து காணியினை அளவீடு செய்வதற்கு தமக்கு விருப்பம் இல்லை என காணி உரிமையாளர்கள் கடிதம் கையளித்ததையடுத்து நில அளவை திணைக்கள அதிகாரிகள் அங்கிருந்து திரும்பிச் சென்றனர்.

தெல்லிப்பளை பிரதேச செயலகப்பிரிவின் கீழ் உள்ள நகுலேஸ்வரம் ஜே/226 மற்றும் காங்கேசன்துறை ஜே/233 ஆகிய கிராம சேவகர் பிரிவுகளில் உள்ள ஆழ்வான்மலையடி, வேலர்காடு, புண்ணன் புதுக்காடு, பத்திராயான், புதுக்காடு, சோலை சேனாதிராயன் ஆகிய பகுதிகளில் உள்ள சுமார் 29 ஏக்கர் காணிகளை சுவீகரிக்கும் நோக்குடன் இந்த அளவீட்டு பணிகள் முன்னெடுக்கப்பட இருந்தமை குறிப்பிடத்தக்கது.

# குளங்கள், கிராமங்கள் மறுமலர்ச்சி திட்டத்தின் கீழ் வவுனியாவில் தானியங்கள் வழங்கி வைப்பு

**வவுனியா விசேட நிருபர்**



கிராமிய மக்களின் பொருளாதார மேம்பாட்டுக்காக குளங்கள், கிராமங்கள் மறுமலர்ச்சி திட்டத்தின் கீழ் வவுனியாவில் தானியங்கள் வழங்கி வைக்கப்பட்டன.

நீர்ப்பாசன அமைச்சின் கீழ் குளங்கள், கிராமங்களின் மறுமலர்ச்சி திட்டத்தின் கீழ் கிராமிய மக்களின் பொருளாதார மேம்பாட்டுக்காக பயிர்ச்செய்கைக்காக தானியங்கள் வழங்கும் வேலைத் திட்டம் நாடு பூராகவும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

அதடிப்படையில், வவுனியா மாவட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட விவசாயிகளுக்கு தானியங்கள் வழங்கும் நிகழ்வு வவுனியா இலுப்பையடி பகுதியில் அமைந்துள்ள கோவில்குளம் கமநல அபிவிருத்தி நிலையத்தில் நேற்று (26.03) இடம்பெற்றது.

இத் திட்டத்தின் கீழ் தெரிவு செய்யப்பட்ட குளங்களின் கீழான பயிர்ச்செய்கைக்காக கச்சான், கௌபி, பயறு, உழுந்து விதைகள் வழங்கப்பட்டன. அதில் முதல் கட்டமாக கோவில்குளம் கமநல அபிவிருத்தி நிலையத்தின் கட்டுப்பாட்டின் கீழ் உள்ள சமனங்குளம் பகுதியைச் சேர்ந்த 9 விவசாயிகளுக்கு கௌபி பயிற் செய்கைக்காக விதைக் கௌபி வழங்கப்பட்டதுடன், பயிர்ச் செய்கை தொடர்பான ஆலோசனை வழிகாட்டல்களும் வழங்கப்பட்டன.

நிகழ்வில் கோவில்குளம் கமநல அபிவிருத்தி நிலையப் பொறுப்பதிகாரி காஞ்சனா, கமநல அபிவிருத்தி திணைக்கள உத்தியோகத்தர்கள், நீர்ப்பாசன திணைக்கள உத்தியோகத்தர்கள், விவசாயிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

# யாழில் தவறான சிகிச்சையால் ஒருவர் உயிரிழப்பு

**யாழ்.விசேட நிருபர்**

யாழ்ப்பாணத்தில் தவறான அக்குபஞ்சர் சிகிச்சை முறையால் நேற்று ஒருவர் உயிரிழந்துள்ளார்.

அச்சுவேலி கிழக்கை சேர்ந்த மாணிக்கம் சற்குணராஜா (வயது 64) என்பவரே உயிரிழந்தவராவார்.

முழங்கால் வலியினால் அவதிப்பட்டு, யாழ்.நகரப் பகுதியை அண்மித்த அக்குபஞ்சர் சிகிச்சை நிலையம் பற்றி சமூக வலைத்தளங்களில் வந்த விளம்பரங்களை நம்பி சிகிச்சைக்காக சென்றுள்ளார்.

அங்கு முழங்கால் வலியைப் போக்குவதாக முழங்காலில் ஊசிகளை ஏற்றி சிகிச்சை அளிக்கப்பட்டுள்ளது. சிகிச்சையின் பின்னர் கடுமையான வலி ஏற்பட்டமையால், யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அவர் அனுமதிக்கப்பட்டார். அங்கு சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

உடற்கூற்று பரிசோதனையின் போது, அக்குபஞ்சர் சிகிச்சை என தவறான முறைகளில் செலுத்தப்பட்ட ஊசிகள் மூலம் கிருமித் தொற்று ஏற்பட்டு, அவை உடல் முழுவதும் பரவியதால் மரணம் சம்பவித்துள்ளது எனக் கண்டறியப்பட்டுள்ளது.

ජාතික ලොතරැයි මණ්ඩලය
தேசிய லொத்தர் சபை
National Lotteries Board
திங்கள் 2024.03.25
உத்தியோகபூர்வ முடிவுகள்
www.nlb.lk

மஹஜன சம்பத
சீட்டிழுப்பு இலக்கம் 5430
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 24,838,160.00
ஆங்கில எழுத்து K வெற்றி இலக்கங்கள் 3 2 6 8 6 5

அத சம்பத
சீட்டிழுப்பு இலக்கம் 005
ஆங்கில எழுத்து K வெற்றி இலக்கங்கள் 6 8 6 5

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 3672 சீட்டிழுப்பு திகதி 2024.03.25
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 71,415,119.36
ஆங்கில எழுத்து E வெற்றி இலக்கங்கள் 30 46 60 79 விசேட எழுத்து E
இலட்சாதிபதி டபள் சான்ஸ் வெற்றி இலக்கம் 22910

Mega POWER
சீட்டிழுப்பு இலக்கம் 1778 2024.03.25
13838
அடுத்த மெகா சுப்பர் பரிசு ரூ. 428,508,318.00
ஆங்கில எழுத்து K சுப்பர் இலக்கம் 14 வெற்றி இலக்கங்கள் 03 06 64 71
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00

VIP
திகதி 2024.03.25 சீட்டிழுப்பு இலக்கம் 0256
ஆங்கில எழுத்து O வெற்றி இலக்கங்கள் 5 9 5 2 7 1
L7 எழுத்து O
அடுத்த சீட்டிழுப்புக்கான சுப்பர் பரிசு ரூ. 27,506,011.28

ராசி சுப பலன்
திகதி 2024.03.25 சீட்டிழுப்பு இலக்கம் 739
அடுத்த சீட்டிழுப்புக்கான சுப்பர் பரிசு ரூ. 3,432,889.96
வெற்றி இலக்கினம் கும்பம் வெற்றி இலக்கங்கள் 10 36 44 46
தனயோக இலக்கம் 59335
நாளுக்கான விதி எண் 17

தன நிதானய
சீட்டிழுப்பு இலக்கம் 1460 2024.03.25
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 85,587,197.76
ஆங்கில எழுத்து Q வெற்றி இலக்கங்கள் 34 54 60 64 விசேட எழுத்து Q
இலட்சாதிபதி டபள் சான்ஸ் வெற்றி இலக்கம் 32402

# கிழக்கின் குரல்



## ரூ.50 மில்லியன் செலவில் அமைக்கப்பட்ட வெருகல் கட்டையாறு பாலம் திறந்து வைப்பு

(ரொட்டவெவ குறூப் நிருபர்)





திருகோணமலை வெருகல் பகுதியில் 50 மில்லியன் ரூபா செலவில் அமைக்கப்பட்ட கட்டையாறு பாலம் மக்கள் பாவனைக்கு கையளிக்கப்பட்டது.

இராஜாங்க அமைச்சர் சிவநேசத்துரை சந்திரகாந்தனின் முயற்சியால் கிராமிய வீதிகள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சின் நிதி ஒதுக்கீட்டின் கீழ் வெருகல் பகுதியில் கட்டையாறு பாலம் அமைக்கப்பட்டுள்ளது. பாலத்தை மக்கள் பாவனைக்காக கையளிக்கும் நிகழ்வு இராஜாங்க அமைச்சர் சிவநேசத்துரை சந்திரகாந்தன் தலைமையில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. 50 மில்லியன் ரூபா செலவில் அமைக்கப்பட்ட வெருகல் கட்டையாறுப் பாலத்தின் மூலம் வெருகல் பிரதேச செயலகப் பிரிவைச் சேர்ந்த சுமார் 1500க்கும் மேற்பட்ட விவசாயிகள் நன்மையடையவுள்ளனர்.

இந்நிகழ்வில் கிராமிய வீதிகள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் சிவநேசத்துரை சந்திரகாந்தன், திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் கபில நுவான் அத்துகோரல, வீதி அபிவிருத்தி திணைக்களத்தின் கிழக்கு மாகாண பணிப்பாளர் பிரதம பணிப்பாளர், வெருகல் பிரதேச செயலாளர் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.

## காசாவுக்கான மனிதாபிமான பங்களிப்பு




(பெரியநீலவணை தினகரன் நிருபர்)

கல்முனை வலயக் கல்வி அலுவலகத்தினால் யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட காசா மக்களுக்கான மனிதாபிமான நடவடிக்கைக்கு ரூ. 3 இலட்சம் கையளிக்கப்பட்டுள்ளது.

வலயக் கல்வி அலுவலகத்தில் வலயக் கல்விப்பணிப்பாளர் தலைமையில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற இப்தார் நிகழ்வின் போதே காசோலை வழங்கப்பட்டுள்ளது.


வலயக் கல்விப் பணிப்பாளர் எம்.எஸ்.சஹூதுல் நஜீமிடம் கணக்காளர் வை.ஹபீபுல்லாஹ் முதற்கட்ட காசோலையை வழங்கி வைத்தார். இந்நிகழ்வில் பிரதிக் கல்விப் பணிப்பாளர் எம்.எச்.எம்.ஜாபிரும் பங்கேற்றிருந்தார்.

வலயக் கல்விப் பணிப்பாளரின் வழிகாட்டலுக்கமைய கணக்காளரின் நெறிப்படுத்தலில் வலயக்கல்வி அலுவலக கல்விசார், கல்விசாரா ஊழியர்கள் மற்றும் அதிபர்களின் நிதிப்பங்களிப்புடன் இத்தொகை வழங்கி வைக்கப்பட்டுள்ளது.

வருடந்தோறும் இடம்பெறும் இப்தார் நிகழ்வுக்கான செலவீனத்தை மட்டுப்படுத்தியே இத்தொகை திரட்டப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் முன்வைப்புக்கு அமைவாகவே வழங்கப்பட்டுள்ளது.

## இளைஞர் சேவை மன்றத்தின் பணிப்பாளர் நாயகத்தை சந்தித்த நிந்தவூர் பிரதேச இளைஞர்கள்



(மருதமுனை தினகரன் விசேட நிருபர்)

நிந்தவூர் பிரதேச இளைஞர்களை கல்வி, விளையாட்டு மற்றும் பல்வேறு துறைகளில் முன்னேற்றுவதற்கான விசேட சந்திப்பொன்று இலங்கை இளைஞர் சேவைமன்றத்தின் தலைவரும் பணிப்பாளர் நாயகமுமான குணரத்னவுடன் நடைபெற்றது.

இந்நிகழ்வில் நிந்தவூர் இளைஞர் சேவை அதிகாரி எம்.ஐ.பரீட் மற்றும் நிந்தவூர் இளைஞர் கழக சம்மேளன தலைவர் எம்.ஏ. பஹாத் ஆகியோர் கலந்து கொண்டனர்.

திருக்கோவில் வைத்தியசாலை விவகாரம்

## அபிவிருத்தி குழுவுடனான பேச்சு இணக்கப்பாடின்றி நிறைவு

(காரைதீவு குறூப் நிருபர்)




திருக்கோவில் ஆதார வைத்தியசாலையை மீண்டும் ஆரம்பிப்பது தொடர்பில் வைத்தியசாலை அபிவிருத்தி குழுவினருக்கும் அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தினருக்கும் இடையில் கொழும்பில் நடைபெற்ற பேச்சுவார்த்தை தோல்வியில் முடிந்ததாக தெரிவிக்கப்படுகின்றது.

வைத்தியசாலை அபிவிருத்திக் குழுவினர் தமது பக்கமுள்ள நியாயங்களை எடுத்து கூறினர். இச்சம்பவம் தொடர்பில் பொலிஸார் இதுவரை எட்டு பேரை கைது செய்து நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தியுள்ளதுடன் விளக்கமறியலிலும் வைத்துள்ளனர். வைத்தியசாலை மூடிக் கிடப்பதால் அப்பாவி பொதுமக்கள் தொடர்ச்சியாக பாதிக்கப்பட்டு வருகின்றனர். எனவே வைத்தியசாலையை திறந்து சுகாதார சேவையை மக்களுக்கு வழங்குமாறு கோரிக்கை விடுத்துள்ளனர்.

இதற்கு பதிலளித்த அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம்,

இத்தாக்குதலில் சம்பந்தப்பட்டவர்கள் அனைவரும் கைது செய்யப்பட வேண்டும். எமது பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட்டால் மட்டுமே நாங்கள் வைத்தியசாலையை திறப்பதற்கு உடன்படுவோம். அதுவரை எமது போராட்டம் தொடரும் என தெரிவித்தனர்.

## கொக்கட்டிச்சோலையில் கலாசார நிகழ்வு

(மட்டக்களப்பு சுழற்சி நிருபர்)

மட்டக்களப்பு கொக்கட்டிச்சோலை பகுதியில் இராணுவத்தினர் ஏற்பாடு செய்த பாடசாலை மாணவர்களுக்கான பிறமொழி போதித்தல் பயிற்சி நெறியின் ஆரம்ப நிகழ்வும் புத்தாண்டு கலாசார நிகழ்வுகளும் நேற்றுமுன்தினம் மாலை கொக்கட்டிச்சோலை ராமகிருஷ்ண மிஷனில் நடைபெற்றன.

இராணுவத்தின் 143 ஆவது படைப்பிரிவின் கட்டளை அதிகாரி பிரிகேடியர் சந்திமவீரகொடியின் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் இராணுவத்தின் கிழக்கு மாகாண தளபதி மேஜர்ஜெனரல் பிரசன்ன குணரத்தின பிரதம அதிதியாக கலந்து கொண்டு சிறப்பித்தார். இனங்களுக்கிடையே நல்லுறவை வளர்க்கும் நோக்கில் இந்நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.





பக்கீரான்வெட்டை மக்களின் நீண்டகால கோரிக்கையாகவுள்ள பொதுவிளையாட்டு மைதானத்துக்கான காணியை பெற்றுக் கொடுப்பது தொடர்பில் பிரதேச பள்ளிவாசல் நிர்வாகம், விளையாட்டுக் கழக உறுப்பினர்கள் மற்றும் காணி உரிமையாளர்களுடன் பேச்சுவார்த்தை நடாத்தப்பட்டதுடன் அச்சந்திப்பில் சில முக்கியமான தீர்மானங்களும் எடுக்கப்பட்டன.

கிழக்கில்

## ஆசிரிய வெற்றிடங்களை நிரப்ப நடவடிக்கை

(நற்பிட்டிமுனை தினகரன், ஒலுவில் விசேட நிருபர்கள்)

கிழக்கு மாகாணத்திலுள்ள மாகாணப் பாடசாலைகளில் நிலவுகின்ற சிங்கள மற்றும் தமிழ் மொழிமூல ஆசிரியர் வெற்றிடங்களுக்காக இலங்கை ஆசிரியர் சேவை 3(அ) தரத்துக்கு பட்டதாரிகளை ஆட்சேர்ப்பு செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சைக்கு விண்ணப்பம் கோரப்பட்டுள்ளதாக, கிழக்கு மாகாண பொதுச் சேவை ஆணைக் குழுவின் செயலாளர் ஏ. மன்சூர் தெரிவித்தார்.

விண்ணப்பதாரி கிழக்கு மாகாணத்தை நிரந்தர வதிவிடமாக கொண்ட பட்டதாரியாகவும் அல்லது விண்ணப்ப முடிவுத் திகதிக்கு முன்னர் மூன்று வருடங்களோ அல்லது அதற்கு அதிக காலமோ தொடர்ச்சியாக கிழக்கு மாகாணத்தில் வசித்திருத்தல் அத்துடன் 35 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும்.

க.பொ.த சாதாரண தரப் பரீட்சையில் சிங்களமொழி அல்லது தமிழ்மொழி பாடத்தில் கட்டாயம் சித்தியடைந்திருக்க வேண்டும், மற்றும் பட்டத்தை பெறுவதற்காக பயின்ற பிரதான பாடங்களுக்கு அமைவாக மாத்திரம் வெற்றிடம் நிலவும் பாடத்திற்காக விண்ணப்பிக்க முடியுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

பட்டம் சார்ந்த பாடங்கள் மற்றும் விண்ணப்பிக்கும் பாடம் தொடர்பிலான பிரச்சினைகள் சம்பந்தமான இறுதி முடிவு கிழக்கு மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுவினால் எடுக்கப்படுமென தெரிவித்தார்.

விண்ணப்பங்கள் எதிர்வரும் ஏப்ரல் மாதம் 08ம் திகதிக்கு முன்னர் பதிவுத் தபாலில் செயலாளர், மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு, கிழக்கு மாகாணம், 198, உட்துறைமுக வீதி, திருகோணமலை எனும் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறும் அறிவித்துள்ளார்.

## காத்தான்குடி ஆதார வைத்தியசாலையில் இப்தார் நிகழ்வு



(புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்)

காத்தான்குடி ஆதார வைத்தியசாலையில் புனித நோன்பு திறக்கும் இப்தார் நிகழ்வு நேற்றுமுன்தினம் மாலை வைத்தியசாலை மண்டபத்தில் நடைபெற்றது.

வைத்தியசாலை ஊழியர்கள் கூட்டுறவு நலன்புரி சங்கத்தின் ஏற்பாட்டில் இப்தார் நிகழ்வு நடைபெற்றது.

காத்தான்குடி ஆதார வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகரும் அதன் கூட்டுறவு நலன்புரி சங்கத்தின் தலைவருமான டொக்டர் எம். எஸ் .எம். ஜாபீர் தலைமையில் நடைபெற்ற இப்தார் நிகழ்வில் மட்டக்களப்பு கல்லடி 243 ஆவது இராணுவ முகாம் கட்டளை அதிகாரி பிரிகேடியர் சந்திம குமாரசிங்க, காத்தான்குடி பொலிஸ் நிலைய பதில் பொறுப்பதிகாரி கஜநாயக்கா, கோவில் குளம் இராணுவ பொறுப்பதிகாரி மற்றும் காத்தான்குடி சுகாதார வைத்திய அதிகாரி டொக்டர் யூ.எல். நஸ்ருதீன் உட்பட வைத்தியர்கள் காத்தான்குடி ஆதார வைத்தியசாலையின் ஊழியர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

## 'ஆணிகள் வரைந்த ஓவியம்' மட்டக்களப்பில் பாஸ்கா நாட்டிய நாடகம்

(புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்)



மட்டக்களப்பில் 'ஆணிகள் வரைந்த ஓவியம்' எனும் தொனிப்பொருளில் பாஸ்கா நாட்டிய நாடகம் காந்தி பூங்கா திறந்தவெளியில் நடைபெற்றது.

புத்தசாசன மத மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சு மற்றும் மண்முனை வடக்கு கலாசார மத்திய நிலையம் இணைத்து நடாத்திய 'ஆணிகள் வரைந்த ஓவியம்' பாஸ்கா நாட்டிய நாடக நிகழ்வில், பிரதம விருந்தினராக மட்டக்களப்பு மாவட்ட ஆயர். அதி. வணக்கத்துக்குரிய அருட் கலாநிதி பொன்னையா ஜோசப் ஆண்டகை கலந்து கொண்டதுடன் கௌரவ அதிதியாக மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ஜஸ்டினா முரளிதரன் கலந்து கொண்டார்.

கிறிஸ்தவர்களின் புனித வாரத்தை நினைவு கூறும் முகமாக மண்முனை வடக்கு கலாசார மத்திய நிலைய மாணவிகளின் நடிப்பில் பாஸ்கா நிகழ்வுகள் முதன் முறையாக திறந்த வெளியில் கலாசார உத்தியோகத்தர் திருமதி ரஞ்சித் அமிலினியின் நெறியாக்கத்தின் கீழ் அரங்கேற்றப்பட்டது.

இதன்போது புனித சிசிலியா தேசிய பாடசாலை மாணவி ரவிக்குமார் ஷயனாவினால் பாஸ்காவை பிரதிபலிக்கும் ஓவியம் அதிதிகளுக்கு வழங்கப்பட்டது

அதேசமயம் இந்நிகழ்வில் கலைஞர்களுக்கு அதிதிகளினால் மலர் மாலை அணிவித்து கௌரவம் வழங்கப்பட்டது.

இந்நிகழ்வில் அருட் தந்தையர்கள், அருட் சகோதரிகள், புத்தசாசன மத மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சின் மேலதிக செயலாளர் திலக் நந்தன ஹெட்டியாரச்சி, மட்டக்களப்பு மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் திருமதி சுதர்ஷினி ஸ்ரீகாந்த், 231 படைப்பிரின் கட்டளைத் தளபதி பிரிகேடியர்,மண்முனை வடக்கு பிரதேச செயலாளர் வி. வாசுதேவன், மற்றும் உயர் அதிகாரிகள், பொதுமக்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

## சம்பூர் தமிழ்க் கலாமன்றத்தின் ஒழுங்கமைப்பில் "கடாட்சம்"நூல் வெளியீடு

(தம்பலகாமம் குறூப் நிருபர்)

சம்பூர் தமிழ்க்கலாமன்றத்தின் ஒழுங்கமைப்பில் "கடாட்சம்" நூல் வெளியீடும் இலக்கியப் பணிக்கான பாராட்டு நிகழ்வும் எதிர்வரும் 29ஆம் திகதி காலை 9.15 மணிக்கு திருகோணமலை பொது நூலக மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வு சம்பூர் தமிழ்க்கலா மன்றத்தின் தலைவர் மருத்துவர் அ . சதீஸ்குமார் தலைமையில் நடைபெறவுள்ளது. மங்கல விளக்கேற்றல், இறைவணக்கம், வரவேற்புரை, நூல் நயவுரை, நூல் வெளியீடு, கருத்துரைகள், பாராட்டு நிகழ்வு என்பனவும் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.



பாலமுனை மின்ஹாஜ் மகா வித்தியாலயத்துக்கு அட்டாளைச்சேனை பிரதேச செயலகத்தின் நிதியுதவியுடன் கரம்போட் வழங்கப்பட்டுள்ளது. சிறுவர் உரிமைகள் மேம்பாட்டு உத்தியோகத்தர் ஏ.எம். கஸ்பியா வீவி, சிறுவர் பாதுகாப்பு உத்தியோகத்தர். எஸ்.எச்.சியாத் ஆகியோர் இணைந்து பாடசாலை மாணவர்களிடம் இதை, வழங்கினர். (படம்: பாலமுனை தினகரன் நிருபர்)

# அமைச்சரவை தீர்மானங்கள்

**மூலோபாய முக்கியத்துவம் கொண்ட இரண்டாம்நிலை வணிகம்**

மென்பொருள் தரவு விஞ்ஞானம், படைப்பாக்கம் மற்றும் வன்பொருள் விடயஞ்சார் துறைகளில் தொழிநுட்ப ரீதியான தீர்வுகளை வழங்குகின்ற நிபுணத்துவத்தைக் கொண்டுள்ள கம்பனி கொழும்பு துறைமுக நகர பொருளாதார ஆணைக்குழு மூலம் அங்கீகாரம் பெற்றதாக அனுமதி வழங்கப்பட்டுள்ளதுடன், இக் கம்பனி மூலோபாய முக்கியத்துவம் கொண்ட இரண்டாம் நிலை வணிகமாகப் பெயரிடுவதற்காக விண்ணப்பித்துள்ளது. கம்பனி, 5,00,000 அமெரிக்க டொலர்களை ஆரம்ப முதலீடாகவும், 05 வருடங்களாகும் போது அண்ணளவாக 15 மில்லியன் அமெரிக்க டொலர்களை ஈட்டுவதற்கும், குறித்த காலப்பகுதியில் கிட்டத்தட்ட 400 வேலைவாய்ப்புக்களை உருவாக்குவதற்கும் திட்டமிடப்பட்டுள்ளது. அதனால், 2023 ஆண்டின் 02 ஆம் இலக்க கொழும்பு துறைமுக நகர (மூலோபாய முக்கியத்துவம் கொண்ட வணிகத்திற்கு விடுவித்தல் அல்லது ஊக்குவிப்பு அளிப்புக்கள் தொடர்பான வழிகாட்டல்) ஒழுங்குவிதிகளின் ஏற்பாடுகளுக்கமைய குறித்த கம்பனியை விடுவித்தல் அல்லது ஊக்குவித்தல் கையளிப்புக்கான தகைமைகளைக் கொண்டுள்ளது. அதற்கமைய, கொழும்பு துறைமுக நகர பொருளாதார ஆணைக்குழு சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய, விடுவிப்பதற்கும் அல்லது ஊக்குவிப்பு கையளிப்புக்கும், அதற்கான விதியை வர்த்தமானியில் வெளியிடுவதற்கும் முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சராக ஜனாதிபதி சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.




**இலங்கை கொடியின் கீழ் கப்பல்கள் பதிவு**

கப்பல் பதிவுகளை மேற்கொள்வது, உள்நாட்டுப் பொருளாதாரத்துக்கு அதிகளவில் வெளிநாட்டு செலாவணி கிடைக்கின்ற முக்கிய வழியாக அமைவதுடன்,நேரடி மற்றும் மறைமுக தொழில் வாய்ப்புக்கள் பலவற்றை உருவாக்குவதற்குமான ஆற்றல் வளம் காணப்படுகின்றது. இலங்கைக் கொடியின் கீழ் கப்பல்களைப் பதிவு செய்வதை ஊக்குவிப்பதற்காக தகைமை கொண்ட உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு நிறுவனங்களிடமிருந்து விருப்பக் கோரல்களைப் பெறுவதற்கும் முன்மொழிவுகளைப் பெற்றுக் கொள்வதற்கும் தொழிநுட்ப மதிப்பீட்டுக் குழுவின் மூலம் முன்மொழிவை மதிப்பீடு செய்து பெறுகைக் குழுவின் விதந்துரைகளின் அடிப்படையில் மிகவும் பொருத்தமான நிறுவனத்தைத் தெரிவு செய்வதற்கும் துறைமுகங்கள், கப்பல்துறை மற்றும் விமான சேவைகள் அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**கொரிய தேசிய தொழிற்பயிற்சி நிறுவன பயிற்சிப் பாடநெறி**

ஒறுகொடவத்த இலங்கை – கொரிய தேசிய தொழிற்பயிற்சி நிறுவனம் கொரிய ஏற்றுமதி இறக்குமதி வங்கியால் வழங்கப்பட்ட 2,900 மில்லியன் ரூபா உதவியுடன் நிர்மாணிக்கப்பட்டுள்ளதுடன் இந்நிறுவனத்தால் மேற்கொள்ளப்படும் பாடநெறிகள் மற்றும் நிறுவனத்தில் காணப்படும் வசதிகளை மேலும் மேம்படுத்துவதற்காக 1.5 மில்லியன் அமெரிக்க டொலர்கள் நிதியளிப்பை வழங்குவதற்கு கொரிய ஏற்றுமதி இறக்குமதி வங்கி உடன்பாடு தெரிவித்துள்ளது.

மேலும், 16 மாதகாலம் நடைமுறைப்படுத்துவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள இக் கருத்திட்டத்தின் கீழ், மோட்டார் வாகன தொழிநுட்பம், உற்பத்தித் தொழிநுட்பம் உருக்கு ஒட்டுத் தொழிநுட்பம், மின்னியல் தொழிநுட்பம், இலத்திரனியல் தொழிநுட்பம், தானியக்கவியல் மற்றும் றொபோ தொழிநுட்பம், திரவ அமுக்க தொழிநுட்பம், மெகாரொனிக் தொழிநுட்பம் உள்ளிட்ட அனைத்து பாடநெறிகளிலும் பொதுத் தேவைகளுக்காக வசதிகளை வழங்குவதே நோக்கமாக அமைகின்றது.

முன்மொழியப்பட்டுள்ள கருத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காக இரு தரப்பினர்களுக்கிடையே கையொப்பமிடுவதற்கான புரிந்துணர்வு ஒப்பந்த வரைபுக்கு சட்டமா அதிபரின் ஒப்புதலும், வெளிவிவகார அமைச்சு மற்றும் வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்தின் உடன்பாடு கிடைத்துள்ளது. அதற்கமைய, குறித்த புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையொப்பமிடுவதற்காக கல்வி அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**நெடுஞ்சாலைகள் சஹஸ்யா இன்வெஸ்ட்மென்ட் நிறுவனத்திடம் ஒப்படைப்பு**

நெடுஞ்சாலைகள் வலைப்பின்னல், நெடுஞ்சாலைகளுக்குச் சொந்தமான காணிகள், நெடுஞ்சாலைகளுக்கான கடன்கள் (உள்நாட்டு) மற்றும் ஏற்புடைய பணிக்குழாமினரை மிகவும் வணிக ரீதியாக முகாமைத்துவம் செய்வதற்கு இயலுமாகும் வகையில் வீதி அபிவிருத்தி அதிகாரசபையிலிருந்து வேறாக்கி சஹஸ்யா இன்வெஸ்ட்மென்ட் லிமிட்டட் இற்கு வழங்குவதற்காக அமைச்சரவைக் கூட்டத்திலும் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

அதற்கமைய, நெடுஞ்சாலைகளின் நாளாந்த நடவடிக்கைகள் மற்றும் முகாமைத்துவ நடவடிக்கைகள் 2024.04.01 தொடக்கம் முறைசார்ந்த முகாமைத்துவ ஒப்பந்தத்தின் கீழ் சஹஸ்யா இன்வெஸ்ட்மென்ட் லிமிட்டட் இற்கு ஒப்படைப்பதற்கும், வீதி அபிவிருத்தி அதிகாரசபை மற்றும் சஹஸ்யா இன்வெஸ்ட்மென்ட் லிமிட்டட் கூட்டாக மேற்கொள்கின்ற சட்டம் மற்றும் நிதி ரீதியான சாத்தியவளக் கற்கையின் பின்னர் குறித்த அனைத்துச் சொத்துக்களும் 06 மாதகாலத்தில் சஹஸ்யா இன்வெஸ்ட்மென்ட் லிமிட்டட் டிற்கு ஒப்படைப்பதற்கும் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**இலங்கையில் மிளகு உற்பத்தி சர்வதேச மாநாடு**

உலகில் மிளகு உற்பத்தி செய்கின்ற பிரதான நாடுகள் இணைந்து 1972 ஆம் ஆண்டில் ஆசிய மற்றும் பசுபிக் பிராந்தியங்களில் ஐக்கிய நாடுகள் சபையின் பொருளாதார மற்றும் சமூகப் பேரவையின் கீழ் சர்வதேச மிளகு உற்பத்தி சமூகங்கள் எனும் பெயரில் சர்வதேச அமைப்பொன்று தாபிக்கப்பட்டுள்ளது. இவ்வமைப்பின் பிரதான நிரந்தர உறுப்பு நாடுகளாக இலங்கை, இந்தியா, இந்தோனீசியா, மலேசியா மற்றும் வியட்நாம் போன்ற நாடுகள் செயற்படுகின்றன.

சர்வதேச வர்த்தகத்தில் இறக்குமதி வரி மற்றும் இறக்குமதி வரி அல்லாத தடைகளை தளர்த்துவதற்காக ஒத்துழைப்புக்களை ஏற்படுத்திக் கொள்ளல் போன்ற விடயங்கள் பற்றிய உடன்பாடுகளை எட்டும் நோக்கில் சர்வதேச மிளகு உற்பத்தி சமூகத்தின் 52 ஆவது சர்வதேச மாநாட்டை இவ்வாண்டு இலங்கையில் நடாத்துவதற்காக விவசாய மற்றும் பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**சூரிய சக்தி மின்னுற்பத்தி நிலைய கருத்திட்டம்**

பதினொரு (11) மின் கட்டமைப்பு உப நிலையங்களில் 01 MW – 05 MW – AC கொள்ளவு கொண்ட 70 MW கொள்ளவை நிறுவுவதற்காக சூரிய சக்தி வோலிரியாதா மின்னுற்பத்தி நிலையத்தை அமைக்கும் கருத்திட்டத்தின் கிழ் 20 வருடகால நடவடிக்கை காலப்பகுதியுடன் கூடிய நிர்மாணித்தல், உரித்துக் கொள்ளல் மற்றும் அமுல்படுத்தல் அடிப்படையில் நிர்மாணிப்பதற்காக 05 மின்கட்டமைப்பு உப நிலையங்களில் 51ஆறு விநியோத்திற்கு ஒப்பந்தத்தை வழங்குவதற்காக 2023.10.02 அன்று இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

மின்னுற்பத்தி நிலையத்தை அமைப்பதற்கான ஒப்பந்தத்தை ஏற்புடைய முதலீட்டாளர்களுக்கு வழங்குவதற்காக மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சர் சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**பாராளுமன்ற அங்கீகாரத்துக்காக கட்டளையொன்றை சமர்ப்பித்தல்**

இலங்கை – சிங்கப்பூர் சுதந்திர வர்த்தக ஒப்பந்தத்தின் கீழ் இலங்கையில் தீர்வை வரியை தளர்த்தும் வேலைத்திட்டத்தை மீண்டும் நடைமுறைப்படுத்துவதற்காக 2023.05.29 அன்று நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

இக் கட்டளையை பாராளுமன்ற அங்கீகாரத்துக்காக சமர்ப்பிப்பதற்காக நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சராக ஜனாதிபதி சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தை தற்காலிகமாக இடைநிறுத்தல்**

210 இயைபு முறைக் குறியீடுகளின் கீழ் வகைப்படுத்தல்களுக்கான 64 பொருட்களை இறக்குமதி செய்யும் போது வசதியளிப்பதற்காக தனிக்கூட்டு வரி அறவீட்டுக்காக 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் கீழ் விசேட வியாபாரப் பண்ட வரி விதிக்கப்பட்டுள்ளது.

குறித்த வரி அறவீட்டை நடைமுறைப்படுத்தும் போது எழுந்துள்ள பல்வேறு பிரச்சினைகளால் இவ்வரி அறவீட்டுச் சட்டத்தை இடைநிறுத்த வேண்டிய தேவை கண்டறியப்பட்டுள்ளது.

அதற்கமைய, குறித்த சட்டத்தை இடைநிறுத்துவதற்காக சட்டமூலமொன்றை தயாரிக்குமாறு சட்டவரைஞருக்கு ஆலோசனை வழங்குவதற்காக நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சராக ஜனாதிபதி சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.



கொழும்பு ஷங்கரிலா ஹோட்டல் நிர்வாகத்தினரின் ஏற்பாட்டில் நேற்றுமுன்தினம் (25) மாலை இடம்பெற்ற இப்தார் நிகழ்வின் போது எடுக்கப்பட்ட படங்கள். புரவலர் ஹாசிம் உமர் உட்பட அரசியல் மற்றும் வர்த்தக பிரமுகர்கள் பலரும் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர்.

metropolitan

கொழும்பு-2, பிறேபுறூக் பிளேஸ், 85 ஆம் இலக்கத்திலிருந்து தற்போது செயற்படும்

**மெட்ரோபொலிட்டன் குரூப் இன் கோர்பரேட் அலுவலகம்**

மற்றும்

செயற்பாடுகள் 2024 ஏப்ரல் 1 ஆம் திகதியிலிருந்து செயல்வலுப்பெறும் வகையில் 2024 ஏப்ரல் 1 ஆம் திகதியிலிருந்து கொழும்பு-8, மகசின் வீதி, 12 ஆம் இலக்கத்திலுள்ள எமது செயற்பாடுகள் மையத்திற்கு தற்காலிகமாக எடுத்துச் செல்லப்பட்டுள்ளதென எமது பெறுமதிமிக்க வாடிக்கையாளர்களுக்கும் பொது மக்களுக்கும் இத்தால் அறிவிக்கின்றோம்.

---

2024 ஓகஸ்ட் 1 ஆம் திகதியிலிருந்து செயல்வலுப்பெறும் வகையில் எமது செயற்பாடுகளை நுகேகொட, நாவல, நாவல வீதி, 150 ஆம் இலக்கத்திலுள்ள

**Metrocorp Corporate Headquarters**

இலிருந்து ஆரம்பிப்போம்.




# 2023ஆம் ஆண்டில் 40.3 பில்லியன் ரூபா லாபம் ஈட்டியுள்ளது இலங்கை வங்கி!

## வரிக்கு முந்தைய லாபம் 40.3 பில்லியன் ரூபா

உலகமும் இலங்கையும் பொருளாதார நெருக்கடிகளுக்கு முகங்கொடுத்து வருகின்ற நிலையிலும் இலங்கை வங்கியானது 2023 டிசம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான வரிக்கு முந்தைய இலாபமாக 40.3 பில்லியன் ரூபாயை ஈட்டியுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

இது திரவத்தன்மை, மூலதனம், செயற்திறன், இலாபம் மற்றும் சொத்துத் தரம் உள்ளிட்ட பல்வேறு பகுதிகளிலும் இலங்கை வங்கி வெளிப்படுத்தியுள்ள வலுவானதும் நிலையானதுமான செயற்திறனைக் காட்டி நிற்கிறது.

தொழிற்துறைப் போட்டியும் சவாலும் மிகுந்த சூழலிலும் இலங்கை வங்கியால் இத்தகையவொரு சாதனையை நிகழ்த்த முடிந்ததெனின் அதற்கு அதன் தொழில் நிபுணத்துவமும் அனுபவமும் வாய்ந்த ஆளணியே காரணம் எனலாம். இந்த ஆளணியே நலிவடைந்து சென்ற வணிகத் துறைகளை வியாபாரப் புத்துயிர்ப்பு மற்றும் மறுசீரமைப்பு உத்திகள் மூலம் இலாபம் ஈட்டும் நிறுவனங்களாக மாற்றியது.

கடந்த சில வருடங்களில் ஏற்பட்ட அனைத்துச் சவால்களையும் வங்கி வெற்றிகரமாகச் சமாளித்துள்ளதுடன், மூலோபாய ரீதியாக உடனடி நடவடிக்கைகள் எடுக்கப்பட்டதால் வங்கியின் வியாபாரத் தொடர்ச்சி பேணப்பட்டதோடு எங்களின் பெறுமதியான பங்குதாரர்களுக்கு தடையற்ற சேவைகளையும் ஆற்ற முடிந்தது. வெளிநாட்டு நாணயப் பற்றாக்குறையை நிர்வகிப்பது ஒரு சவாலான பணியாகும்.

எரிசக்தி மற்றும் அத்தியாவசியப் பொருட்களை இறக்குமதி செய்வதற்கான வெளிநாட்டு நாணயத் தேவைகளை எளிதாக்க வங்கி தனது அனைத்து முயற்சிகளையும் எடுத்தது. இருப்பினும், வங்கியின் நீண்டகால மூலோபாய முன்னுரிமைகளில் சமரசம் செய்யாமல், நிதி நிலையை வலுப்படுத்துவதை மையமாகக் கொண்டு குறுகிய கால உத்திகள் கவனமாக நிர்வகிக்கப்பட்டன.

வங்கியானது 40.3 பில்லியன் ரூபாய் வரிக்கு முந்தைய இலாபத்தை எட்டியிருந்தது. இதில் வட்டி வருமானத்தில் நிகழ்ந்த 15 சதவீதம் அதிகரிப்பு முக்கிய செல்வாக்குச் செலுத்துகிறது. இலங்கை ரூபாயின் மதிப்பு உயர்வு மற்றும் குறைந்த வட்டி விகிதம் போன்ற சவால்கள் காணப்பட்ட போதிலும், வங்கியின் வைப்புத்தளம் 16 சதவீதத்தால் அதிகரித்து 3.9 டிரில்லியன் ரூபாயை எட்டியுள்ளது.



# வோக் ஜுவல்லர்ஸ் இப்புத்தாண்டில் வழங்கும் மகத்தான சலுகைகள்– பழைய நகைகளை புதிய நகைகளாக மாற்றிக் கொள்ள வாய்ப்பு

வோக் ஜுவல்லர்ஸ் இப்புத்தாண்டில் வழங்கும் பல்வகைப்பட்ட பிரத்தியேக சலுகைகள் மூலமாக, உங்களுடைய பழைய நகைகளுக்கு பதிலாக, காலத்தால் அழியாது, உங்கள் வாழ்நாள் முழுவதும் மறக்க முடியாத நினைவுகளைத் தோற்றுவிக்கும் நகைகளைப் பெற்றுக்கொள்ளுங்கள்.

2024 மார்ச் 18 முதல் ஏப்ரல் 11 வரை இடம்பெறுகின்ற கொள்வனவு = விற்பனை (Buying = Selling Promotion) என்ற ஊக்குவிப்புச் சலுகையின் மூலமாக, எவ்விதமான செய்கூலியும் இல்லாமல், தங்கத்தின் விலைக்கே 22 கரட் காப்பு மற்றும் சங்கிலி அடங்கிய தொகுப்பை நீங்கள் பெற்றுக் கொள்ள முடியும்.

இச்சலுகை இடம்பெறும் காலப் பகுதியில் வைரங்கள் மற்றும் விலைமதிப்பற்ற கற்களுக்கு 50% என்ற நேரடி விலைத்தள்ளுபடியையும் நீங்கள் பெற்றுப் பயனடைய முடியும்.

உங்களுடைய பழைய வைர நகைகள் சலித்துப்போய் விட்டால், நவீன வடிவமைப்புக்கள் மற்றும் போக்குகளுக்கு ஏற்ப, வோக் ஜுவல்லர்ஸ் வழங்கும் புதிய மற்றும் கவர்ச்சியான நகைகளாக அவற்றை இலகுவாக மாற்றிக்கொள்ளுங்கள்.



இவற்றுக்குப் புறம்பாக, 2024 ஏப்ரல் 15 முதல் 30 வரை ரூபா 500,000க்கு மேற்பட்ட தொகைக்கு கொள்வனவை மேற்கொள்கின்ற வோக் ஜுவல்லர்ஸ் வாடிக்கையாளர்கள் அனைவரும் 1 கிராம் தங்க நாணயத்தை முற்றிலும் இலவசமாகப் பெற்றுக்கொள்வர். இந்த ஒப்பற்ற புத்தாண்டுச் சலுகைகளின் பயன்களை அனுபவிக்க எந்தவொரு வோக் ஜுவல்லர்ஸ் காட்சியறைக்கும் விஜயம் செய்யுங்கள்.

# அமானா வங்கியின் கெலிஓய சுய வங்கிச் சேவை நிலையம் ஆரம்பம்



நாடு முழுவதிலும் இலகுவில் அணுகக்கூடிய மற்றும் சௌகரியமான வங்கிச் சேவைகளை அனுபவிக்கும் வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்கும் அமானா வங்கியின் அர்ப்பணிப்பின் பிரகாரம், அதன் புதிய சுய வங்கிச் சேவை நிலையம் கெலிஓய பிரதேசத்தில் அண்மையில் திறந்து வைக்கப்பட்டுள்ளது. இல. 34/A கம்பளை வீதி, கெலிஓய எனும் முகவரியில் இந்த சுய வங்கிச் சேவை நிலையம் நிறுவப்பட்டுள்ளதுடன், அமானா வங்கியின் 61 ஆவது வாடிக்கையாளர் சேவைப் பகுதியாகவும் அமைந்துள்ளது.

வங்கியின் பிரதம செயற்பாட்டு அதிகாரி இம்தியாஸ் இக்பால், கண்டி கிளையின் வியாபார தலைமை அதிகாரி அசாம் அமீர், கம்பளை கிளை முகாமையாளர் மொஹமட் ஹஷீப், மாவனல்ல கிளை முகாமையாளர் – மொஹமட் ராசிக், உள்நாட்டு வியாபார பிரதிநிதிகள் மற்றும் பிரதேசவாசிகள் என பலரும் இந்த சுய வங்கிச் சேவை நிலையத்தின் திறப்பு விழாவில் கலந்து கொண்டனர். வங்கியின் கம்பளை கிளையின் மேற்பார்வையின் கீழ் இந்த நிலையம் இயங்கும். கெலிஓய சுய வங்கிச் சேவை நிலையத்தினூடாக, பண மீளப்பெறல்கள், பண வைப்பு மற்றும் காசோலை வைப்பு போன்ற அனைத்து வசதிகளும் எந்நேரமும் வழங்கப்படும்.

விரிவாக்கம் தொடர்பில் பிரதம செயற்பாட்டு அதிகாரி இம்தியாஸ் இக்பால் கருத்துத் தெரிவிக்கையில், "கெலிஓயவுக்கு எமது வலையமைப்பை விஸ்தரிப்பதையிட்டு நாம் மிகவும் மகிழ்ச்சியடைகின்றோம். கெலிஓயவில் எமது சுய வங்கிச் சேவை நிலையத்தை நிறுவியுள்ளோம். அதனூடாக, மக்களுக்கு நட்பான எமது வங்கியியல் மாதிரியை பொது மக்களுக்கு அனுபவிப்பதற்கான வாய்ப்பை ஏற்படுத்தியுள்ளோம்." என்றார்.

# மூளைசாலிகள் வெளியேற்றத்தை தடுக்க ஒப்பந்தம் கைச்சாத்து




உயர்கல்வித்துறையைப் புரட்சி செய்து இலங்கையில் மூளைசாலிகள் வெளியேற்றம் (brain drain) தொடர்பான பிரச்சினையை நிவர்த்தி செய்யும் இலக்கை அடிப்படையாகக் கொண்டு டிரைன்கேட்(Trainocate) நிறுவனமும் BCAS நிறுவனமும் ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டுள்ளன.

தொழில்முறை வளர்ச்சியை மேம்படுத்துவதிலும், மைக்ரோசாப்ட் அடிப்படை திட்டங்களை (Microsoft Fundamental Programs) பல்கலைக் கழக கற்பித்தல் திட்டத்தில் இணைப்பதிலும் கவனம் செலுத்தும் இந்தக் கூட்டு செயற்பாடு, கல்வித்துறைக்கும், தொழிற்துறைக்கும் இடையிலான இடைவெளியைக் குறைப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

உலகளாவிய பல்வேறு விற்பனையாளர் திட்டங்களில் நிபுணத்துவம் பெற்ற நிறுவனங்களில், தொழில்துறை தேவைகளைப் பூர்த்தி செய்யக் கூடிய தகவல் தொழில்நுட்ப நிபுணர்களின் தேவையை Trainocate நிறுவனம் உணர்ந்துள்ளது. BCAS நிறுவனத்துடன் இணைந்து, மைக்ரோசாப்ட் அடிப்படை திட்டங்களை கற்பித்தல் திட்டத்தில் இணைப்பதற்கு முன்னுரிமை அளித்துள்ளன. கற்றல் முறையை மறுவடிவமைப்பதற்கும், தொழிற்துறையின் மாறிவரும் தேவைகளை பூர்த்தி செய்வதற்கும் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது.

இந்த ஒப்பந்தத்தை முன்னிட்டு, 2024 மார்ச் 14 ஆம் திகதி செய்தியாளர் சந்திப்பொன்று நடந்தது. இதில், இந்த ஒப்பந்தத்தின் விளைவாக உருவாக்கப்பட்ட புதுமையான திட்டங்கள், குறிப்பாக மைக்ரோசாப்ட் அடிப்படை திட்டங்கள் கற்பித்தல் திட்டத்தில் இணைக்கப்படுவது ஆகியவை அறிவிக்கப்படும்.

# Yamaha மோட்டார் சைக்கிள்கள், ஸ்கூட்டர்களுக்காக வடிவமைக்கப்பட்ட YAMALUBE Lubricants தற்போது AMW இல்



இலங்கையின் வாகனத் துறையில் முன்னணியில் உள்ள Associated Motorways (Private) Limited (AMW) நிறுவனமானது, ஜப்பானின் Yamaha Motor Co. Ltd. (YMC) இன் அங்கீகரிக்கப்பட்ட முகவரும், இலங்கையில் Yamalube Lubricants இன் ஒரேயொரு அங்கீகரிக்கப்பட்ட விநியோகஸ்தராகவும் உள்ளது. Yamalube Lubricants குறிப்பாக Yamaha தயாரிப்புகளுக்காக, பிரத்தியேகமாக வடிவமைக்கப்பட்ட தயாரிப்புகள் ஆகும்.

செயற்திறன் மற்றும் பாதுகாப்பை மேம்படுத்த Yamaha மோட்டார் சைக்கிள்கள் மற்றும் தயாரிப்புகளின் தனித்துவமான தேவைகளை ஆழமாகப் அறிந்து, மிகவும் திறமையான Yamaha பொறியியலாளர்களால் இது உருவாக்கப்பட்டுள்ளது.

சிறந்த எண்ணெய் தக்கவைப்பை Yamalube கொண்டுள்ளது. அதாவது தேய்மானம் மற்றும் பாதிப்பைத் தடுக்க மிகவும் கடினமான சூழல்களிலும் இது மிகவும் பாதுகாப்பான மசகு அடுக்கைப் பராமரிக்கிறது. இத்தயாரிப்புகள் யாவும் American Petroleum Institute (API) மற்றும் National Marine Manufacturers Association (NMMA) ஆகியவற்றின் தொழில்துறை தரங்களையும் பூர்த்தி செய்கின்றன.

இதன் மூலம், மிக உயர்ந்த தரத்தையும், தரம் வாய்ந்ததாகவும் இருப்பதை Yamalube Lubricants உறுதி செய்வதோடு, தொழிற்துறை அளவுகோல்களை அது கடைப்பிடிக்கிறது.

# 2024 இன் இலங்கையின் ஆசிய வங்கியாளர், சிறந்த வாடிக்கையாளர் வங்கி விருதை வென்ற HNB

*Asian Banker Global Excellence in Retail Financial Services Awards 2024* நிகழ்வில் 14ஆவது ஆண்டாக இலங்கையின் சிறந்த வாடிக்கையாளர் வங்கியாக தரவரிசைப்படுத்தப்பட்டதன் பின்னர், HNB PLC தனது மேலாதிக்க தலைமைத்துவ நிலையை மீண்டும் உறுதிப்படுத்தியுள்ளது.

புகழ்பெற்ற ஏசியன் பேங்கர் இதழால் நடத்தப்படும், இந்த விருதுகள் உலகின் வாடிக்கையாளர் நிதிச் சேவைகளுக்கான மிகவும் கடுமையான மற்றும் செல்வாக்குமிக்க திட்டங்களில் ஒன்றாகக் கருதப்படுகின்றன, மேலும் ஸ்திரத்தன்மை, புத்தாக்கம், டிஜிட்டல் செயலாக்கம் மற்றும் செயல்முறை மறுபொறியியல் ஆகியவற்றில் புதிய வரையறைகளை நிறுவும் பிராந்திய




நிறுவனங்களை வெளிப்படுத்த வடிவமைக்கப்பட்டுள்ளன. விரைவான, நிலையான வளர்ச்சியை மேம்படுத்துகின்றன.

"தலைமுறைகளாக, அனைத்து இலங்கையர்களுக்கும் முன்னேற்றத்தில் ஒரு பங்காளியாக சேவையாற்றும் எங்கள் பணியில் HNB உறுதியாக நிற்கிறது. முழுவதுமாக, அதிநவீன தொழில்நுட்பம் மற்றும் உலகளாவிய சிறந்த நடைமுறைகளை ஒருங்கிணைத்து, ஆழ்ந்த வாடிக்கையாளர்களை மையமாகக் கொண்ட வணிக மாதிரியாக மாற்றியமைத்து, மேம்படுத்தியுள்ளோம். 14 ஆண்டுகளாக வாடிக்கையாளர் வங்கித் துறையின் தலைமைத்துவத்தைத் தக்கவைத்துக்கொள்வதில் எங்களின் வெற்றி, எங்கள் அணுகுமுறைக்கு மேலும் சரிபார்ப்பை அளிக்கிறது, மேலும் முன்னோக்கிச் செல்வதற்கான எல்லைகளை அடைய முயற்சி எடுக்கின்றது." என HNBஇன் முகாமைத்துவப் பணிப்பாளரும் பிரதம நிறைவேற்று அதிகாரியுமான ஜொனதன் அலஸ் தெரிவித்தார்.

நாடளாவிய ரீதியில் 2.5 மில்லியனுக்கும் அதிகமான இலங்கையர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் HNBக்கான முதன்மைப் பிரிவாக வாடிக்கையாளர் வங்கி உள்ளது.

# உயர் ரக, நேர்த்தியான V30 மூலம் Portrait புகைப்பட எதிர்காலத்தை வெளிப்படுத்தும் vivo

உலகளாவிய முன்னணி தொழில்நுட்ப நிறுவனமான vivo, அதன் vivo V30 கையடக்கத் தொலைபேசியை சந்தைக்கு அறிமுகப்படுத்தியுள்ளது.

மேம்படுத்தப்பட்ட Aura Light Portrait அம்சம் மற்றும் அதன் ஸ்டைலான V தொடரின் உயர் ரக வடிவமைப்புடன் அதன் சிறந்த உயர் வகை தயாரிப்பாக இது அமைகிறது. புதிய V30 ஆனது, உயர் ரக வடிவமைப்பைக் காண்பிக்கும் வகையில், ஒருங்கிணைந்த 120 Hz 3D வளைந்த திரையை கொண்டுள்ளதோடு, பயனர்களின் தனித்துவமான ஸ்டைல்களை பிரதிபலிக்கும் வகையில் சிறந்த புதிய வண்ண தெரிவுகளில் இது அமைக்கப்பட்டுள்ளது.

vivo Sri Lanka பிரதம நிறைவேற்று அதிகாரி Kevin Jiang இது




பற்றித் தெரிவிக்கையில், "V தொடர் எப்பொழுதும் ஒளியியல் மற்றும் எளிமையான அழகியலுக்கு பெயர் பெற்றதாக காணப்படுகின்றது. இது vivo வின் புத்தாக்கமான கண்டுபிடிப்புகள் மூலம் Portrait புகைப்படம் எடுத்தல் மற்றும் வடிவமைப்பு ஆகிய இரண்டையும் கொண்டு மேம்படுத்தப்பட்டுள்ளது.

சவாலான குறைந்த வெளிச்சம் கொண்ட இரவு நிலைகளிலும் கூட, பயனர்களுக்கு பிரமிக்க வைக்கும் Portrait புகைப்படங்களை எளிதாகப் பிடிக்க உதவும் சக்திவாய்ந்த கருவியை வழங்க நாம் Aura Light Portrait அம்சத்தை மேம்படுத்தியுள்ளோம்." என்றார்.

vivo V30 ஆனது, அதன் மேம்பட்ட புகைப்படவியல் திறன்கள் மூலம், பயனர்கள் தங்கள் வாழ்வின் ஒவ்வொரு பொன்னான தருணத்தையும் அழியாத வகையில் கைப்பற்றுவதற்கு உறுதியளிக்கிறது.

அது தவிர, 50 MP AF Ultra WideAngle கெமரா, Auto Focus மற்றும் 119 wide angle ஆகிய அம்சங்களை v30 கொண்டுள்ளது. இது பயனர்கள் பரந்த பிரதேசங்களை அல்லது விசேட குழு புகைப்படத் தருணங்களைத் தவறவிடாமல் எளிதாக எடுக்க அனுமதிக்கிறது.

# UBT பல்கலைக்கழக கொழும்பு தலைமை அலுவலகத்தின் கோலாகல திறப்பு விழா

இலங்கையின் முன்னணி கல்வி நிறுவனமான UBT Campus தனது கொழும்பு தலைமை அலுவலகத்தை பிரமாண்டமாக திறந்து வைத்துள்ளது.

இலங்கை முழுவதும் உள்ள மாணவர்களுக்கு தரமானசர்வதேச தரம் வாய்ந்த கல்வியை வழங்கி மிகச் சிறந்த தொழில் வல்லுநர்களை உருவாக்கி அவர்களின் வாழ்வில் ஒளியேற்றுவதை உண்மையான நோக்கமாகக் கொண்டு செயற்படும் இந்த கல்வி நிறுவனத்துக்குக் கிடைத்த வெற்றியாகவே இந்தத் திறப்பு விழா அமைந்துள்ளது.

மாணவ சமூகம் மீதான UBT Campus இன் அர்ப்பணிப்பு,உண்மைத் தன்மை மற்றும் சிறந்த மாணவ சமூகத்தின் ஊடாக இந்த நாட்டை கட்டியெழுப்பும் நோக்கம் இந்த விழா மூலம் நூறு வீதம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இந்தத் திறப்பு விழா நிகழ்வில் மலேசியாவின் சைபர்ஜெயா பல்கலைக்கழகத்தின்



சிரேஷ்ட கல்விப் பணிப்பாளர் டாக்டர் ஹசன் பஸ்ரி ஜஹுபர் சாதிக் பிரதம அதிதியாக கலந்து கொண்டு சிறப்பித்தார்.

இணை ஸ்தாபகர் எஸ். தௌபீக் அஹமட், தலைமை நிர்வாக அதிகாரி திரு. பி.டி.எம். நியாஸ் மற்றும் கல்வி விவகாரங்களுக்கான பணிப்பாளர் எச்.அப்துல் சத்தார் ஆகியோரும் கலந்து சிறப்பித்தனர்.

இதன் மூலம் இந்த விழா UBT பல்கலைக் கழகத்தின் கல்வி சிறப்பை நோக்கிய கூட்டு அர்ப்பணிப்பு மற்றும் தூர நோக்கை அடையாளப்படுத்தியது.இந்த மதிப்பிற்குரிய குழுவின் வழிகாட்டுதலின் கீழ், UBT Campus ஆனது Healthcare, Business, IT, and Engineering ஆகியவற்றில் சான்றிதழ் மட்டத்திலிருந்து PhD வரையிலான விரிவான பாடத் திட்டங்களை வழங்குவதற்கான பாரிய பயணத்தைத் தொடங்கியுள்ளது.



இலங்கையின் கொமர்ஷல் வங்கி அண்மையில் தனது கேகாலை கிளையை அதே இடத்தில் ஒரு விசாலமான புதிய இரண்டு மாடி கட்டிடத்திற்கு இடமாற்றியது. இந்த பரபரப்பான மாநகரசபை பகுதியில் வாடிக்கையாளர்களுக்கு சிறந்த சேவை வழங்கும் வகையில் இந்த வங்கிக்கிளையானது வடிவமைக்கப்பட்டுள்ளது.இந்த புதிய வங்கிக்கிளையானது கேகாலையில் இலக்கம் 186, பிரதான வீதியில் அமைந்துள்ளது. படத்தில் கொமர்ஷல் வங்கியின் தலைவர் பேராசிரியர்ஆனந்த ஜெயவர்தன, வங்கியின் முகாமைத்துவ பணிப்பாளர்/பிரதம நிறைவேற்று அதிகாரிசனத் மனதுங்க மற்றும் பிரதம செயற்பாட்டு அதிகாரி எஸ். பிரபாகர் ஆகியோர் புதிய கட்டிடத்தை வங்கியின் சிரேஷ்ட மற்றும் கூட்டாண்மை முகாமைத்துவ உறுப்பினர்கள் முன்னிலையில் சம்பிரதாயமாக திறந்து வைக்கும் நிகழ்வில் காணப்படுகின்றனர்.

# எதிர்கால அறுவடை விவசாய, உணவு மற்றும் தொழில்நுட்ப கண்காட்சி – 2024: விவசாயிகளையும் பாவனையாளர்களையும் இணைத்தல்

## விவசாய, உணவு மற்றும் தொழில்நுட்ப புத்தாக்குனர்களுக்கு அதிகாரமளித்தல்

விவசாயம் என்பது நாட்டின் உயிர் நாடியாகும். அது முழு மனித சமூகத்தினதும் அடிப்படையாக உள்ளது. அது உணவு வழங்குவதில் மாத்திரம் நின்றுவிடாது வாழ்வாதாரம் ஒன்றை உருவாக்குகிறது.

ஆனால் தொடர்ந்து சம்பிரதாயமான விவசாயத்தில் எதிர்காலம் இல்லை என்பது, மாறுபடும் காலநிலை, பருவநிலை முழு உலகுக்கும் ஞாபகமூட்டுகிறது. அதனால், பேண்தகு, செயல்திறன் மிக்க மற்றும் ஈடுகொடுக்கக் கூடிய விவசாயப் புரட்சி ஒன்று நாட்டுக்குத் தேவையாகும். காலநிலை மாற்றம், வளங்களின் பற்றாக்குறை மற்றும் அதிகரித்து வரும் உலகமக்கள் தொகையை

போஷிப்பதற்கும் தேவையால் ஏற்படுகின்ற பிரச்சினைகளை தவிர்ப்பதற்கும் எமது விவசாயிகள் நவீன தொழில்நுட்பத்தின் ஆற்றலை பயன்படுத்த வேண்டிய காலம் உருவாகியுள்ளது.

இதற்காக, விவசாயம், உணவு உற்பத்தி மற்றும் தொழில்நுட்பத்தின் பேண்தகு, செயல்திறன் கொண்ட மற்றும் நவீன தீர்வு அவசியமாகும். விவசாய, உணவு மற்றும் தொழில்நுட்பத்தின் பேண்தகு, செயல்திறன் கொண்ட மற்றும் நவீன தீர்வு அவசியமாகும். விவசாய, உணவு மற்றும் தொழில்நுட்பத்தின் புதிய பாதைகளை கற்பதற்கு மற்றும் அறிவை பகிர்ந்து கொள்வதற்கு இந்த கண்காட்சியில் இலங்கையின் அனைத்து சிறிய மற்றும் நடுத்தர அளவான தொழில் முயற்சியாளர்களுக்கும் அழைப்பு விடுக்கப்படுகிறது.

"எதிர்கால அறுவடை" – விவசாய உணவு மற்றும் தொழில்நுட்ப எக்ஸ்போ கண்காட்சி – 2024 தொடர்பில் ஏற்பாட்டை மேற்கொள்ளும் Event Mate Pvt Ltd நிறுவனத்தின் Chief Creative Officer சரித் லக்ஷித்த வில்லாரச்சி அவர்கள் கருத்துக் கூறும்போது,

"இது Event Mate Pvt Ltd நிறுவனம் ஏற்பாடு செய்கின்ற பாரிய விவசாய உணவு மற்றும் தொழில்நுட்ப கண்காட்சியாகும். உண்மையில் நாம் கண்காட்சியை ஒருங்கிணைக்கும் நிறுவனம் ஒன்றாக, இம்முறை தொனிப்பொருள் தொடர்பில் முக்கிய அவதானம் செலுத்துகிறோம். ஏனென்றால் நாமும் விவசாய நாடு ஒன்று என்பதாலாகும். ஒரு துளி தண்ணீர் கூட இல்லாத நாடுகள் கூட எம்மை விட சிறந்த முறையில் நவீன தொழில்நுட்பத்தின் மூலம் பயிரிட்டு சிறந்த விவசாய பொருளாதாரம் ஒன்றை நடத்தி வருகின்றன. பெரும்பாலும் எமது நாட்டின் விவசாயம் தொடர்ந்தும் சம்பிரதாய பயிர்ச்செய்கை முறையிலேயே தங்கியுள்ளது. விவசாயியின் உழைப்பின் அளவுக்கு பிரதிபலன் இல்லை. அறுவடையை பெறுவது, பயிரிடுவது, மற்றும் இறுதியில் உற்பத்தியை விற்பனை செய்வது ஆகிய இந்த அனைத்து விடயங்களிலும் விவசாயிகள் இதனை விடவும் முன்னோக்கி வர வேண்டும். அதற்காக அவர்கள் நவீன தொழில்நுட்பத்தை பயன்படுத்துவது



Event Mate Pvt Ltd நிறுவனத்தின் Chief Creative Officer
சரித் லக்ஷித்த வில்லாரச்சி

நாளுக்கு நாள் அவசியமான விடயமாகி உள்ளது.

அதேபோன்று, அறுவடையை பாதுகாத்தல் மற்றும் அவற்றை சந்தைக்கு வெளியிடும்போது வர்த்தக நாமமாக வெளியிடுவது ஆகிய விடயங்கள் தொடர்பில் அதிக அவதானம் செலுத்தல் வேண்டும்.

விவசாய அறிவை பெறுவதற்கு இவ்வாறான கண்காட்சிகள் மிக முககியமாகும். ஆனால் அதனுடன் இணைந்த உணவு மற்றும் தொழில்நுட்பம் என்ற அனைத்து விடயங்களும் ஒன்றிணைந்திருப்பது இன்றியமையாததாகும்.

எமது நாட்டின் தொழில்நுட்ப கண்காட்சி எனும்போது நாட்டில் இருக்கின்ற பாரிய நிறுவனங்கள் சிலது தான் அவற்றின் தொழில்நுட்ப விடயங்கள் மற்றும் விவசாய உபகரணங்களை காட்சிப்படுத்துகின்றன. உணவுக் கண்காட்சி எனும்போது உலர்ந்த மரக்கறி, பழ வகைகள் தான் அடிப்படையாகும். விவசாய கண்காட்சியை முன்வைப்பது மேலும் ஒரு குழுவாகும். எனவே இந்த நாட்டில் இருக்கும் சிறிய அளவான தொழில்முயற்சியாளர்களுக்கு சில நேரம் இந்த மூன்று தரப்பையும் பெரும்பாலும் சந்திக்கக் கிடைப்பதில்லை. அவர்களுக்கு உயர் சந்தை வாய்ப்பு ஒன்றை காண முடியாத நிலை உள்ளது. Event Mate Pvt Ltd என்ற எமது நிறுவனம் நிரப்ப முயல்வது இந்த இடைவெளியையாகும்.

SME Group எனும் சிறிய மற்றும் நடுத்தர அளவான தொழில்முயற்சியாளர் குழுவுக்கு ஒருபோதும் ஒரே கண்காட்சியில் இந்த அனுபவத்தை பெற முடியாத காரணத்தால் எமது நிறுவனம் அந்த இடைவெளியை நிரப்புவதற்கு நினைத்தது.

அதன்படி இந்த ஆண்டில் BMICH இல் மார்ச் 29, 30, 31 இல் நடத்துவதற்கு ஏற்பாடாகியுள்ள இந்தக் கண்காட்சிக்கு தொழில் முயற்சியாளர்கள் மற்றும் உள்நாட்டு, வெளிநாட்டு முதலீட்டாளர்களை அழைத்து வர நாம் நடவடிக்கை எடுத்துள்ளோம்.

மிகவும் சிறியதான வர்த்தகம் ஒன்றை செய்தாலும் சிலருக்கு இந்த கண்காட்சி வளவில் காட்சிக் கூடம் ஒன்றை ஒதுக்குவதற்கு பணம் இல்லாமல் போகலாம். ஆனால் பார்வையாளர்களாக இங்கு வந்து அவர்களின் உற்பத்திக்காக முதலீட்டாளர் ஒருவரை கண்டறிய அவர்களால் முடியும். இந்த கண்காட்சியில் முதலீட்டாளர்கள் பலர் பங்கேற்க முன்வந்துள்ளனர்.

அதன்படி தமது உற்பத்தி எதுவாக இருந்தபோதும் அதனை மேம்படுத்துவதற்கும் முன்னேற்றுவதற்கும் தேவையான ஆலோசனை மற்றும் அறிவூட்டல் முதலீட்டாளர்கள் ஊடாக பெற்றுக்கொள்வதற்கு முடியும்.




தமது உற்பத்தியை Brand ஒன்றாக மாற்றி, உச்ச சந்தையை இலக்கு வைத்து தயாரிப்பது எவ்வாறு என்ற அனைத்து அறிவு, புரிதல் சிறு தொழில்முயற்சியாளர்களுக்கு இங்கு இலவசமாக பெற்றுக்கொள்ள முடியும். முதலீட்டாளர்களுடன் நேரடியாக தொடர்பு கொள்ளும் வாய்ப்பு கிடைப்பதால் சிறு தொழில்முயற்சிகளில் எழுகின்ற அனைத்து சிக்கல்களையும் அவர்களால் முன்வைக்க முடியுமாக இருக்கும்.

இந்த கண்காட்சிக்கு மத்திய கிழக்கு பிராந்தியத்தில் இருந்து முதலீட்டாளர்கள் மற்றும் பிரதிநிதிகள் வருவது உறுதி செய்யப்பட்டுள்ளது. அவர்கள் டுபாய் பாலைவனத்தில் பலா, ஈரப்பலா மற்றும் பப்பாசி பயிரிடுபவர்கள். அவர்களுக்கு இலங்கையில் இருந்து பெறுவதற்கு பல விடயங்கள் உள்ளன. எம்மவர்களுகும் அவர்களுடன் தொடர்புகொள்ள முடியும். அதன்மூலம் எமது சிறிய தொழில் முயற்சியாளர்களுக்கும் ஏற்றுமதிச் சந்தை திறக்கப்படுகிறது. அது தவிர இந்தியா, ஈரான் மற்றும் லெபனான் நாடுகளின் உற்பத்தியாளர்கள் மற்றும் முதலீட்டாளர்கள் வருவதாக உறுதி செய்துள்ளனர்.

மற்றொரு முக்கிய விடயமாக இலங்கையின் 20% அளவாக உள்ள பாரிய அளவான வர்த்தகர்களின் சிறு தொழில்முயற்சியாளர்களுக்கு கைகொடுக்கும் செயற்பாடு சரியாக இடம்பெறுவதில்லை. எமது சில விவசாயிகளிடமும் பயிர்ச்செய்கையாளர்களிடமும் பணம் இருந்தாலும் தமது உற்பத்திக்கு பெறுமதி சேர்ப்பதற்கு தேவையான சிறந்த Logo ஒன்று, நல்ல பெயர் மற்றும் digital marketing துறை தொடர்பில் அவர்களுக்கு தெரியாது. சில உற்பத்திகள் "சின்ன மகள் எள்ளுருண்டை" "சிவப்பு மகன் தளகுழி" போன்ற பெயர்களாலும் அழைக்கப்படுகின்றன. உற்பத்திகளுக்கு நல்ல மதிப்பு கிடைக்கும் வகையில் பிராண்ட் செய்வதற்கு தேவையான அனைத்து துறைகளிலும் அறிவு மற்றும் ஆலோசனையை பெற்றுக்கொடுக்கும் வேறான கருமபீடம் ஒன்று Event Mate Pvt Ltd இனால் திறக்கப்பட்டுள்ளது. அங்கு தமது உற்பத்திக்கு பொருந்தும் சந்தைப் பெறுமதி கிடைக்கும் பெயர் ஒன்றை பெறுவதற்கு ஆலோசனை பெற முடியும். விசிட்டின் காட் ஒன்றை அமைப்பதற்கு ஆலோசனை பெற முடியும். தமது வர்த்தகத்திற்கு தேவையான லோகோவை, டெக் லைனை, Letterhead இனை, Website இனை ஆக்கபூர்வமாக தயாரிப்பதற்கு தேவையான அனைத்து ஆலோசனைகளையும் இலவசமாக பெற முடியும்.

எமது சிறிய மற்றும் நடுத்தர அளவான உற்பத்தியாளர்கள் மேன் நிலைக்கு வருவதற்கு தமது உற்பத்தியை வர்த்தக நாமமாக மாற்ற வேண்டும். இந்தக் கண்காட்சி அவர்களுக்கு இந்த அனைத்து விடயங்களையும் எடுத்துவருவதற்கான சந்தர்ப்பமாக உள்ளது.

ஏனென்றால், பொதுவாக சிறிய மற்றும் நடுத்தர அளவு உற்பத்தியாளர் ஒருவருக்கு ஒருபோதும் இந்த விடயங்கள் இலவசமாக செய்ய முடிவதில்லை. எனவே இந்த சந்தர்ப்பத்தை உச்ச அளவில் பயன்படுத்திக் கொள்ளும்படி நாம் அவர்களை கேட்டுக்கொள்கிறோம்..."

### இது யாருக்கு முக்கியமானது?

#### விவசாயிகள் மற்றும் விவசாய தொழில்முறையாளர்களுக்கு

இந்த கண்காட்சி மூலம் விவிசாயிகளுக்கு மற்றும் விவசாய தொழில்துறையில் ஈடுபடுகின்றவர்களுக்கு பயிர் அறுவடையை அதிகரிப்பதற்கு, செலவை குறைப்பதற்கு மற்றும் விவசாயத்தில் பேண்தகு நிலையை மேம்படுத்துவதற்கு முடியுமான நவீன தொழில்நுட்ப மற்றும் பயன்பாடுகளை கண்டறிவதற்கு வாய்ப்பு வழக்கப்படுகிறது.

#### உணவு தொழில்துறையின் தொழில்முறையாளர்களுக்கு

உணவு தயாரிப்பது, விநியோகித்தல் மற்றும் தரக் கட்டுப்பாடு தொடர்பிலான நபர்கள் இதில் உள்ளடங்குவர். கண்காட்சிக்கு உணவு தயாரித்தல், பொதியிடல் மற்றும் பாதுகாப்பு மற்றும் நுகர்வோர் விருப்பின் போக்கும் காட்சிப்படுத்தப்படும்.

#### அரச நிறுவனங்கள் மற்றும் கொள்கை வகுப்பு

விவசாயம், உணவுப் பாதுகாப்பு மற்றும் தொழில்நுட்ப ஒழுங்குமுறைகள் சார்ந்த கொள்கைகளை அறிவூட்ட முடியுமான புத்தாக்கம் தொடர்பில் கற்பதற்கு அரச நிறுவனங்களின் பிரதிநிதிகளுக்கு பங்கேற்க முடியும்.

#### அறிஞர்கள் மற்றும் ஆய்வாளர்களுக்கு

கண்காட்சி ஆய்வாளர்கள் மற்றும் அறிஞர்களுக்கு அவர்களின் கண்டுபிடிப்புகளை பகிர்வதற்கு மற்றும் இந்தத் துறையின் புதிய முன்னேற்றங்கள் தொடர்பில் கலந்துரையாடுவதற்கு மேடை ஒன்றாக அமையும்.

#### அரசு சார்பற்ற நிறுவனங்கள் (NGO)

விவசாய மற்றும் உணவு சார்ந்த சிக்கல்கள் தொடர்பில் அவதானம் செலுத்துகின்ற அரசு சார்பற்ற அமைப்புகள் பட்டினியை ஒழித்தல், ஊக்குவித்தலுக்கான அவர்களின் பங்களிப்புக்கு உதவுகின்ற தொழில்நுட்பம் மற்றும் பயன்பாடுகளை அடையாளம் காண்பதற்கு.

#### பங்கேற்பாளர்கள், நுகர்வோர் மற்றும் பொதுமக்களுக்கு

கண்காட்சி ஒன்று பொதுமக்களை அறிவூட்டுவதற்கு மற்றும் இணைப்பதற்கு நடவடிக்கை எடுக்க முடியும். அவர்களுக்கு உணவு கிடைப்பது எங்கிருந்து மற்றும் தொழில்நுட்பத்தின் தாக்கத்தை அவர்களால் புரிந்துகொள்ள முடியுமாக இருக்கும்.

விவசாயம் மற்றும் உணவு உற்பத்தி, விவசாயத்தின் எதிர்காலம் தொடர்பில் அறிவூட்டுவதற்கு இளம் மாணவர்கள் மற்றும் இளைஞர் அமைப்புகளை ஒன்றிணைப்பதும் இந்த நிகழ்ச்சியின் நோக்கமாகும்.

#### காட்சி அறை

விவசாய தொழில்நுட்ப புத்தக்கம், சரியாக விவசாய பொருட்கள், ஸ்மார்ட் உபகரணங்கள் மற்றும் பயிர் கண்காணிப்பு கட்டமைப்பு போன்ற விவசாய தொழில்நுட்பத்தின் புதிய முன்னேற்றங்களைக் காட்சிப்படுத்தப்படும்.

#### பேண்தகு விவசாயம்

பேண்தகு நிலை, இயற்கை விவசாயம் மற்றும் சுற்றுச்சூழல் சார்புடைய தீர்வுகளில் அவதான செலுத்தும் பயன்பாடுகள் ஊக்குவிக்கப்படும்.

#### உணவு உற்பத்தி மற்றும் வர்த்தக நாமம்

உள்நாட்டு மற்றும் சர்வதேச உணவு உற்பத்தி, பானங்கள் மற்றும் வர்த்தக நாமம் ஆகிய அம்சங்கள் இதில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

#### விவசாய சந்தை

உள்நாட்டு விவசாயிகளுக்கு அவர்களின் புதிய உற்பத்திகள் மற்றும் உற்பத்திகளை விற்பனை செய்வதற்கு வாய்ப்பு வழங்கல்.

#### உற்பத்தி முன்மாதிரி

நேரடி விவசாய முன்மாதிகள்: விவசாயிகள் மற்றும் நிபுணர்கள் நவீன விவசாய முறைகள் மற்றும் உபகரணங்கள் காட்சிப்படுத்தப்படும்.

சமைத்தல் முன்மாதிரிகள்: சமையல்காரர்கள் மற்றும் சமையல் நிபுணர்கள் புத்தம் புதிய, உள்நாட்டில் இருந்து பெற்றுக்கொண்ட மூலப்பொருட்களின் பயன்பாட்டுடன் சுவையான உணவை தயாரிக்கும் முறை காட்சிப்படுத்தப்படும்.

#### வலைப்பின்னல் மேற்கொள்ளல்

BSB கூட்டம், தொழில்துறை நிறுவனம் மற்றும் ஆரம்ப நிலையில் உள்ளவர்களுக்கு வர்த்தகத்தின் வர்த்தக வலைப்பின்னலுக்கு வசதி ஏற்படுத்தப்படும்.

#### இளைஞர் பங்கேற்பு கூட்டம்

மாணவர்கள் மற்றும் இளம் தொழில் முயற்சியாளர்களுக்கு தொழில்துறை தலைவர்கள் மற்றும் ஆலோசகர்களுடன் வலைப்பின்னலுடன் இணைய வாய்ப்பு வழங்கப்படும்.

**இனோகா பெரேரா பண்டார**




# பிரபல நகைச்சுவை நடிகர் லட்சுமி நாராயணன் சேசு காலமானார்



சின்னத்திரையில் லொள்ளு சபா நிகழ்ச்சி மூலமாக பிரபல்யமானவர் சேஷு. அவர் ஏராளமான படங்களிலும் கொமெடியனாக நடித்து இருக்கிறார். கடைசியாக அவர் சந்தானத்தின் வடக்குப் பட்டி ராமசாமி படத்திலும் கொமெடியில் கலக்கி இருந்தார்.

சேஷு, ஒரு வாரம் முன்பு அவர் வீட்டில் இருக்கும்போது மாரடைப்பு ஏற்பட்டு சென்னை காவேரி மருத்துவமனையில் அனுமதிக்கப் பட்டார். அவருக்கு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வந்த நிலையில், நேற்று சிகிச்சை பலனின்றி மரணமடைந்தார். இது ரசிகர்களுக்கு அதிர்ச்சியை ஏற்படுத்தி இருக்கிறது. ரசிகர்கள் மற்றும் பிரபலங்கள் சேஷு மரணத்திற்கு இரங்கல் தெரிவித்து வருகின்றனர்.

# ஏழு நாடுகளில் வாழும் மக்கள் மாத்திரமே மாசற்ற காற்றை சுவாசிக்கின்றனர்

## சுவிஸ் தொழில்நுட்ப நிறுவனம் தகவல்



உலகில் 2023 ஆம் ஆண்டில் ஏழு நாடுகளிலுள்ள மக்கள் மாத்திரமே பாதுகாப்பான மாசற்ற காற்றை சுவாசித்துள்ளதாக காற்று தரம் தொடர்பாக ஆய்வுகளை மேற்கொள்ளும் சுவிஸ் தொழில்நுட்ப நிறுவனமான IQAir இன் புதிய அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உலக நாடுகளில் நிலவும் காற்றின் தரம் தொடர்பான முழுமையான அறிக்கையை அந்த நிறுவனம் தற்போது வெளியிட்டுள்ளது.

134 நாடுகள், பிரதேசங்கள் மற்றும் பிராந்தியங்களில் உள்ள 30 ஆயிரத்துக்கும் மேற்பட்ட கண்காணிப்பு நிலையங்களின் காற்று தரம் குறித்த தரவுகள் இந்த அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

காற்றின் தரம் தொடர்பாக உலக சுகாதார அமைப்பு வழங்கியுள்ள வழிகாட்டலுக்கு அப்பால் 2.5 Microns நுண்ணிய துகள்கள் கொண்ட மாசடைந்த காற்றை 134 நாடுகளிலுள்ள மக்கள் சுவாசித்திருப்பதாகவும் அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இந்த நுண்ணிய துகள்கள் 2.5 மைக்ரோனுக்கும் குறைவான விட்டம் கொண்டவை, இது நமது நுரையீரலில் ஆழமாக உள்ளிழுக்கப்படுவதுடன் இரத்த ஓட்டங்களில் கூட தடையை ஏற்படுத்தலாம். அவை ஆஸ்துமா, இதயம் மற்றும் நுரையீரல் நோய்களை ஏற்படுவதுடன் உயர் இரத்த அழுத்தம், மனச்சோர்வு ,பதற்றம் மற்றும் அகால மரணம் ஆகியவற்றுக்கும் காரணமாகவும் அமையும் என்றும் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# தனபாக்கியம் அற நிதியத்தினால் இலவச அரிசிப்பொதிகள் வழங்கி வைப்பு



புத்தளம் தில்லையடி தனபாக்கியம் அற நிதியத்தினால் குறைந்த வருமானம் உடையவர்களுக்கு இலவசமாக அரிசிப் பொதிகள் வழங்கி வைக்கப்பட்டன.

இந்நிகழ்வு அண்மையில் தில்லையடி தனபாக்கியம் அறநிதியத்தின் பொருளாளர் பீ.எம்.ரூபனின் இல்லத்தில் அதன் ஸ்தாபக தலைவர் சுப்பையா பாலகிருஷ்ணன் தலைமையில் நடைபெற்றது.

தில்லையடி மற்றும் அதனை சூழவுள்ள பகுதிகளிலிருந்து தெரிவு செய்யப்பட்ட குறைந்த வருமானம் கொண்ட 200 பேருக்கு இதன்போது இலவசமாக அரிசிப்பொதிகள் வழங்கி வைக்கப் பட்டன.

இந்நிகழ்வில் புத்தளம் நகரசபையின் முன்னாள் உறுப்பினர் முஹம்மது தில்ஷான், தில்லையடி கிராம அலுவலர் பிரிவின் அபிவிருத்தி உத்தியோகத்தர் அஞ்சனா, புத்தளம் பிரதேச செயலக சமூக சேவை பிரிவு உத்தியோகத்தர் பத்மலதா, தனபாக்கியம் அற நிதியத்தின் பொருளாளர் பீ.எம்.ரூபன் உள்ளிட்ட அதன் அங்கத்தவர்களும் கலந்து கொண்டனர்.





முன்னாள் ஜனாதிபதியான பாராளுமன்ற உறுப்பினர் மஹிந்த ராஜபக்ஷவின் ஏற்பாட்டில் ஒழுங்கு செய்யப்பட்டிருந்த இப்தார் நோன்பு துறக்கும் நிகழ்வில், வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி, இராஜாங்க அமைச்சர் தாரக பாலசூரிய, பாராளுமன்ற உறுப்பினர்கள் மர்ஜான் பளீல், சாகர காரியவசம், சவுதி அரேபியாவின் இலங்கைக்கான தூதுவர் காலித் பின் ஹமூத் அல் கஹ்தானி மற்றும் பாகிஸ்தான், குவைட், பலஸ்தீன் உட்பட முஸ்லிம் நாடுகளின் இலங்கைக்கான தூதுவர்கள் உட்பட முக்கியஸ்தர்கள் பலரும் கலந்து கொண்டிருப்பதைப் படத்தில் காணலாம்.

# நகர்வலம்



## புத்தளம் மரைக்கார் வீதியில் வடிகான் புனரமைப்பு

(புத்தளம் தினகரன் நிருபர்)



புத்தளம் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அலி சப்ரி ரஹீமின் பணிப்புரையின் பேரில் புத்தளம் மரைக்கார் வீதி மீன்கடை சந்தியிலுள்ள வடிகான் புனரமைக்கப்பட்டுள்ளது.

கடந்த சில நாட்களுக்கு முன்னர் மேற்படி சந்தியிலுள்ள வடிகானில் ஏற்பட்ட பிரச்சினை தொடர்பில் பல முறைப்பாடுகள் பாராளுமன்ற உறுப்பினர் அலிசப்ரி ரஹீமுக்கு கிடைக்கப்பெற்றதையடுத்து வடிகான் புனரமைக்கப் பட்டுள்ளது. அதற்கமைய இவ்விடத்திற்கு கள விஜயம் மேற்கொண்ட பாராளுமன்ற உறுப்பினர் உடனடியாக புனரமைப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு புத்தளம் நகரசபை செயலாளருக்கு பணிப்புரை விடுத்தார். இதனடிப்படையில் உரிய வேலைத்திட்டம் குறுகிய நாட்களுக்குள் நிறைவு செய்யப்பட்டது. பாராளுமன்ற உறுப்பினரின் இணைப்பாளர்களான ஏ.எச்.எம். ரிஸான், ஆசிரியர் எச்.அமீர் அலி மற்றும் எம். நிஸ்திகார் ஆகியோரும் இவ்வேலைத்திட்டத்தை களமேற்பார்வை செய்தனர்.

## கொட்டாவையில் வாகன விபத்து 19 வயது இளைஞன் உயிரிழப்பு

கொட்டாவ, ஹைலெவல் வீதியில் இடம்பெற்ற வாகன விபத்தில் 19 வயதுடைய இளைஞன் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

கொட்டாவையிலிருந்து மாகும்புர நோக்கிச் சென்ற வான் ஒன்று மாகும்புரவிலிருந்து கொட்டாவை நோக்கி பயணித்த மோட்டார் சைக்கிள் மீது மோதியதில் இவ்விபத்து இடம்பெற்றுள்ளது.

விபத்தின் பின்னர் மோட்டார் சைக்கிள் வீதியில் கவிழ்ந்து கொட்டாவையிலிருந்து மாகும்புர நோக்கி பயணித்த கெப் வாகனத்தில் மோதியுள்ளது.

உயிரிழந்த இளைஞன் பன்னிபிட்டிய பிரதேசத்தைச் சேர்ந்தவர்.விபத்துடன் தொடர்புடைய வான் மற்றும் கெப் வண்டியின் சாரதிகள் இருவரும் கைது செய்யப்பட்டுள்ளதுடன், மேலதிக விசாரணைகளை கொட்டாவ பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## தெவட்டகஹ பள்ளியில் கொடியேற்ற வைபவம்

கொழும்பு, தெவட்டகஹ பள்ளி வாசலில் பத்ரு ஸஹாபாக்களின் நினைவை முன்னிட்டு இன்று (27 ஆம் திகதி) மாலை 5.15 மணிக்கு கொடியேற்ற வைபவம் இடம்பெற உள்ளதோடு பத்ரு மௌலித் பாராயணமும் இடம்பெற உள்ளதாக பள்ளிவாசலின் தலைவர் ரியாஸ் ஸாலி தெரிவித்தார்.

# நாவலப்பிட்டி குருந்துவத்த ரோயல் கல்லூரியின் 15 ஆண்டு விழா





(அக்குறணை குறூப் நிருபர்)

நாவலப்பிட்டி, குருந்துவத்த ரோயல் கல்லூரி புதிதாக ஆரம்பிக்கப்பட்டு 15 வருடம் பூர்த்தியாவதை முன்னிட்டு தொழில்நுட்ப கூடமொன்று அண்மையில் திறந்து வைக்கப்பட்டது.

அத்துடன் பல்வேறு நிகழ்வுகள் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன.

மேற்படி நிகழ்வுக்கு மத்திய மாகாண ஆளுநர் லலித் யூ கமகே பிரதம அதிதியாகவும், கல்லூரியின் ஸ்தாபகரரான கண்டி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் மகிந்தானந்த அலுத்கமகே விசேட அதிதியாகவும் கலந்து கொண்டனர்.

இவ்வைபவத்தில் பாடசாலைகளுக்கிடையிலான விவாதப் போட்டி, மரதன் ஓட்டப் போட்டி, கரப்பந்தாட்டப் போட்டி, மரநடுகைத் திட்டம், சமூக நல வேலைத் திட்டங்கள், கலை நிகழ்ச்சிகள், உட்பட பல்வேறு நிகழ்வுகள் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன.

இங்கு உரையாற்றிய பிரதம அதிதி லலித் யூ கமகே தெரிவிக்கையில், மத்திய மாகாணத்திலுள்ள பாடசாலைகளின் பௌதீக மற்றும் மனித வளங்களை அதிகரிக்க பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

# வாகனங்கள் நேருக்கு நேர் மோதி விபத்து

(மாத்தளை சுழற்சி நிருபர்)

மோட்டார் சைக்கிளுடன் கார் ஒன்று நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளாகியதில் மோட்டார் சைக்கிளில் பயணித்த இருவரும் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். இவ்விபத்து நேற்று முன்தினம் இரவு எட்டு முப்பது மணியளவில் மாத்தளை – கண்டி பிரதான வீதியில் இடம்பெற்றுள்ளது. வரக்காமுர பிரதேசத்தை சேர்ந்த 31 வயது பெண்ணும் 26 வயதுடைய இளைஞர் ஒருவருமே இவ்விபத்தில் உயிரிழந்துள்ளனர். மாத்தளையிலிருந்து கண்டி நோக்கி சென்ற கார் மற்றுமொரு வாகனத்தை முந்தி செல்ல முற்பட்டபோது எதிரே வந்த மோட்டார் சைக்கிள் மோதி விபத்து இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

# மலைச்சாரல்





மாத்தளை, இரத்தோட்டை பிள்ளையார் கோவில் தேர் உற்சவம் மற்றும் வருடாந்த பூஜைகள் என்பன மத்திய மாகாண ஆளுநர் லலித் யூ கமகே தலைமையில் நடைபெற்றது. இதன்போது கோவில் நிர்வாகத்தால் ஆளுநர் பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டார். திருமதி கமகே உட்பட பெருமளவு பொது மக்கள் இதில் கலந்து கொண்டனர். (படம் : அக்குறணை குறூப் நிருபர்)

# பலாங்கொடை கல்தொட்ட பிரதான வீதியில் மண்சரிவு





பலாங்கொடை கல்தொட்ட பிரதான வீதியின் நவநெலிய பிரதேசத்தில் மண்சரிவு ஏற்பட்டுள்ளது.

மண்சரிவு காரணமாக இவ்வீதியின் ஊடாக ஹம்பேகமுவ, தனமல்வில, மொனராகலை உள்ளிட்ட பகுதிகளுக்கான போக்குவரத்து பாதிக்கப்பட்டுள்ளதாக எமது பிராந்திய செய்தியாளர் தெரிவித்துள்ளார்.

மண்மேடு மற்றும் பாரிய கற்கள் மரங்கள் வீதியில் விழுந்துள்ளன. இவற்றை அகற்றும் பணியில் வீதி அபிவிருத்தி அதிகாரசபை ஊழியர்கள் மற்றும் பிரதேச மக்கள் ஈடுபட்டுள்ளனர்.

இந்த பிரதேசத்தில் அடிக்கடி மண்சரிவு ஏற்படுவதால் சாரதிகள் மிகவும் அவதானத்துடன் செயற்படுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.





கம்பளை ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலய தேர்த்திருவிழாவின் போது இடம்பெற்ற நிகழ்வுகளை படங்களில் காணலாம்.

நாவலப்பிட்டி சுழற்சி நிருபர்

# ஆணின் சடலம் மீட்பு

(இரத்தினபுரி சுழற்சி நிருபர்)

பலாங்கொடை தெஹிகஸ்தலாவ பிரதேசத்தில் தனியாருக்குச் சொந்தமான காணியொன்றிலிருந்து ஆணொருவரின் சடலம் நேற்றுமுன்தினம் காலை மீட்கப் பட்டுள்ளது. இவ்வாறு மீட்கப்பட்ட சடலம் அழுகி துர்நாற்றம் வீசிய நிலையில் மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். சடலம் குறித்து இதுவரை எந்த தகவலும் கிடைக்கவில்லையென பொலிஸார் தெரிவித்தனர். சடலத்தை அடையாளம் காண்பதற்கு பொது மக்களின் உதவியை பொலிஸார் கோரியுள்ளனர்.

# துப்பாக்கி மாயம்

மாத்தளை வில்கமுவ பொலிஸ் நிலைய பிரதான வாயிலில் பாதுகாப்பான இடத்தில் வைக்கப்பட்டிருந்த T56 துப்பாக்கி காணாமல் போயுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. துப்பாக்கி காணாமல் போனமை தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

# பாராளுமன்றத்தில் நேரத்தை வீணடிக்காது மக்களுக்கு கணிசமான பணியாற்ற வேண்டும்

*ராஜகிரிய குறூப் நிருபர்*



பாராளுமன்றத்தில் நேரங்களை வீணடிக்காமல் வாக்களித்த மக்களுக்கு காத்திரமான பணியாற்ற சிறுபான்மை கட்சிகள் தயாராக வேண்டும் என, தேசிய காங்கிரஸ் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ஏ.எல்.எம். அதாஉல்லா தெரிவித்தார். அக்கரைப்பற்றில் அண்மையில் நடந்த நிகழ்வொன்றில் சபாநாயகருக்கு எதிராக கொண்டுவரப்பட்ட நம்பிக்கையில்லா பிரேரணை குறித்து உரையாற்றுகையிலே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

பொருளாதார நெருக்கடியால் ஏற்பட்ட மக்கள் கிளர்ச்சியின்போது முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய நாட்டை விட்டு தப்பியோடினார். அந்நேரத்தில் பாராளுமன்றத்தின் பொறுப்பான தலைவராக செயற்பட்டவர் சபாநாயகர் மஹிந்தயாப்பா அபேவர்தன. பாராளுமன்ற மூடாக ஜனாதிபதியை தெரிவு செய்து, புதிய பிரதமர் பதவியேற்க வழி வகுத்து அரச நிர்வாகத்தை முறையாக வழிநடத்தியவர் சபாநாயகர்.

இவருக்கு எதிராக எதிர்க் கட்சிகள் நம்பிக்கையில்லா தீர்மானம் கொண்டு வந்தமை அரசியல் கேலிக்கூத்தே. இதனால், பிரேரணை தோற்கடிக்கப்பட்டது. எடுத்தற்கெல்லாம் பிரேரணை, வாக்களிப்பு, கை உயர்த்தல் என பாராளுமன்றத்தில் நேரத்தை வீணடிக்கின்றனர். சட்டத்தை திருத்த வேண்டுமானால் அல்லது மாற்ற வேண்டுமானால் ஒன்று கூடி கலந்து பேசலாம். வாக்களித்த மக்களுக்கு உருப்படியாக எதையாவது செய்வது பற்றி சிறுபான்மை கட்சிகளின் பிரதிநிதிகள் சிந்திப்பது அவசியம்.

தலைமைகள் அரசுக்கு எதிராக வாக்களிப்பது, எம்பிக்கள் இரண்டும்கெட்டான் நிலைக்காகி சபை அமர்வில் பங்கேற்காது வைத்தியசாலைகளில் ஒய்வெடுப்பது போன்ற நிலைமைகள் ஆரோக்கிய அரசியலாக அமையாது. மக்களின் வீதாசாரங்களுக்கு ஏற்ப காணிகளை மற்றும் இயற்கை வளங்களை பங்கீடு செய்தால் நாட்டிலுள்ள இனப்பிரச்சினை தீர்ந்து விடும் என்றும் தேசிய காங்கிரஸ் தலைவர் குறிப்பிட்டார்.

## பகிரங்க ஏலவிற்பனை

மல்டி பினான்ஸ் பிஎல்சி நிறுவனத்தில் வைத்து தங்கக் கடன் பெற்று, உரிய காலத்தினுள் மீட்கப்படாத தங்க நகைகள் பின்வரும் இடங்களில் கீழ்க்காணும் திகதிகளில் காலை 10.00 மணிக்கு பகிரங்க ஏலத்தில் விற்கப்படும்.

| ஏலவிற்பனைத் திகதி | முகவரி |
|---|---|
| 08/15/22/29 மே 2024 | இல. 56, சந்தை இடம், அனுராதபுரம். |
| 08/15/22/29 மே 2024 | இல. 16, கோர்ட் ரோடு, கம்பஹா. |
| 03/07/14/21 மே 2024 | இல. 134, அநாகரிக தர்மபால மாவத்தை, மாத்தறை. |
| 03/07/14/21 மே 2024 | இல. 72, சிமன்ஸ் வீதி, மருதானை, கொழும்பு 10. |
| 09/16/27/30 மே 2024 | இல. 74/76, கண்டி வீதி, குருநாகல். |
| 09/16/27/30 மே 2024 | இல. 865, ஸ்ரீமாவோ பண்டாரநாயக்க மாவத்தை, கண்டி. |
| 02/06/13/20 மே 2024 | இல. 207, பிரதான வீதி, இரத்தினபுரி |

மல்டி பினான்ஸ் பிஎல்சி எந்த அறிவிப்பும் இல்லாமல் ஏலத்தை ரத்து செய்வதற்கும் ஒத்திவைப்பதற்கும் உரிமையை கொண்டுள்ளது.

MULTI FINANCE

இல.275/75, பேராசிரியர். ஸ்டான்லி விஜேசுந்தர மாவத்தை, கொழும்பு 07.

## இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம்

### விண்ணப்பப்படிவம் கோரும் காலத்தை நீடித்தல்

**விநியோகிப்பவருக்கு சொந்தமான பகுதியில் புதிய எரிபொருள் நிரப்பு நிலையங்களை நிர்மாணித்து நடத்திச் செல்வதற்காக அனுமதியைப் பெற்றுக் கொள்வதற்கு கவனத்திற் கொள்ளும் முகமாக விண்ணப்பத்தை கோரல்.**

இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் எரிபொருள் வலையமைப்பை விரிவுபடுத்தி மிகவும் செயற்பாடுள்ள பாவனையாளர் சேவையொன்றை இந்நாட்டு மக்களுக்கு வழங்கும் முகமாக வர்த்தக ரீதியில் முக்கியமான மூலோபாய இடங்களை இலக்காகக் கொண்டு விநியோகத்தருக்கு சொந்தமான பகுதியில் எரிபொருள் நிரப்பு நிலையங்களை நிர்மாணித்து நடத்திச் செல்லல் சம்பந்தமாக கோரப்படும் விண்ணப்பங்களை ஏற்றுக் கொள்ளும் இறுதித் திகதி 2024.03.26 என 2024.03.06ம் திகதிய பத்திரிகைகள் மூலம் அறிவிக்கப்பட்டு இருந்தது. அந்தக் காலத்தை 2024.04.10 வரை நீடிப்பதற்கு எம்மால் தீர்மானிக்கப்பட்டுள்ளது என இத்தால் அறிவித்துக் கொள்வதுடன் அவ் அறிவித்தலில் உள்ளடக்கப்பட்டுள்ள ஏனைய விடங்கள் மாற்றமின்றி இருக்கும் என்பதை கவனிக்கவும்.

அதன் பிரகாரம் குறித்த சரியாகப் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை 2024.04.10ம் திகதிக்கு முன்பு அறிவித்தல் பத்திரங்களில் குறிப்பிடப்படும் அடிப்படை ஆவணங்களுடன் உத்தேச வளாகம் அமைந்துள்ள மாகாணத்திற்கு சொந்தமான இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் பிரதேச முகாமையாளர்/ தலைமையகத்தின் சந்தைப்படுத்தல் பணியகத்திற்கு பதிவுத் தபாலில் அல்லது கையோடு கொண்டுவந்து ஒப்படைக்க முடியும் என்பதை இத்தால் அறிவித்துக் கொள்கிறோம்.

மேலதிக விபரங்களுக்கு இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் இணைய தளம் (www.ceypetco.gov.lk) இற்கு பிரவேசியுங்கள்.

2024.03.27

**இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம்,**
**இல. 609, டொக்டர் டெனிஸ்டர் டி சில்வா மாவத்த, கொழும்பு - 09**
**www.ceypetco.gov.lk**

## வலய பாடசாலைகளுக்கு புதிய கல்விப் பணிப்பாளர் விஜயம்



*ஏறாவூர் நிருபர்*

மட்டக்களப்பு மத்தி கல்வி வலயத்துக்கு புதிதாக நியமிக்கப்பட்டுள்ள பணிப்பாளர் எம்.எம். ஜவாத் அந்த வலயத்திலுள்ள அனைத்து பாடசாலைகளுக்கும் நேரடியாக விஜயம் செய்து அங்குள்ள நிலைமைகளை ஆராய்ந்தார்.

மட்டக்களப்பு மத்தி கல்வி வலயத்தில் காத்தான்குடி, ஏறாவூர் மற்றும் கோறளைப்பற்று மேற்கு ஆகிய கோட்டங்களில் 78 முஸ்லிம் பாடசாலைகள் உள்ளன.

பாடசாலைத் தரிசிப்புத் திட்டத்தின் கீழ் முதற்கட்டமாக ஏறாவூர் கோட்டத்திலுள்ள 18 பாடசாலைகளுக்கும் வலயக்கல்விப் பணிப்பாளர் ஜவாத் விஜயம் செய்து அதிபர் மற்றும் ஆசிரியர்களையும் சந்தித்து கலந்துரையாடினார். பாடசாலைகளின் குறைநிறைகள் குறித்தும் கேட்டறிந்தார்.

பிரதிக்கல்விப் பணிப்பாளர் எம்.ஜே. றிப்கா மற்றும் தொழில்நுட்ப உத்தியோகத்தர் முகமட் நியாஸ் ஆகியோரும் இவ் விஜயத்தில் கலந்துகொண்டனர்.

காலை 8 மணிமுதல் பிற்பகல் 2 மணி வரையிலான காலப்பகுதியில் 18 பாடசாலைகளுக்கு சென்று பார்வையிட்டார். புதிய பணிப்பாளரின் இவ்விஜயம் ஆக்கபூர்வமாக அமைந்ததுடன் முன்மாதிரியானதாகவும் இருந்ததாக பாடசாலை அதிபர்கள் கருத்துத் தெரிவித்தனர்.

முஸ்லிம் பாடசாலை மாணவர்களுக்கு இந்த மாதத்தில் புனித நோன்பிற்காக விடுமுறையளிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

ட - 24

## 1964ம் ஆண்டின் காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460) 33ம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது இல: VADA/N/L/L.C/176.11/2011
காணி அமைச்சின் இல: 4-3/15/2013/VE/378

கீழ்க்காணும் அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள காணியை ஒரு பகிரங்க தேவைக்கு அரசாங்கம் எடுக்க உத்தேசித்திருக்கிறது. மேலதிக விபரங்களுக்கு பகுதி - III இல் 2023ம் ஆண்டு டிசம்பர் மாதம் 22ம் திகதி பிரசுரிக்கப்பட்ட இலங்கை சனநாயக சோசலிச குடியரசு வர்த்தமானி பத்திரிகை (அதிவிஷேடமானது) இலக்கம் 2363/63 பார்க்கவும்.

**அட்டவணை**

| | |
|---|---|
| மாவட்டம் | : யாழ்ப்பாணம் |
| பிரதேச செயலாளர் பிரிவு | : வடமராட்சி வடக்கு |
| கிராம அலுவலர் பிரிவு | : கற்கோவளம் ஜே/406 |
| கிராமத்தின் பெயர் | : ஆனைவிழுந்தான் |
| ஆரம்ப வரைபட இலக்கம் | : பிபியா 2783, யா/ விடிஎன்/2019/203 |
| காணித்துண்டு இலக்கங்கள் | : 01, 02, 03, சீ, ஜீ, ஏச் |
| வழக்கு இலக்கங்கள் | : L/19953/23, L/19958/23, L/19954/23, L/19955/23, L/19957/23, L/19958/23 |

**சி.சத்தியசீலன்**
**பிரதேச செயலாளர்**
**வடமராட்சி வடக்கு.**

**பிரதேச செயலகம்,**
**வடமராட்சி வடக்கு**
**பருத்தித்துறை.**
**25.03.2024**

## கேள்வி அறிவித்தல்

**இலங்கை ஜனநாயக சோஷலிசக் குடியரசின்**
**நீர் வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சு**
**தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபை**
**யாழ்ப்பாணம் - கிளிநொச்சி நீர் வழங்கல் மற்றும் சுகாதாரத் திட்டம்**

| | |
|---|---|
| **திகதி** | : 27.03.2024 |
| **கடன் இலக்கம் மற்றும் தலைப்பு** | : 3603 - SRI யாழ்ப்பாணம் - கிளிநொச்சி நீர் வழங்கல் மற்றும் சுகாதாரத் திட்டம் |
| **ஒப்பந்த இலக்கம்** | :- PD/ JKWSSP/ 2023/BOATS/01/R மற்றும் தலைப்பு வடமராட்சி கிழக்கு பிரதேச செயலகத்திற்குட்பட்ட தாளையடி மீனவர்களுக்கான 83 படகுகள் வழங்குதல் மற்றும் விநியோகித்தல் |

**கேள்வி மனு சமர்ப்பிப்பதற்கான முடிவுத் திகதி :-** 24.04.2024

இலங்கை ஜனநாயக சோஷலிச குடியரசு ஆசிய அபிவிருத்தி வங்கியிடமிருந்து (ADB) யாழ்ப்பாணம் - கிளிநொச்சி நீர் வழங்கல் மற்றும் சுகாதாரத் திட்டத்திற்கான நிதியுதவியைப் பெற்றுள்ளதுடன் மேற்கூறிய ஒப்பந்தத்தின் கீழ் தகுதியான கொடுப்பனவுகளை ஈடுசெய்ய நிதியுதவியின் ஒரு பகுதியைப் பயன்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

தலைவர் திட்ட பெறுகைக் குழு தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபை சார்பாக (தொழில் வழங்குநர்) இப்போது முத்திரையிடப்பட்ட கேள்வி மனுக்களை தாளையடி வடமராட்சி கிழக்கு பிரதேச செயலகத்திற்குட்பட்ட மீனவர்களுக்கான 83 படகுகள் வழங்குதல் மற்றும் விநியோகிப்பதற்கு அழைப்பு விடுக்கப்படுகிறது (பொருட்கள்).

1. **தேசிய பெறுகைப் போட்டி ADB யின் கீழ் ஒற்றை, கட்டம் ஒன்று** நடாத்தப்படும் ஒரு உறை கேள்வி மனு நடைமுறை மற்றும் கேள்வி ஆவணத்தில் விவரிக்கப்பட்டுள்ளதன் பிரகாரம் தகுதியுள்ள நாடுகளிலிருந்து அனைத்து கேள்விதாரர்களுக்கும் திறந்திருக்கும்.

   பின்வரும் முக்கிய தகுதிகளுடன் தகுதியான கேள்விதாரர்கள் மட்டுமே இந்த கேள்வியில் பங்கேற்க வேண்டும்.

   - கேள்விதாரர் பெறப்பட்ட மொத்த சான்றளிக்கப்பட்ட கொடுப்பனவுகளாக கணக்கிடப்பட்ட குறைந்தபட்ச சராசரி ஆண்டு விற்று முதல் LKR அறுபது(60) மில்லியன் கடந்த மூன்று (03) ஆண்டுகளுக்குள் ஒப்பந்தங்கள் நடைபெற்று வருகின்றன அல்லது முடிக்கப்பட்டன.
   - 6வது பிரிவின் பிரகாரம் விநியோகித்தல் விடயப்பரப்பின் தன்மையினைக்கொண்டு கடந்த 10 வருடங்களுக்குள் பிரதான விநியோகத்தராக சிறந்த முறையில் நிறைவு செய்யதிருக்கக்கூடிய மற்றும் குறைந்தபட்சம் LKR ஐந்து (05) மில்லியனைக்கொண்ட ஒரு ஒப்பந்தத்திலாவது பங்கேற்றிருத்தல்.
   - தணிக்கை செய்யப்பட்ட நிதிநிலை அறிக்கைகளை சமர்ப்பித்தல் அல்லது கேள்விதாரர் நாட்டுச் சட்டத்தின் படி தேவைப்படாவிட்டால் கேள்விதாரரின் நிதி நிலையின் தற்போதைய உறுதியை நிரூபிக்க கடந்த மூன்று (03) ஆண்டுகளாக தொழில் வழங்குநர் ஏற்றுக்கொள்ளக்கூடிய பிற நிதிநிலை அறிக்கைகள்.

2. ஆர்வமுள்ள கேள்விதாரர் கேள்வி ஆவணத்தை இலவசமாக பரிசோதித்து மேலதிக தகவல்களை பெற பழைய பூங்காவீதி, சுண்டுக்குளி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள யாழ்ப்பாணம் கிளிநொச்சி நீர்வழங்கல் மற்றும் சுகாதாரத் திட்டம் (JKWSSP) NWSDB திட்டப் பணிப்பாளர் அலுவலகத்திலும் தொலைபேசி 021–2220256 அல்லது தொலைநகல் இலக்கம் 021-2220257 (மின்னஞ்சல்-pdjkwssp@gmail.com) மற்றும் தலைமை காரியாலயம் இரத்மலானையிலும் பெற்றுக் கொள்ளலாம்.
3. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் வணிகக் கடிதத் தலைப்பில் எழுதப்பட்ட விண்ணப்பத்தை பழைய பூங்கா வீதி, சுண்டுக்குளி, யாழ்ப்பாணம் (JKWSSP) NWSDB திட்டப் பணிப்பாளர் காரியாலயத்தில் சாதாரண வேலை நாட்களில் மு.ப 09.00 மணி முதல் பி.ப 15.00 மணி வரை சமர்ப்பித்து ஆங்கில மொழியில் உள்ள கேள்வி ஆவணங்களின் முழுமையான தொகுப்பை பெற்றுக்கொள்ள முடியும். கேள்வி ஆவணத்தை மீளப் பெறப்படாத பெறுகைக் கட்டணமாக LKR 12,500.00 வுடன் VAT ஐயும் சேர்த்து பணமாகவோ அல்லது வங்கி காசோலையாகவோ செலுத்த முடியும்.
4. 01.04.2024 அன்று மு.ப 10.00 மணிக்கு திட்டப் பணிப்பாளர் (JKWSSP) அலுவலகம் NWSDB, பழைய பூங்கா வீதி, சுண்டுக்குளி, யாழ்ப்பாணத்தில் கேள்விக்கு முன்னைய கூட்டம் இடம்பெறும்.
5. கேள்விப்பத்திரங்கள் 24.04.2024 அன்று மு.ப 10.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் NWSDB பழைய பூங்கா வீதி, சுண்டுக்குளி, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு கேள்விப் பாதுகாப்பு உத்தரவாத 520,000.00 ரூபாய் பெறுமதியான பிரதியுடன் மற்றும் கேள்வியில் குறிப்பிடப்பட்டுள்ள ஏனைய விபரங்களுடன் வழங்குதல் (தரவுத்தாள்).
6. யாழ்ப்பாணம் - கிளிநொச்சி நீர் வழங்கல் மற்றும் சுகாதாரத்திட்டம் (JKWSSP) கேள்வி தயார்படுத்தல், கேள்விக்கு முன்னைய கூட்டம் மற்றும் பெறுகை கையளித்தல் தொடர்பில் ஏற்படும் எவ்வித செலவினங்களுக்கும் பொறுப்பில்லை.

**தவிசாளர்,**
**திட்ட பெறுகைக் குழு (PPC)**
**யாழ்ப்பாணம் - கிளிநொச்சி நீர் வழங்கல் மற்றும் சுகாதாரத் திட்டம்**

## இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசு

### போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு/ இலங்கை புகையிரத சேவை

**புகையிரத செயற்திறனை மேம்படுத்தும் செயற்றிட்டம் (REIP)**

### தேசிய ஆலோசனை சேவை ஒன்றை பெறுவதற்கு ஆர்வ வெளிப்பாட்டுக்கான அழைப்பு

**ஆர்வ வெளிப்பாட்டை ஒப்படைக்கும் இறுதித் திகதி: 2024 ஏப்ரல் 04 (இலங்கையின் நிலையான நேரம் பி.ப. 4.00)**

1. இலங்கை அரசாங்கம், புகையிரத செயற்திறனை மேம்படுத்தும் செயற்றிட்டத்திற்கான (REIP) நிதி வசதியை ஆசிய அபிவிருத்தி வங்கியில் (ADB) இருந்து பெற்றிருப்பதோடு அந்த நிதியின் பகுதி ஒன்றை பயன்படுத்தி புகையிரத செயற்திறனை மேம்படுத்தும் செயற்பாட்டுக்காக கீழ் குறிப்பிடப்பட்ட தேசிய அளவிலான ஆலோசகர்களின் (ஆலோசனை) சேவையை பெறுவதற்கு எதிர்பார்க்கப்படுகிறது. இது போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு மற்றும் இலங்கை புகையிரத சேவையுடன் செயற்படுத்தப்படும் திட்டமாகும்.

   புகையிரத சேவையின் தற்போது இடம்பெற்று வரும் மேம்பாடுகளின் பிரதிபலனை அதிகரிப்பதற்கு மற்றும் உள்ளடக்க வேண்டி உள்ள சில துறைகளை அடையாளம் காண்பதற்கும், REIP இன் கீழ் ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதி உதவி செயற்படும் சந்தர்ப்பத்தில், இலங்கை புகையிரத சேவையை நவீனப்படுத்துவதை உறுதி செய்வதற்கு மற்றும் எதிர்கால அபிவிருத்திக்காகவும் அந்த உள்ளடக்கப்படாத பிரிவுகளின் மேம்பாட்டுக்கு தேவையான கீழுள்ள ஆலோசனை தேவைகளுக்கு உங்களது விரைவான அவதானம் எதிர்பார்க்கப்படுகிறது.

| No. | Individual Consultant | Period in months |
|---|---|---|
| REIP/ADB/ IC/5 | National Consultant to Study the Benefits and Potential Future Opportunities from REIP to the Railway Sector | 6 |
| REIP/ADB/ IC/6 | National Consultant for Digital Transformation and Return on Investment (ROI) | 9 |
| REIP/ADB/ IC/7 | National Consultant for Organizational Change and Stakeholder Engagement – Sri Lanka Railways. | 9 |
| REIP/ADB/ IC/8 | National Consultant for Capacity Building for Sri Lanka German Railway Technical Training Center (SLGRTTC). | 9 |

2. தேவையான விபரக் குறிப்பினை (TOR) ஆசிய அபிவிருத்தி வங்கியின் இணையதளத்தில் (http://csrn.adb.org) தரப்பட்டுள்ளது.
3. திட்ட இடம் இலங்கையின் கொழும்பு நகராகும். தகுதியை பூர்த்தி செய்திருக்கும் ஆலோசகர்கள் இங்கு குறிப்பிடப்பட்டுள்ள சேவைகளை வழங்குவதற்கு ஆர்வத்தை வெளிப்படுத்துமாறு இத்தால் அழைப்பு விடுக்கப்படுகிறது. ஆசிய அபிவிருத்தி வங்கியின் இணையதளம் ஊடாக அல்லது முத்திரை இட்டு பிரதிகளை கீழுள்ள முகவரிக்கு அனுப்புவதன் மூலம் ஆர்வ வெளிப்பாட்டாளர்கள் தமது ஆர்வ வெளிப்பாட்டை வழங்க முடியும்.
4. இணையதளத்தின் மூலம் ஆர்வ வெளிப்பாட்டுக்கு (1.) ஆசிய அபிவிருத்தி வங்கியின் இணையதளத்திற்கு (http://www.adb.org) பிரவேசித்து அதில் உள்ள Consultant Management System இல் பதிவு செய்யுங்கள். ADB, About us, Consulting Service, Consultant Management System (2.) (http://csrn.adb.org) இற்கு பிரவேசிக்கவும். (3.) "Sri Lanka" இற்கு பிரவேசிக்கவும், (4.) திட்டத்தின் பெயரை தேர்வு செய்யுங்கள் "View CSRN" மெனுவுக்கு பிரவேசிக்கவும். (5.) "Express Interest" மெனுவுக்கு பிரவேசிக்கவும். (6.) அறிவுறுத்தல்களை பின்பற்றுங்கள்.

   **முக்கியம் -** தேவையான அனைத்து விபரங்களையும் சரியான முறையில் பூர்த்தி செய்தல் வேண்டும்.
5. இணையதளத்தின் மூலம் மேற்கொள்ளப்படுகின்ற ஆர்வ வெளிப்படுத்தல் அல்லது முத்திரை பொறிக்கப்பட்ட பிரதிகளை 2024 ஏப்ரல் 04 ஆம் திகதி (இலங்கையின் நிலையான நேரம் பி.ப. 4.00க்கு) அல்லது அதற்கு முன்னர் கிடைக்குமாறு கீழுள்ள முகவரிக்கு அனுப்ப வேண்டும். ஆசிய அபிவிருத்தி வங்கியின் வழிகாட்டலில் ஆலோசனை தகைமை ஒழுங்குமுறைக்கு அமைய தேசிய மட்டத்திலான ஆலோசகர்கள் தேர்வு செய்யப்படுவர்.

**திட்ட பணிப்பாளர்**
**கொழும்பு புறநகர் புகையிரத கருத்திட்டம்**
**இல. 217, கொடா வீதி, கொழும்பு 08.**
**இலங்கை**

**தொலைபேசி: (94) 112056240 - 41**
**தொலைநகல்: (94) 112674354**
**மின்னஞ்சல் முகவரி: pd@csrp.lk**
**இணையதளம்: www.csrp.lk**

மேலதிக விபரங்களை மேல் குறிப்பிடப்பட்ட முகவரியில் மற்றும் ஆசிய அபிவிருத்தி வங்கியின் இணையதளத்திற்கு (www.adb.org) பிரவேசித்து பெற்றுக்கொள்ள முடியும்.

திகதி: 2024.03.27

இலங்கை சனநாயக சோசலிச குடியரசு
பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு
ஆட்களை பதிவு செய்யும் திணைக்களம்
(e-NIC செயற்திட்டம்)

# விலைமனுக்கோரல் (IFB)

## 402 எண்ணிக்கையிலான நேரலை ஊடுகதிர் இயந்திரங்களை (Live Scanners) வழங்கல், விநியோகித்தல் நிறுவல் மற்றும் செயற்படுத்தல்

## IFB No: DRP/e-NIC/PRO/2024/07

1. e-NIC செயற்திட்டம், ஆட்களை பதிவு செய்யும் திணைக்களம், "B" பகுதி, 10 ஆம் மாடி, ஸ்ரீ சுபூதிபுர வீதி, சுஹுருபாய, பத்தரமுல்லை சார்பாக, செயற்திட்ட கொள்முதல் குழுவின் தலைவரினால், ஆட்களை பதிவு செய்யும் திணைக்களத்திற்கு **நானூற்று இரண்டு (402) எண்ணிக்கையிலான** நேரலை ஊடுகதிர இயந்திரங்களை வழங்கல், விநியோகித்தல், நிறுவல் மற்றும் செயற்படுத்தல் சேவைக்காக தகுதியான மனுதாரர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட மனுக்கள் கோரப்படுகின்றது.

2. இவ் வழங்கலானது (மனுகோரல்கள்) தேசிய மனு கோரல் போட்டி முறைக்கமைய நடைபெறும்.

3. இதற்காக ஆர்வம் காட்டும் மனுதாரர்கள் **காரியாலய நேரங்களில் மு.ப 09.00** மணி தொடக்கம் **பி.ப 03.00 மணி வரை சிரேஷ்ட கொள்முதல் அதிகாரி, e-NIC செயற்திட்டம், ஆட்களை பதிவு செய்யும் திணைக்களம்,** (தொலைபேசி: **011-2862174)** மூலம் மேலதிக விபரங்களை பெற்றுக்கொள்ள முடியும். மேலும் e-NIC செயற்திட்டம், ஆட்களை பதிவு செய்யும் திணைக்களம், "B" பகுதி, 10 ஆம் மாடி, ஸ்ரீ சுபூதிபுர வீதி, சுஹுருபாய, பத்தரமுல்லையில் அமைந்துள்ள ஆட்களை பதிவு செய்யும் திணைக்களத்தில் **2024.03.27 ஆம் திகதி** முதல் **2024.04.24 ஆம் திகதி** வரை எவ்வித கட்டணச் செலுத்துகையும் இன்றி பரீட்சித்துக்கொள்ள முடியும்.

4. ஒப்பந்தத்திற்கு தகுதிபெற பின்வரும் குறைந்தபட்ச தகுதிகளை மனுதாரர் பூர்த்தி செய்ய வேண்டியதுடன், கூடுதல் விவரங்கள் மனு ஆவணத்தில் வழங்கப்பட்டுள்ளன.

   a. மனுதாரர், ஒரு உள்ளூர் ஏலதாரராக இருந்தால், **5 ஆண்டுகளுக்கும் மேலாக இலங்கையில் பதிவுசெய்யப்பட்ட நிறுவனமாக இருக்க வேண்டும்.** ஒரு கூட்டு முயற்சியில் பங்குதாரராக ஒரு வெளிநாட்டு நிறுவனம் மனுக்களை சமர்ப்பிக்கலாம் **(இனிவரும் காலங்களில் "JV" என குறிப்பிடப்படும்), இதில் "மனுதாரர்" மொத்தமாக "JV" (அது "முன்னணி மனுதாரர்")** ஆகும். ஆனால் மனுக்கள் உள்ளூர் பங்குதார்களினால் கையெழுத்திடப்பட வேண்டும். 5 வருடங்களுக்கும் மேலாக இலங்கையில் வணிகப் பதிவைக் கொண்டிருக்க வேண்டும். மனுதாரர் ஒரு உள்ளூர் நிறுவனமாக இருந்தாலும் சரி அல்லது **"JV"** இன் முன்னணி மனுதாரரா என்பதைப் பொருட்படுத்தாமல் இந்த கொள்முதலுக்கான பதிவு செய்யப்பட்ட **உரிமம் பறிமாற்ற செயலுரிமை பெற்றவரால் (POA)** அங்கீகரிக்கப்படும் பணிப்பாளர்கள் குழுவால் மேற்கொள்ளப்பட்ட தீர்மானத்தின் அடிப்படையில் விலைமனுக்கோரலில் கையெழுத்திடும் நபருக்கு அங்கீகாரம் வழங்கப்படும்.

   b. மனுதாரர் அல்லது அனைத்து மனுதாரர் "JV" யில் இணைந்த மனுதாரர் **ISO 9001:2015 (தர மேலாண்மை)** சான்றளிக்கப்பட்டவராக இருக்க வேண்டும்.

   c. இந்த கொள்முதலுக்கான மனுக்கோரலில் மனு எடுத்தவர் அல்லது "JV" யில் இணைந்த மனுதாரர் **ISO 27001:2022 (தகவல் பாதுகாப்பு முகாமைத்துவ அமைப்புகள்)** சான்றளிக்கப்பட்டவராக இருக்க வேண்டும்.

   d. இந்த கொள்முதலுக்கான மனுக்கோரலில் மனு எடுத்தவர் அல்லது "JV" யில் இணைந்த மனுதாரர் உற்பத்தியாளர் இல்லையென்றால், இந்த கொள்முதலுக்கான மனுக்கோரலினை சமர்ப்பிக்கும்போது 1987 **ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க பொது ஒப்பந்தச் சட்டத்தின் கீழ்** பதிவு செய்யப்பட்டிருக்க வேண்டும்.

   e. இந்த கொள்முதலுக்கான மனுக்கோரலில் மனு எடுத்தவர் அல்லது "JV" அல்லது அனைத்து உறுப்பினர்களும் கடந்த ஐந்து (5) ஆண்டுகளாக **(2019-2023)** இந்த ஒப்பந்தத்தின் பொருட்கள் மற்றும் சேவைகளின் தன்மையின்படி வணிகத்தில் இருந்திருக்க வேண்டும்.

   f. உபகரணங்கள் மனுதாரர் அல்லது "JV" இணைந்த மனுதாரரால் தயாரிக்கப்படாதது எனில் இந்த மனு ஆவணத்தில் வழங்கப்பட்ட வடிவம் / அச்சுருவைப் பயன்படுத்தியமைக்கான உற்பத்தியாளரின் அங்கீகார கடிதங்கள் கண்டிப்பாக மனுவுடன் வழங்கப்பட வேண்டும்.

   g. மனுதாரர் (தனி மனுதாரர் எனின்) அல்லது அனைத்து "JV" இணைந்த மனுதாரரும் இந்த கொள்முதலுக்கான குறைந்தபட்சம் **LKR 300** மில்லியன் அல்லது அதற்கு மேல் இருத்தல் வேண்டும், ஒவ்வொரு "JV" பங்குதாரருக்கும் கடந்த **ஐந்து (05) ஆண்டு காலத்திற்குள் (2018/19 – 2022/23).** குறைந்தபட்சம் **(150 மில்லியன்)** இருத்தல் வேண்டும்.

   h. இந்த கொள்முதலுக்கான மனுக்கோரலில் மனு எடுத்தவர் அல்லது "JV" யில் இணைந்த மனுதாரர் குறைந்தபட்சம் **(200 மில்லியன்) நிகர திரவ சொத்துக்கள்** தற்போதைய சொத்துக்கள் - இருப்புநிலை - நடப்பு பொறுப்புகள்) அல்லது இந்த திட்டத்திற்கான **கடன் வசதிகளை** வழங்கக் கூடியவாறு இருத்தல் வேண்டும். அல்லது இந்த கொள்முதலுக்கான ஒவ்வொரு "JV" இணைந்த மனுதாரருக்குமான கடன் சலுகைகள் குறைந்தபட்சம் **(100 மில்லியன்) ஆகும்.**

   i. இந்த கொள்முதலுக்கான மனுக்கோரலில் மனு எடுத்தவர் அல்லது "JV" யில் இணைந்த மனுதாரர் அல்லது அனைத்து உறுப்பினர்களும் கடந்த **ஐந்து (05) ஆண்டுகளாக (2018/19-2022/23)** நிறுவனத்தின் தணிக்கை செய்யப்பட்ட **நிதிநிலை அறிக்கைகளின்** சான்றளிக்கப்பட்ட நகல்களை சமர்ப்பிக்க வேண்டும்.

   j. இந்த கொள்முதலுக்கான மனுக்கோரலில் மனு எடுத்தவர் அல்லது "JV" யில் முன்னணி மனுதாரர் நிறுவல், பராமரிப்பு மற்றும் துணை சேவைகளுக்கான **திறமையான தொழில்முறை தொழில்நுட்ப ஊழியர்களைக்** கொண்டிருக்க வேண்டும்.

   k. இந்த கொள்முதலுக்கான மனுக்கோரலில் மனு எடுத்தவர் அல்லது "JV" யில் முன்னணி மனுதாரர் **DRP அலகுகளுக்கு நாடு முழுவதும் அல்லது பெருநர் கோரிய எந்த இடத்திற்கும் தேவையான தொடர்ச்சியான சேவைகளை (24 மணிநேரம் மற்றும் 365 நாட்கள்) வழங்க மனுதாரர் ஒரு கிளை வலையமைப்பின் மூலம் செயற்படும் திறனைக் கொண்டிருக்க வேண்டும்.**

   l. கடந்த **பத்து (10) ஆண்டுகளில்** (2014-2023) மனுதாரர் அல்லது மனுதாரர் சம்பந்தப்பட்ட தரப்பினர்கள், எதேனும் வழக்குகள் தொடர்பான தகவல்கள் இருப்பின் அவற்றை முன்வைக்க வேண்டும்.

   m. **கடந்த (10) பத்து ஆண்டுகளில்** (2014-2023) மனுதாரர் அல்லது அதன் துணை நிறுவனங்கள் அல்லது இணைந்த நிறுவனங்கள் எந்தவொரு அரசாங்க நிறுவனத்தாலும் அபகார்த்தியாளர் பட்டியலில் இருத்தல் கூடாது.

5. இதற்காக ஆர்வம் காட்டும் மனுதாரர்கள் **2024.03.26** ஆம் திகதியிலிருந்து **2024.04.24** ஆம் திகதி வரை காரியாலய வேலை நாட்களில் **09.00** மணியிலிருந்து **03.00** மணி வரையான காலப்பகுதியினுள் மீளச்செலுத்தப்படாத **ரூபா.30,000.00** கட்டணத்தை செலுத்தி **செயற்திட்ட கணக்காளர், e-NIC செயற்திட்டம், ஆட்களை பதிவு செய்யும் திணைக்களம், "B" பகுதி, 10 ஆம் மாடி, ஸ்ரீ சுபூதிபுர வீதி, சுஹுருபாய, பத்தரமுல்லை** காரியாலயத்தில் எழுத்து மூல விண்ணப்பத்தை சமர்ப்பிப்பதன் மூலம் அச்சிடப்பட்ட ஆங்கில மொழியிலான விண்ணப்பத்தை பெற்றுக்கொள்ள முடியும். கட்டணத்தை காசாக செலுத்துதல் அவசியமாகும்.

6. பூரணப்படுத்தப்பட்ட மனு ஆவணங்களை **இரண்டு பிரதிகளுடன் (அசல் மற்றும் நகல்) 2024.04.25 ஆம் திகதி பி.ப.2.00 மணிக்கு முன்** பந்தி 3 இல் குறிப்பிடப்பட்டுள்ள விலாசத்திற்கு கிடைக்கப்பெறுமாறு மனுக்களை அனுப்ப வேண்டும். அல்லது **e-NIC செயற்திட்டம், ஆட்களை பதிவு செய்யும் திணைக்களம், "B" பகுதி, 10 ஆம் மாடி, ஸ்ரீ சுபூதிபுர வீதி, சுஹுருபாய, பத்தரமுல்லை** எனும் முகவரியில் மனுக்களை சேகரிப்பதற்காக வைக்கப்பட்டுள்ள பெட்டியில் இட வேண்டும். மனுக்கள் **91 நாட்கள்** வரை செல்லுபடியானதாக இருத்தல் வேண்டும். காலம் தாழ்த்தி கிடைக்கும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். மனு கோரல் நேரம் முடிவடைந்த பின்னர் உடனடியாக மனுக்கள் மனுதாரர்களால் நியமிக்கப்பட்ட பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.

7. **முன்மனுக் கூட்டம்** e-NIC செயற்திட்டம், "B" பகுதி, 10 ஆம் மாடி, ஸ்ரீ சுபூதிபுர வீதி, சுஹுருபாய, பத்தரமுல்லையில் அமைந்துள்ள ஆட்களை பதிவு செய்யும் திணைக்களத்தில் **2024.04.02 ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு** கூட்டம் நடைபெறும் அறையில் இடம்பெறும்.

8. ஒப்பந்தத்தின் பெயர் மற்றும் ஒப்பந்த இலக்கம் ஆகியவை தபாலுறையின் இடதுபக்க மேல் மூலையில் குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும். அனைத்து மனுக்களுடனும் இலங்கையில் செயல்படும் எந்தவொரு உரிமம் பெற்ற வணிக வங்கியினால் வழங்கப்படும் **ரூபா.2,000,000/- மனுக் காப்புறுதிப்பிணையுடன்** இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

தலைவர்,
திணைக்களத்தின் கொள்முதல் குழு,
**e-NIC செயற்திட்டம், ஆட்களை பதிவு செய்யும் திணைக்களம்,**
"B" பகுதி, 10 ஆம் மாடி, சுஹுருபாய, ஸ்ரீ சுபூதிபுர வீதி,
பத்தரமுல்லை.
**2024.03.27**

SELACINE

* Trusted Marketplace of Classified Advertisers...
SUNDAY OBSERVER adz it's what you want
Classified
Call :- 077 7 278 948/ 011 2 429 347 | 011 2 429 383 | 011 2 429 342/ 343
077 7 270 067 E-mail - classified@lakehouse.lk
WE ACCEPT
Green Light for Online Transfer
For 15 Words Rs. 800/-
(Additional each word Rs. 20/-)
Lake House Branch
Acc. No. 000000377

இலங்கை சனநாயக சோசலிச குடியரசு
பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு
ஆட்களை பதிவு செய்யும் திணைக்களம்
(e-NIC செயற்திட்டம்)

# விலைமனுக்கோரல் (IFB)

## ஆட்களை பதிவு செய்யும் திணைக்களத்தின் நுவரெலியா மாகாண அலுவலகத்திற்கான மின்பிறப்பாக்கிகள் 03 னை வழங்கல், விநியோகித்தல் நிறுவல் மற்றும் செயற்படுத்தல்

## IFB No: DRP/e-NIC/PRO/2024/03

1. e-NIC செயற்திட்டம், ஆட்களை பதிவு செய்யும் திணைக்களம், "B" பகுதி, 10 ஆம் மாடி, ஸ்ரீ சுபூதிபுர வீதி, சுஹுருபாய, பத்தரமுல்லை சார்பாக, செயற்திட்ட கொள்முதல் குழுவின் தலைவரினால், ஆட்களை பதிவு செய்யும் திணைக்களத்தில் நுவரெலியா மாகாண அலுவலகத்திற்கான மின் பிரப்பாக்கிகள் 03 னை வழங்கல், விநியோகித்தல் நிறுவல் மற்றும் செயற்படுத்தல் நிறுவலுக்கான தகுதியான மனுதாரர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட மனுக்கள் கோரப்படுகின்றது.

| விபரம் | அளவு | இடம் |
|---|---|---|
| 60 kVA முதன்மை விகிதம் மதிப்பிடப்பட்ட சத்தமில்லாத வகை டீசல் மின் பிறப்பாக்கி | 02 | DRP நுவரெலியா மாகாண அலுவலகம் |
| 40 kVA முதன்மை விகிதம் மதிப்பிடப்பட்ட ஒலி ஆதார கெனோப்பி வகை மின் பிறப்பாக்கி | 01 | |

2. இம் மனுகோரல்கள் தேசிய மனு கோரல் போட்டி முறைக்கமைய நடைபெறும்.(NCB)

